BILINGUAL FORTNIGHTLY
# ஒரு பேப்பர்
ORU PAPER
Paper - 01 Issue - 26 01 Friday July 2005 விற்பனைக்கல்ல

DIAMONDS PALACE
MITHUS
020 8683 1756
322-324 London Road,Croydon
020 8767 5333
78 Tooting High Street, London



The above picture was one of the exhibits at a post Tsunami Art Exhibition held on 18-06-05 drawn by Narmatha Navindran

## Reflections of a Caring Heart

OFF LICENSE ON LICENSE
HEALTH AND SAFETY AND FOOD HYGIENE
இதற்கான சான்றிதழ் பெற
தமிழில் மொழி பெயர்த்து
ஆங்கிலத்தில்
பரீட்சை
எழுதி ஒரே நாளில்
சான்றிதழ்
பெற எம்மை நாடுங்கள்.
தொடர்புகளுக்கு Mr Ravi
07782 223 005

G.K.GARDENNING
All type of Garden Work undertaken
* Turfing
* Grass Cutting
* Hedge Trimming
* Tree Care
* Weed Control
* Fencing
* Painting
Free Estimates
Weekly or Monthly Arrangement
Please Contact:
Nithy - 07981 476 099

FOR YOUR Weddings
Birthdays
or any other ceremonies
call us to make your day "cool" and satisfactory with our variety of food.
சொதி சம்பலுடன்
100 இடியப்பம் £12.00
SPICELAND
FOR THE ASIAN TASTE OF
SPICE CURRY
020 8667 1700
020 8239 1132
212 London Road Croydon

Workpermits4u.com
UK Immigration - Work Permits & Visas
- Work Permits & HSMP,Sole Rep Visa
- Permanent Residence, Leave to Remain
- Students, Working Holiday, Spouses
- Dependants, Domestic Workers
- UK Company formation for business immigration
020 7839 0389/4731, 07785 964126
Call Raj Ganguly, OISC registered,
37 Panton street, Piccadily circus, SW1Y
email: workpermits@workpermits4u.com
web: www: workpermits4u.com

MortgageLink
The National Mortgage Network
100% MORTGAGE – எந்த விதமான DEPOSIT
இல்லாமல் வீடு வாங்க வேண்டுமா?
HOME OWNERS - வீட்டு உரிமையாளர் கவனத்திற்கு, உங்கள் MORTGAGE
வட்டி வீதத்தை குறைத்து மாதாந்தம் பெரும் தொகை பணத்தை சேமிக்க வழிசெய்வோம்.
குறைந்த Deposit உடன் Leasehold/Freehold வர்த்தகஸ்தாபனங்கள்
வாங்க வேண்டுமா? SHOPS/OFF LICENCE/ CHICKEN SHOP
Mobile: 07930 62 65 85
020 8767 8487
125B MITCHAM ROAD TOOTING, LONDON SW17 9PE
YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED ON IT

Ranij Tailoring
Tel: 0208 687 6867 / 07704 696 485
36A Veals Mead,
Mitcham,
Surrey CR4 3SB

ஒரு பேப்பரில் ஒரு விளம்பரம்
இங்கிலாந்தில் இருக்கும் தர்ம ஸ்தாபனங்கள் பின்வருவன:
Amnesty International
Save the Children
Oxfam
Red Cross

C.B MOTORS
Tel. 020 8423 9984 Fax. 020 8423 9903

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

# futture homes

Mortgage Specialist



* Residential mortgages
* Remortgages
* Commercial Mortgages
* Secured Loans
* Life insurance
* Building Insurance
* Public Liability Insurance

Tel: 0845 126 0622
Fax: 0208 830 4111
E-mail: info@futturehomes.co.uk
Future Homes is regulated & authorised by the Financial Services Authority



# EasyFly Travels & Tours Ltd

The lowest fares to Worldwide destinations on major airlines

**LONDON - COLOMBO**

Special Family fares from Srilankan Airlines to Sri Lanka & India on request

Special Family offer get the child fare 50% discount

Ask for more details please call Disni or Michelle
And for reservation please

## Call: 0208 459 55 11

**Fares for Colombo Return ( LHR-CMB-LHR)**

| | |
|---|---|
| Srilankan Airlines | £470 + Taxes (Valid till 09th July) |
| Etihad Airways | £380 + Taxes (Valid till 15th July LGW/LHR) |
| Qatar Airways | £410 + Taxes (valid till 09th July) |
| Emirates | £470 + Taxes (Valid till 09th July) |

**Unbeatable Flight only offers**

**New York - Direct Flight from just £199**
**Toronto - from 205+Taxes**
**Amsterdam: from only £69 - from Heathrow**

SriLankan
Emirates
QATAR AIRWAYS القطرية
الاتحاد ETIHAD AIRWAYS

Sept Sale on ETIHAD AIRWAYS travel from September to November (London - Colombo)

**£330 + Taxes**

**Tel: 0208 459 5511**
**Fax: 020 830 4118**
**Email: info@easyflytravels.co.uk**
**Web: www.easyflytravels.co.uk**

**17A Walm Lane, Willesdon Green, London NW2 5SJ**



# அதிநவீன வசதிகளுடன் சொகுசு தொடர் மாடிக்கட்டடம் விற்பனைக்கு

## *Luxury Apartments in Wellewatte, Colombo*





- 3 Bedrooms & 2 Bathrooms
- 2 Bedrooms & 2 Bathrooms
- 1 Bedrooms & 1 Bathrooms
- Imported high quality fittings & glazed tiles for Bathrooms
- Hot water geyser
- Ground floor reserved car park
- Roof top garden
- A/C provision in all rooms
- Rust proof powder coated window
- Elevator to all floors
- Stand by generator
- Modern fire protection system
- Garbage shoot in every floor
- Intercom security system
- Mahogany cabinets Pantry with granite work top
- Provision for washing machine connection
- Telephone and television outlets
- Fully secured 8 feet parapet wall right around




*Provisix Limited - United Kingdom*
*458, Alexandra Avenue*
*Harrow, Middlesex, HA2 9TL,*
*United Kingdom*
*Tel : ++ 44 2088683646*
*Fax : ++ 44 2088683666*
*Mobile : ++ 44 7715323010*
*++44 7984558875*
*e-mail : provisix@provisix.com*

*Sri Lanka Office*
*Provisix International (Pvt) Ltd*
*No. 6, I.B.C. Road*
*Colombo 06, Sri Lanka*
*Tel : ++ 94 714528484*
*e-mail : m.somasundaram@provisix.com*



# ஓவியக் கண்காட்சி





கரோ தமிழ்ச் சமூக நிலையம், கனேடிய தமிழ் கலைக்கூடம், ஒரு பேப்பர் ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஒழுங்கு செய்திருந்த சிறுவர் ஓவியக் கண்காட்சி கடந்த 18ம் திகதி சனிக்கிழமை கரோ மகநகராட்சி மன்ற (Civic Centre) மண்டபத்தில் நடைபெற்றது. ஆழிப்பேரலை அனர்த்தங்களை சித்தரிக்கும் 200 க்கும் அதிகமான ஓவியங்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. இவ் ஓவியங்கள் இங்கிலாந்திலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களாலும் கனடா நாட்டில் வாழும் நமது தமிழ்ச் சிறுவர்களாலும வரையப்பட்டவை.

கண்காட்சியை கரோ மேயர் திருமதி. படி லின் அவர்கள் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். பிரதி மேயர் மேரி ஜோன் மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. தயா இடைக்காடர் மற்றும் தமிழ்பாடசாலைகளின் பிரதிநிதிகளும், தொண்டரமைப்புகளின் பிரதிநிதிகளும் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டனர்.

ஓவியங்களை ஒவ்வொன்றாக பார்வையிட்ட மேயர் லின், சிறுவர்களின் உணர்வுகள் இவ் ஓவியங்கள் மூலமாக வெளிவந்துள்ளதாக இவ் இளம் ஓவியர்களை வியந்து பாராட்டினார். வளர்ந்து வரும் ஓவியக் கலைஞர் செல்வி காயத்திரி உட்பட இளம் கலை ஆர்வலர் குழுவொன்று இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கனடாவிலிருந்து வந்திருந்தனர்.

நமது சிறுவர்கள் மிகுந்த சிரத்தையுடன் தாம் ஊடகங்கள் மூலம் பார்த்ததையும் கேட்டதையும் வைத்து தமது உணர்வுகளை கலந்து ஓவியங்கள் வாயிலாக வெளிப்படுத்தி இருந்திருந்தனர். இருப்பினும் இச்சிறுவர்களின் திறமையை பாராட்டி தட்டிக்கொடுக்கும் மனப்பக்குவம் பெற்றோர்களிடம் காணப்படாமையை கண்காட்சியை பார்வையிட வந்திருந்தவர்களின் எண்ணிக்கையிலிருந்து அறியக் கூடியதாக இருந்தது.

கண்காட்சிக்கு வைக்கப்பட்ட ஓவியங்களை வரைந்த சிறுவர்களுக்கான சான்றிதழ்கள் அவர்கள் கல்விகற்கும் தமிழ்ப் பாடசாலைகளின் ஊடாக விரைவில் அனுப்பிவைக்கபடும் என ஏற்பாட்டாளர்களில் ஒருவரான செல்வி நர்மதா சிறி முருகதாஸ் தெரிவித்தார்.

# கலையரசி 2005











யாழ் இந்துக்கல்லூரி பழையமாணவர் சங்கங்கத்தின் ஐக்கிய இராட்சிய கிளையினர் ஏற்பாடுசெய்திருந்தகலையரசி2005 விழா இம்மாதம் 25ம் திகதி சனி மாலை சங்கத்தின் தலைவர் திரு. சண்முகலிங்கந் தலைமையில் கிறீன்போர்ட அசெம்பிளி மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவில் நடன ஆசிரியை திருமதி வசந்தகுமாரி சின்னத்தம்பியின் மாணவிகளின் அபிநயத்தையையும் பார்வையாளர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காண்கிறீர்கள். இவ்விழா மூலம் திரட்டப்பட்ட நிதி முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்பள்ளிகள் அமைக்கும் திட்டத்துக்கு வழங்கப்படவுள்ளது. இவ்விடயத்தில் யாழ் இந்து மற்றய பழைய மாணவர் சங்கங்களுக்கு முன்மாதிரியாக அமைந்துள்ளது வரவேற்கப்பட வேண்டியது.

# நடக்க இருக்கும் நிகழ்வுகள்

## வெண்புறா நிதிக்காக தூர நடை

தாயகத்தில் யுத்த அனர்த்தங்களால் அங்கவீனமுற்றவர்களுக்கு செயற்கை உறுப்புகளை வழங்கும் திட்டத்துக்கு நிதி சேகரிக்குமுகமாக தூர நடை நிகழ்வொன்றை வெண்புறா நிறுவனத்தின் பிரித்தானியக் கிளை ஏற்பாடு செய்துள்ளது.

வரும் ஞாயிறன்று (ஜூலை 3ம் திகதி) தெற்கு லண்டனிலுள்ள Dulwich Parkல் காலை 10.30 மணிக்கு ஆரம்பிக்கும் இந்நிகழ்வில் 6 மைல் தூரம் வரை நடந்து சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்வதோடு உங்களது இந்த முயற்சிக்கு ஆதரவாக முடிந்தளவு நிதி சேகரிப்பிலும் ஈடுபடுமாறு வெண்புறா நிறுவனத்தினர் கேட்டு கொள்கிறார்கள். மேலதிக விபரங்களை 020 8265 2764 என்ற இலக்கத்தை அழுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

■ ■ ■

## கலை விழா

கரோ தமிழ்ப்பாடசாலையின் வருடாந்த கலைவிழா இம்மாதம் 9ம் திகதி சனிக்கிழமை மாலை 6மணிக்கு கிறீன்போர்ட அசெம்பிளி மண்டபத்தில் (Greenford Assembly Hall) நடைபெறவுள்ளது. விழாவில் தமிழ்ப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளும் சிறப்புக் கலைநிகழ்வுகள் இடம்பெறும் அனுமதி இலவசம்.

■ ■ ■

## விளையாட்டு விழா

கெண்டன் தமிழ்ப்பாடசாலையின் மாணவர்களுக்கு இடையிலான விளையாட்டு போட்டி வரும் சனிக்கிழமை (ஜூலை 9ம் திகதி) காலை 10 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணி வரை நடைபெறும். மாணவர்கள் மட்டுமல்லாமல் பெற்றோருக்கான போட்டிகளும் சிறப்பு அம்சமாக இடம்பெறும். தொடர்புகளுக்கு: 020 8200 8962

■ ■ ■

## ஈலிங் அம்மன் ஆலய திருவிழா

ஈலிங் சிறி கனகதுர்க்கை அம்மன் ஆலயத் திருவிழா இம்மாதம் 15ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 தினங்கள் நடைபெறும். தேர்த்திருவிழா ஒகஸ்ட் 7ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். விபரங்களை 020 8810 0835 அல்லது 020 8840 0435 எனும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

## பரிசளிப்பு விழா

கெண்டன் தமிழ்ப்பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா ஜூலை மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு நடைபெறும். தேர்வுகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். அனுமதி இலவசம். இடம்: Golders Rise, The Crest, Hendon NW4 2HP தொடர்புகளுக்கு: 020 8200 8962

■ ■ ■

## Under One Sky

கரோ மாநகராட்சி மன்றத்தின் ஏற்பாட்டில் Under One Sky எனும் பல்லின கலாச்சார நிகழ்வொன்று ஜூலை மாதம் 17ம்திகதி ஞாயிற்றுக்கிழமை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது 70களில் புகழ்பெற்ற கானா தேசத்து Osibisa இசைக்குழுவினர் உட்பட பல முன்னணி இந்தியக் கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுடன் பலவகை உணவு வகைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். காலை 11 மணிக்கு ஆரம்பமாகி இரவுவரை நடைபெறும் இந்நிகழ்வுக்கு அனுமதி இலவசம். இடம்: Byron Recreation Ground, Harrow.

■ ■ ■

யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தின் பிரித்தானியா வாழ் பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் வரும் ஜூலை மாதம் 3ந் திகதி பிற்பகல் 4 மணிக்கு Archbishop Laucfranc School, Mitcham Road, Croydon Surrey CR9 3AS என்னும் விலாசத்தில் நடைபெற இருக்கிறது.

■ ■ ■

ஊர்காவற்றுறை, பரிசுத்த அந்தோனியார் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் விருந்தும் நடனமும் ஜூலை 3ம் திகதி சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு Harrow Teachers Center, Tudor Road, Wealdstone, Harrow HA3 5PQ இடத்தில் நடைபெறும்.

■ ■ ■

வட இலண்டன் என்பீல்ட் அன்னை நாகபூசணியின் முதலாவது தேர்த் திருவிழா எதிர்வரும் ஜூலை மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் மதியம் 1 மணிவரை நடைபெறும்.

■ ■ ■

உலகப்பிரசித்தி பெற்ற விம்பிள்டன் லோன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் எதிர்வரும் ஜூலை மாதம் 2ம், 3ம்திகதிகளில் நடைபெறும். 2ந் திகதி பெண்களுக்கான இறுதிப்போட்டியும் 3ந் திகதி ஆண்களுக்கான இறுதிப் போட்டியும் நடைபெறும். இப்போட்டிகள் மாலை 2 மணிக்கு ஆரம்பமாகும்.

■ ■ ■

FASTCASH
WE NOW SEND MONEY TO THE FOLLOWING COUNTRIES
FOR ONLY £10
INDIA, CANADA, USA
AUSTRALIA, EUROPE
+ 120 COUNTRIES
RING FOR DETAILS
020 8886 4488

YOU DON'T HAVE TO COME TO US
PAY AT BARCLAYS
FOR INSTANT FASTCASH TRANSFER TO SRI LANKA
A/C NAME : C.E.C LTD
A/C NO : 70713945
SORT CODE : 20-36-47

FAST MONEY TRANSFERS TO SRI LANKA
YOUR TRANSFER IS MUCH SAFER WITH FASTCASH, THAN ANY NEWSAGENT OR A GROCERY STORE
இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

Transfer fees from only £5*

IMMEDIATE COLLECTION
CREDIT TO ANY BANK ACCOUNT
UNBEATABLE EXCHANGE RATES
ONLINE TRACKING & RECEIPT
NO CHARGES IN SRI LANKA

FAST CASH
WORLDWIDE MONEY TRANSFERS
*FOR MORE INFORMATION CALL
020 8886 4488
FASTCASH WEBSITE FOR RATES:
WWW.CECLTD.BIZ
CEC CURRENCY EXCHANGE CORPORATION LTD.
No. 125 - 127, Bramley Road, Oakwood, London N14 4UT, E-Mail: info@cecltd.biz Fax: 020 8886 4499
HSBC
SEYLAN

# WIMBLEDON TENNIS





விம்பிள்டன் என்பது லண்டனின் தென்மேற்குப் பிராந்தியத்தில் அமைந்திருக்கும் ஒரு ஊர் ஆகும். ஆனால் உலகின் எந்தப் பாகத்தில் இருந்தாலும் விம்பிள்டன் என்று சொன்னால் அது அநேகமாக ஆண்டுக்கொருமுறை நடைபெறும் ரென்னிஸ் பந்தாட்டப் போட்டியையே குறிக்கும். இப்போட்டியை நடாத்துகிற நிறுவனத்தின் முழுப்பெயர் The All England Lawn Tennis and Croquet Club.

இது 1868 இல் ரென்னிஸ் விளையாட்டு பழக்கத்திற்கு வர முன்பே 'குறோக்கே' (Croquet) என்னும் விளையாட்டில் ஆர்வம் கொண்டோர்க்காக அமைக்கப்பட்ட ஒரு தனியார் கிளப் ஆகும். ஆனால் 1875ம் ஆண்டில் லோன் ரென்னிஸ் அறிமுகப்படுத்தப்பட்டபின் 1877 இல் இதன் பெயர் மாற்றப்பட்டது.

1877ம் ஆண்டில் இது ஆண்களுக்கான போட்டியை மாத்திரம் நடாத்தியது. 1884 ல் பெண்களுக்கிடையேயான போட்டியையும் அறிமுகப் படுத்தினர். அதன்பின் படிப்படியாக இப்போட்டிகளுக்கு ஆதரவு அதிகரித்தது.

20 ஆம் நூற்றாண்டின் முதற்பகுதிகளில் வெளிநாடுகளிலிருந்தும் விளையாட்டு வீரர்கள் பங்குபற்றத் தொடங்கினார்கள். 1905ம் ஆண்டில் May Sutton எனும் அமெரிக்க வீராங்கனையும், 1907 ம் ஆண்டு Norman Brooks எனும் அவுஸ்திரேலிய வீரரும் முதன் முறையாக சம்பியன் பட்டத்தைப் பெற்ற வெளிநாட்டு வீரர்கள் ஆவர்

1968 ம் ஆண்டுவரை இப்போட்டிகளில் அமெஞ்சூர் தரமானவர்களே பங்குபற்றக் கூடியதாக இருந்தது. 1968ம் ஆண்டில் முதல் முறையாக எல்லோரும் பங்குபற்ற அனுமதிக்கப்பட்டனர். அந்த ஆண்டு அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த Rod Laver உம் அமெரிக்காவைச் சேர்ந்த Billie Jean Kingஉம் முறையே ஆண்கள் சம்பியனாகவும் பெண்கள் சம்பியனாகவும் வெற்றிபெற்றனர். அந்த வருடம் வெற்றிபெற்றோருக்கு அளிக்கப்பட்ட முழுப் பரிசுத் தொகை £26,150 பவுண் ஆகும்.

1977 ம் ஆண்டு இப்போட்டிகள் ஆரம்பித்து நூறாவது ஆண்டுநிறைவாக அமைந்தது. அந்த வருடமே மகாராணி இரண்டாவது எலிசபெத் பதவிக்கு வந்து 25 வருடங்கள் பூர்த்தி அடைந்து வெள்ளிவிழா கொண்டாடிய ஆண்டு ஆகும். அத்துடன் அந்த ஆண்டே பலவருடங்களின் பின் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த Virginia Wade பெண்கள் சம்பியனான வெற்றிபெற்ற வருடம் ஆகும். இவை மூன்றும் ஒன்று சேர்ந்து 1977ம் வருடம் விம்பிள்டன் போட்டிகள் ஒரு விசேட இடத்தைப்பெற்றது.

சமீப காலங்களில் பல சாதனைகள் முறியடிக்கப்பட்டுள்ளன. சுவீடனைச் சேர்ந்த Bjone Borg 1980ஆம் ஆண்டுலிருந்து தொடர்ந்து 5 வருடங்களுக்கு ஆண்கள் சம்பியனாக வெற்றி பெற்றுள்ளார். சம்பியன்களிலேயே குறைந்த வயதானவராகவும், தரப்படுத்தப்படாத (Un-seeded player) விளையாட்டு வீரர் ஒருவராகவும் ஜேர்மனியின் முதல் ஆண் சம்பியனாகவும் Boris Becker 1985ம் ஆண்டு வெற்றிபெற்றார். 1987ம் வருடம் அமெரிக்காவைச் சேர்ந்த Martina Navaratilova 6 வருடங்கள் தொடர்ந்து பெண்கள் சம்பியனாக வெற்றி பெற்றார். அத்துடன் 1990ம் ஆண்டில் 9 தடவை வெற்றிபெற்ற பெண் சம்பியனாக மிளிர்ந்தார். 2000ஆம் ஆண்டில் அமெரிக்காவைச் சேர்ந்த Pete Sampras 7 தடவைகள் சம்பியன் பட்டம் பெற்று சாதனை செய்தார். 2001ஆம் ஆண்டு கண்டபடி தெரிந்தெடுக்கப்பட்டு (Wildcard) பங்கு பற்றிய விளையாட்டு வீரரான Goran Ivanisevic சம்பியனாகத் வெற்றிபெற்றார்.

1968ம் ஆண்டு முதன் முதலில் பரிசளித்த போது அளிக்கப்பட்ட பரிசின் முழுத்தொகை £26,150 பவுண்களாகும். 2005ம் ஆண்டின் பரிசுகளின் முழுத்தொகை பத்து மில்லியன் பவுண்களுக்குக்கூடுதல் ஆகும்.(10,085,510) ஆண்கள் போட்டியில் வெற்றிபெறும் சம்பியனின் பரிசு £630,000 பவுண்கள், பெண்கள் சம்பியனது பரிசு £600,000.

# செய்தித் துணுக்குகள்

கற்போட்டில் உள்ள ஒரு சிற்றுண்டிச் சாலையில் பணிபுரிந்த இலங்கையரான தியாகராஜா திருக்குமரன் 45 வயது, அங்கேயே பணிபுரிந்த இன்னுமொரு இலங்கையரான நல்லதம்பி தவராஜாவை கத்தியால் குத்திக் கொலை செய்தாரென குற்றம்சாட்டப்பட்டு பொலீசாரினால் கைதாகியுள்ளார். இறந்தவர் மணமானவரென்றும் அவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனவென்றும் தெரிய வந்துள்ளது. கைதான திருக்குமரன் செப்டெம்பர் மாதம் 26ம் திகதி கோட்டில் தோற்றுவிப்பதற்காக விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

■ ■ ■

டீசல் எண்ணெய்கருப் பதிலாக உருளைக்கிழங்கு பொரித்த கழிவு எண்ணெயை உபயோகித்து தமது டீசல் வாகனங்களை ஓட்டப் போவதாக லண்டனிலுள்ள Southwark கவுன்சில் அறிவித்துள்ளது. இம்மாற்று எரிபொருளை மிகவும் வெற்றிகரமாக தமது பரிசோதனைகளின் போது உபயோகித்துள்ளதால் தமது டீசல் வாகனங்களில் அரைவாசியை இவ்வாறு கழிவு எண்ணெய் கொண்டு ஓட்டப்போவதாக அறிவித்துள்ளனர்.

■ ■ ■

இங்கிலாந்தின் சட்ட வரலாற்றிலேயே முதன் முறையாக கண்காணிப்புக் கமராவில் காணப்பட்ட அத்தாட்சிகளை உபயோகித்து பெண் ஒருவரைப் பலாத்காரம் செய்ய முயன்ற குற்றத்திற்காக பர்கான் ஒஸ்மான் என்ற நபருக்கு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. தாக்கலுக்கு உள்ளான பெண் யார் எனத் தெரியாதபோதிலும் சந்தர்ப்ப சாட்சியங்களையும் கண்காணிப்பு கமராவினால் எடுக்கப்பட்ட படங்களையும் ஆதாரமாகக் கொண்டு வெற்றிகரமாக தண்டனை பெற்றுக்கொடுத்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது என பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

■ ■ ■

# இரு உள்ளங்கள்

காந்த லக்ஷ்மி புரடக்ஷன் பெருமையுடன் வழங்கும் இரு உள்ளங்கள் எனும் திரைப்படம் எதிர் வரும் 09-07-05 அன்று Wembley High Technology Collegeல் மாலை 5-8மணிக்கு திரையிடப்படவுள்ளது. இத்திரைப்படம் லண்டனிலேயே தயாரிக்கப் பட்டுள்ளது. 'ஷாருக்' மிகச்சிறப்பாக இயக்கி நடிக்கும் இத்திரைப்படம் முழுக்க முழுக்க தென்னிந்திய சினிமா பாணியிலேயே எடுக்கப்பட்டுள்ளது. தென்னிந்திய சினிமாவிற்கு இணையான நம்மவர் சினிமா என்பது அவரது கருத்து. முற்றிலும் மாறுபட்ட வித்தியாசமான காதல் கதையுடன் ஒரு மசாலா சினிமாவிற்குரிய அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே கொண்டு வெளிவருகின்றது. இத்திரைப்படம் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் லண்டனில் முக்கியமான பல பகுதிகளில் காட்சிகளை கண் குளிர அமைத்துள்ளார்கள். இத்திரைப்படம் வெற்றிகரமாக வெளிவருவதற்கு இத்திரைப் படத்தில் பணியாற்றிய ஒவ்வொருவரினதும் கடின உழைப்பே காரணம் என இயக்குனர் குறிப்பிட்டுள்ளார்.

ஹீரோயின் 'ஹேமாலி' அவர்கள் தனது நடிப்பின் திறமையை அனைவரும் பாராட்டும் விதமாக வெளிப்படுத்தியுள்ளார். K. ரமணன், S. அன்ரனி அவர்களின் தயாரிப்பில் T.தினேஸ் அவர்கள் பாடல்களை எழுத K.கங்கை அவர்கள் மிகஅற்புதமாக இசையமைத்துள்ளார். இவர் தென்னிந்திய இசையமைப்பாளர்களால் பாராட்டுப் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரபல தென்னிந்திய பின்னணி பாடகர் ஸ்ரீராம் நாராயணன் மற்றும் நம்மவர்களான U.தேனுகா, S.புண்ணியா அவர்களுடன் ஷாருக் என ஒவ்வொருவரும் தங்கள் இசையின் வலிமையை காட்டி பாடல்கள் அனைத்தையும் வெற்றி பெறச் செய்துள்ளார்கள்.

உதயா அவர்கள் ஒளிப்பதிவிற்கு புதிதல்ல. ஒவ்வொரு காட்சியிலும் தனது கை வண்ணத்தை மிகச் சிறப்பாக காட்டியுள்ளார். இப்படத்தின் நடன ஆசிரியரான N.S.முரளி அவர்கள் மிகவும் வித்தியாசமான புதிய முறையிலேயே ஒவ்வொரு பாடல் காட்சிகளையும் நடனங்களையும் அமைத்துள்ளார். ஸ்ரண்ட் மாஸ்டர் L.G அவர்கள் தனக்கே உரிய பாணியில் மிக சிறப்பாக சண்டை காட்சிகளை அமைத்துள்ளார். இக்கலைஞர்கள் தங்களின் வெற்றிக் களிப்பை பார்வையாளர்களாகிய எங்களின் புன்முறுவலில் காண காத்துக் கொண்டிருக்கிறார்கள். வளர்ந்து வரும் இக் கலைஞர்களை ஊக்குவித்து அவர்களை வெற்றி பெற செய்வது இனி பார்வையாளர்களாகிய எங்களின் பொறுப்பே.



இளம் இசையமைப்பாளர் ஜக்சனின் 'பூப்பூக்கும் ஓசை' இறுவெட்டின் வெளியீட்டு விழா கடந்த 18ம் திகதி மாலை Chingford Assembley Halல் நடைபெற்றது. சட்டத்தரணி செ.சிறிஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக நடன ஆசிரியை திருமதி. பத்மினி குணசீலன் கலந்து கொண்டார். வெளியீட்டுரையை திரு. யாழ் சீலனும் ஆய்வுரையை திரு. விக்கினராஜாவும் நிகழ்த்தினர். இறுவெட்டின் முதற்பிரதியை தொழிலதிபர் திரு. மகேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.


LONDON TAMIL CENTRE

(Registered Charity Number: 1018333)

The London Tamil Centre is at the forefront in the teaching of Tamil Language and Cultural Studies in London and is renowned for its academic excellence.

CLOSING DATE
20TH JULY 2005

We Conduct classes in

Bharathanatyam Dance, Carnatic Vocal music, Flute, Miruthangam, Key Board, Veena and Violin as well as Tamil Language (upto GCSE Level - Cambridge Board)

To maintain the high standard and also to cope with increase in demand, we seek additional teachers for:

Tamil Language ,Carnatic Vocal Music & Language Teacher Capable of Teaching (within G.C.S.E, O/L, A/L Classes)

(candidates will be of graduate (sangeetha Vidwan) calibre with a minium of five years relevant experience)

Remuneration package will be commensurate with qualification and experience

London Tamil Centre is an Equal Oppurtunities Employer

Please apply in writing to:

The Secretary, London Tamil Centre,
253 East Lane, Wembley.Middx. HA0 3NN

### வாழ்த்துக்கள் !

முதல் பக்கம் அசத்தல் ஆனால் ஒரு குறை வழமை போல் அந்த ஒரு வசனத்தைக் காணவில்லை. இருந்திருந்தால் இன்னும் சிறப்புற்று இருக்கும். **ஒரு பேப்பர்** க்கு ஒருவயது என்பதில் மகிழ்ச்சி. உழைத்த அனை வருக்கும் பாராட்டுக்கள். வழமை போல் சேயோன் சீறி இருக்கிறார். எங்கள் இனத்தைக் காட்டிக் கொடுக்கவும், விடுதலைப்போரைக் கொச்சைப்படுத் தவும் சில கூட்டங்கள் இருக்கத்தான் செய்கின்றன. எல்லாம் தமிழீழம் கிடைக்கத் தானாக அடங்கி விடும். சேயோனுக்கு ஜெயராஜ் மீது கோபமா?

பாவம் அந்த மனிசன் இனி இங்க வந்து கல்லெறி வாங்கிக் கொண்டு போகப்போது. பனையடி அருமை, சிறப்பாக அலங்கரித்து மிகத் தெளிவா கவும் விரிவாகவும் விளக்கி நிற்கிறது. தற்போதைய அரசியல் நிலை பற்றிய இந்தப் பனையடியை வன்னியில் இருந்து எழுதிய பொன் காந்தன் பாராட்டுக்குரியவர்.

*மைக்கல்*
*London*

### வாழ்த்துக்கள் !

சோதனை மிகு காலத்திலும் வேதனை மிகு நேரத்திலும் தனது 1வது பிறந்த நாளை இனிதே நிறைவு செய்து இரண்டாவது வயதில் காலடி எடுத்து வைக்கும் ஒரு பேப்பருக்கு பொது. பிறந்த நாள் வாழ்த்துக்கள் வாழ்த்துக்கள்தான் நிர்ணையிப்பது இல்லை அன்பை என்பதால் காலம் தாழ்த்தி வாழ்த்துவதில் தவறு இல்லை என நினைக்கிறேன்.

*பு. முகுந்தன்*
*London*

### அர்த்தம்!

வைபவம் ஒன்றிற்குப் அண்மையில் போய் இருந்தேன் அங்கு வாசலில் குத்துவிளக்கு வைத்திருந்தார்கள். அந்த விளக்கில் மூன்று திரிகள் இருந்தன. அதை நான் அங்கு சென்றிருந்த போது கண்டு கொள்ள வில்லை. ஆனால் அவ் வைபவத்திற்கு வந்திருந்த வெள்ளைப் பெண்மணி ஒருவர் இதற்கு என்ன அர்த்தம் என்று ஒரு கேள்வி கேட்டார். யாருக்கும் தெரியாது. அனைவரும் கையைப் பிசைந்தார்கள். அங்கேநின்ற பெரியவர் ஒருவர் மூன்று என்பது நிறைவான இலக்கம். சகலதும் நிறைவாய் நடக்க வேண்டும் என்பதே அர்த்தம் என்று வெள்ளைப் பெண்ணுக்கு மாத்திர மல்ல அங்கு நின்ற யாவருக்கும் காதில பூ சுற்றினார்.

ஒன்று இப்படியான குத்து விளக்கு விடயங்களை நிறுத்த வேண்டும் அல்லது அது தொடர்பானவற்றை அறிந்து இருத்தல் வேண்டும். இரண்டா வது சிறந்தது. கோயிலில் ஐயர் ஓதும் மந்திரமே விளங்காத போது, குத்து விளக்கைப் பற்றி என்ன அக்கறை என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது.

*பரணிதரன்*
*Harrow*




*எங்களுக்கு பிறந்த நாள் வாழ்த்து அட்டை கீறி அனுப்பின சபீதா குட்டிக்கு (வயது 11) எங்கட மனமார்ந்த நன்றிகள். — ஆசிரியர் குழு*

### குற்றம் குற்றமே !

நீங்கள் செய்வது சரியில்லை. கம்ப வாரிதியைப் பற்றித் தரக் குறைவாகப் போடக் கூடாது. அவர் இலங்கைத் தமிழர் எங்கள் சொத்து. அவரை தரக்குறைவாய் பேசுவதால் கேவலப் படுவது நீங்கள்தான். இராமாயணத்தை அக்குவேறு ஆணிவேறாக கழட்டிப் பூட்டக் கூடிவர் தமிழர்களிலேயே அவர் ஒருவர்தான். புலம்பெயர் தமிழர் பற்றி நக்கல் அடித்தார் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. அவர் போன்ற முதிர்ச்சி உடைய மனிதர்கள் அப்படிச் செய்ய மாட்டார்கள். சேயோன் அப்படி எழுதுவது அவரிற்கு ஏதோ தனிப்பட்ட பிரச்சனை இருக்கிறது என்பதையே குறிக்கிறது. நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே.

*செல்வராஜன்*
*London*

### CHANGE THE TITLE

While appreciating your publication I'm equally disappointed with the title of your news paper. The Brahmins in India are murdering Tamil by giving titles like 'Junior Vikatan' and 'Reporter'. At this rate Tamil will be extinct by the end of the century as some scholars predict.

I earnestly request you to change the title to ஒரு செய்தி இதழ் or ஒரு வார இதழ்.

*Alagan*
*London*

### கவனமாக!

எல்லாளன் பதிவு கண்டு சற்று அதிர்ச்சி உற்றேன். இன்று இரவு என்ன நடக்கும் என்பது மறுநாள் காலையில்தான் தெரியும் என்றால் எப்படி ஜீரணிப்பது. அண்மையில் எனக்கும் ஒரு சம்பவம் நடந்தது. நான் வேலைக்குச் சென்றுவிட்டு இரவு 12 மணியளவில் பாடல் கேட்டுக்கொண்டு வீடு வந்து கொண்டிருந்தேன். எனக்கு முன்னால் ஒரு வெள்ளைக்கார பெண் நடந்து சென்று கொண்டிருந்தாள். திடீரென அவள் திரும்பி என்னைப் பார்த்து விட்டு வேகமாக நடந்தாள். நான் ஒன்றும் செய்யவில்லையே என்று நானும் பின்னால் திரும்பிப் பார்த்தேன்.

இரண்டு கறுப்பர்கள் வேகமாக நடந்து வந்தார்கள். ஏதோ சிக்கல் வரவுள்ளதை அறிந்த நான் என்ன செய்வதுஎன்றுநினைக்கும்வேளையில் பெண்மணி ஓடத் தொடங்கினாள். நானும் விழுந்தடித்து ஓடினேன். அவர்கள் என்னை மட்டும் துரத்தி வந்தார்கள். ஒருவாறாக வீடு வந்து சேர அவர்கள் கொஞ்சம் தொலைவிலிருந்து கெட்ட வார்த்தைகளால் திட்டிவிட்டுப் போனார்கள். எதற்கும் கவனமாக இருத்தல் நல்லது.

*ரமணன்*
*Mitcham*

### புறுட் சலட்டே

சரி சரி எப்ப றேடியோ தொடங்கப் போறியள்? அதுக்கென்ன பேர்? ஒரு ரேடியோதானே! பாத்தியளே கண்டு பிடிச்சிட்டன். அது என்னது காலம் கனிந்து வரும்போது பழமும் பாலில் விழும். நீங்கள் என்ன 'புறுட் சலட்டோ' போடுறியள். கதையைவிட்டுப்போட்டுக் கெதியாத் தொடங்குங்கோ ஒரு ரேடியோவை தொடங்கீட்டினம் நூல் விடுறதுக்கு.

*ரவிராஜன்*
*Mitcham*

## கோயில் உள்ள ஊரிற் குடியிருக்க வேண்டாம்

'கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்' என்பது ஔவையின் முதுமொழி. ஆனால் இலண்டனைப் பொறுத்தமட்டில் கோயில் உள்ள ஊரிற் குடியிருக்க வேண்டாம் எனப் புதுமொழி உள்ளது ஏனெனில் பல கோயில்களில் பதவிப் போட்டிகள் வாய்ச் சண்டைகள் நடைபெறுவதால் இப்புது மொழி நன்கு பொருந்தும். பதவிகளைப் பிடிப்பதற்கு தமது ஆதரவாளர்களைக் கூட்டிவந்து கூக்குரல் இட்டு குழப்புதல் என்பது பலகோவில்களில் நர்த்தனம் இடுகின்றன. கோவில் அங்கத்துவ பணம் கட்டாமலே சிலர் நல்ல நல்ல பதவிகளில் இருந்திருப்பது எட்டாவது அதிசயமாக உருவாகியுள்ளதாக கேள்வியுற்று வழிபடப் போகும் நாம் அதிர்ச்சியடைந்ததால் கோயில் உள்ள ஊரிற் குடியிருக்கத்தான் மனம் வருமா?

நாம் போய் வழிபாடாற்றி விட்டு அவனருளை மாத்திரம் பெற்று வருவோமென்றால், இருசாரார்களும் எம்மை விட்டு விடுவார்களா? இல்லை எமக்கென்ன என்று ஒதுங்கி நின்று வீபூதி தீர்த்தம் வாங்கிக்கொண்டு, மகேசுவர பூசையில் கலந்து விட்டுவரலாம் என்றால், அங்கேயும் சிலர் [illegible] தமது பங்கை எடுக்க என்று நிற்பதையும் கவனிக்காமல் தத்தமது வீட்டுக்குப் பார்சல்கள் சேகரிப்பதை பார்க்க பாரதி கூறிய 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என்ற பாடல் வரிகளே நினைவில் அலைமோதும். ஏதோ சோற்றையும் சாம்பாரையும் காணாதவர்கள் போலச் சிலர், காத்திருப்போர் காத்திருக்கட்டும் நாம் எடுத்துக் கொண்டு போவதை நிறுத்த மாட்டோம் என்பது போல நடந்து கொள்வதைப் பல இடங்களில் காண்கின்றோம். அதற்கு மாத்திரம் வருவது போல நினைக்க வேண்டி உள்ளது.

அடுத்தது ஒரே ஒரு கோவிலில் மாத்திரம் ஆங்கிலத்தில் கோவில் நிகழ்ச்சி அட்டவணை. ஏன் அப்படி அங்கு என்று கேட்டால் அங்கு இரண்டொரு மொறீசஸ் நாட்டவர்க்காக ஆங்கிலத்தில் நேரசூசி உள்ளதாம். அங்கே 'மெல்ல தமிழ் இனிச் சாகும்' 'அந்த மேற்கு மொழி புவிமிசையோங்கும்.' அங்கு ஆங்கில மொழியில் பூசைகள் நடைபெற்றாலும் ஆச்சரியப்படுவதில்லை. இன்னும் சில கோவில்களில் முதியோர் சபை, இளைஞர் சபை, மகளிர் சபையென பல சபைகள் இருப்பதையும், அச்சபையினரில் ஒருவர் கூட கோவில் தொண்டு செய்வதைக்காண முடிவதில்லை. அச்சபைக்கு பதிலாக தொண்டர் சபை என்று ஒரு சபை இருந்தால் நன்று. இன்னும் அறங்காலர் சபை, நிர்வாக சபை, என்றில்லாமல் இலங்கைக் கோவில்கள் இருப்பது போல பரிபாலன சபை என ஒரு சபை இருந்தால் போதாதா?

இன்னும் சில இடங்களில் நூல் வெளியீட்டு விழா, நூல் வெளியீடு என்று வார மொரு நிகழ்ச்சியினால் அந்நூலை வாங்குமாறு எம்மை வற்புறுத்தி வழிபட விடாமல் செய்பவரும் பலர் உள்ளனர். இவற்றை வேறு பொது இடங்களில் நடாத்தினால் என்ன?

மற்றது இங்கு போதிய, நன்கு விடயம் தெரிந்த பல சிவாச்சாரியர் இருக்கிறார்கள். அவர்களில் சில பட்டதாரிகளும் உளர். சமயசொற் பொழிவு ஆற்றக் கூடிய சில சிவாச்சாரியார்களும் உள்ளனர் அப்படி இருக்கக் கூடிய வேளையில், வருடாந்த மகோற்சவத்தை நடாத்த இந்தியாவிலிருந்து சிலரை பத்துப் பதினைந்து ஆயிரம் பவுண்களைச் செலவு செய்து, அழைத்து வீண் செலவு செய்வது மாத்திரமல்லாது, இங்கு உள்ள நன்கு கற்ற சிவாச்சாரியார்களை அவமதிக்கிறார்கள் என்று பல பக்தர்கள் முணுமுணுப்பதையும் காண்கிறோம்.

இத்தனை காரணங்களுக்காகவே பலர், சில கோவில்களுக்குச் செல்ல விரும்பாது வீட்டிலேயே இருந்து வழிபாடாற்றுகின்றனர்.

பதவிப் போட்டிகள் குறைய வேண்டுமானால் ஆலயங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து ஒருயாப்பை தயாரித்து ஒருதடவை அல்லது இருதடவைகள் மாத்திரம் ஒருவர் ஒரு பதவியை வகித்தல் வேண்டும். அடுத்த முறை அவர் வேறு ஒரு பதவியை வகிக்க வழி செய்தால் பதவிப் போட்டி குறையும் என்பது திண்ணம்.

இவை நன்கு நடைபெற்றால் மாத்திரமே ஆலயங்களின் அவல நிலை அகலும்.

*- ஒரு சைவன்*

TPS
TOOTING PROPERTY SERVICES
RESIDENTIAL / COMMERCIAL / SALES / LETTINGS



Are you thinking of Selling or Letting your property?
**Save up to 50% Now**
Free Mortgage Advisory Bureau - No Obligations
**020 8767 9399** 07981 086 563

**Free Valuation - No Obligation**
**No Sale - No Fee**
**No Let - No Fee**
**Free Property management**
**Rent guaranteed Scheme**

Open 7 days a week
TOOTING PROPERTY SERVICES LIMITED
222 Tooting High Street, London SW17 0SG
Tel: 020 8767 9399 Fax: 020 8767 2244
email: info@tootingproperty.co.uk
web: www.tootingproperty.co.uk

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JULY 01, 2005, ISSUE 26

## தீர்க்கப்பட வேண்டிய இளைஞர்களின் பிரச்சனை

தமிழ் இளைஞர் குழுக்களுக்கிடையிலான மோதல்களின் தொடர்ச்சியாக, கடந்த வாரம் கிழக்கு லண்டன் Ilford பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். லண்டனில் தமிழ்க் குழுக்களுகிடையிலான வன்முறைகளில் உயிரொன்று பறிக்கப்படுவது இதுதான் முதல் தடவையல்ல. இருப்பினும் இவ்வன்முறைகள் தொடர்ந்த வண்ணமிருப்பது தமிழ்ச் சமூகத்தின் நலனில் அக்கறை கொண்டவர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வரும் இப்பிரச்சனை சமூகத்தின் பல மட்டங்களிலும் இப்போது உணரப்பட்டு வருகிறது. இன்று தமிழர்களால் ஒழுங்குபடுத்தப்படும் எந்த ஒரு நிகழ்வும், பாதுகாப்பு ஊழியர்கள் இன்றி நடாத்த முடியாத நிலையே உள்ளது. நிகழ்ச்சிகள் கலவரமின்றி நடந்தேறுவதே அதிர்ஸ்டமாகத் தெரிகிறது. தமிழ் இளைஞர்கள் தமது இனத்தவராலேயே சந்தேகத்துடனும் வெறுப்புடனும் பார்க்கப்படும் நிலையே காணப்படுகிறது.

சில தமிழ் ஊடகங்கள் பொறுப்பின்றி இவ்வன்முறை குழுக்களின் நடத்தைகள் பற்றிய செய்திகளை தலைப்புச் செய்திகளாக்கி பரப்பரப்பை ஏற்படுத்துகின்ற போதிலும்; இப்பிரச்சனையை சமூக அக்கறையுடன் பார்ப்பதில்லை. இனியும் இந்த இளைஞர்களை வெறுமனே ஏளனத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதில் எந்த பயனும் ஏற்படப்போவதில்லை.

நமது இளைஞர்கள் குழுக்களாக பிரிந்து இயங்குவதும், வன்முறைகளில் ஈடுபடுவதும் அவாகளுக்கிடையிலான சிறு சச்சரவுகள் கூட கொலைகளில் முடிகிற விபரிதங்களும் பெரும்பாலானவர்களால் விளங்கிக் கொள்ள முடியாமலிருக்கிறது. இது பற்றிய முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமல் தமக்கிசைவான கருத்துக்கள் மட்டுமே வெளியிடப்படுகின்றன.

இங்கு மறைந்து கிடக்கும் சமூகப்பிரச்சனைகள் வெளிக்கொணரப்பட்டு தீர்வுகாணும் முயற்சிகள் மேற்கொள்வதை விடுத்து, வன்முறைகளில் ஈடுபடுவோரை சமுதாயத்திலிருந்து ஒதுக்கி விடலாம் அல்லது அவர்களிடமிருந்து விலகி இருந்து விடலாம் எனக் கருதுவது நிலவுக்கு அஞ்சி பரதேசம் போன கதைபோலாகி விடும்.

இனத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்ற இளைஞர்களின் ஒரு தொகுதியினரை காவற்துறையினர் கவனித்துக் கொள்வார்கள் என வாழாதிருக்காது, அவர்களது கருத்துக்களையும் உள்வாங்கி இச்சமூகப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதில் சமூக நிறுவனங்கள் ஆலயங்கள், சமூகத் தலைவர்கள் எனப்பலரும் இணைந்து செயற்பட முன்வரவேண்டும்.

## ஒரு பேப்பர் . . . . . . . . .

*வாசகர்களுக்கு வணக்கம்!*

*ஒரு வயது முடிந்து இரு இதழ்கள் வந்து விட்டது. இல்ல இல்ல இதுக்கு மேலயும் இதப் பற்றிக் கதைக்கிறது சரியில்லை. இதோட நிப்பாட்டுறம்.*

*இப்ப இப்ப, சில விசயங்கள் வெளியில வருது எங்கள விழுத்திறதுக் கெண்டு சிலர் முயன்று வந்திருக்கினம். சரியாச் செலவழிச்சும் இருக்கினம். கேள்விப்படுறம்.*

*அவை ஒரு வேலை செய்திருக்கலாம். பேசாம செலவழிச்ச காசை எங்களிட்டத் தந்திருந்தா, நாங்க சும்மா கொஞ்சக் காலத்துக்காவது விலகி இருந்திருப்பம்*

*அருமந்த காசு!*

*இது பரவாயில்ல சிலபேர் எங்கள "றோ" எண்டு சொல்லிக்கொண்டு திரியினம். அது பொய்யெண்டு அவைக்கே தெரியும் தான்*

*அதுக்காக உப்பிடி சொல்லிறதே!*

*நாங்கள் "றோ"வாம் அதாலதான் பேப்பர் நல்லாப் போகுதாம்! அவையளின்ர லொஜிக்கே விளங்கேல்ல.*

*நாங்கள் அப்படி இப்படி எண்டு எங்கட பாட்டில ஓடிக்கொண்டு இருக்கிறம்*

*சும்மா இப்படித் தேவையில்லாத கதைகளை கிளப்பி எங்களுக்கு அடி வாங்கித் தாறது தான் அவயளின்ர நோக்கம்.*

*நீங்கள் உண்மையை விளங்கி வைச்சிருந்தா எங்களுக்கு அது போதும்.*

*போன முறை கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் பற்றி சேயோன் எழுதி இருந்தவர். பாத்து இருப்பியள்.*

*அதில கனபேர் அவர் புலம் பெயர்ந்தோர் பற்றி எழுதின அந்த கட்டுரையை போடச் சொல்லி கேட்டிருந்தீர்கள்.*

*அதை ஒரு மாதிரித் தேடிப் பிடிச்சு எடுத்துப் போட்டு இருக்கிறம். உங்களுக்கு இப்ப சந்தோசம்தானே!*

*அட, சொல்ல மறந்திட்டம், போனமுறை எல்லாளன்ர ஆக்கத்தைப் பாத்துப் போட்டு பலர் தொலைபேசி மேல தொலைபேசியா தொடர்பு கொண்டு பேசினீர்கள்.*

*எல்லாளன் தன் சார்பில் எம்மை நன்றி சொல்லச் சொன்னார்.*

*"கொஞ்சமும் யோசிக்க வேண்டாமாம்" தான் தேறி வருகிறாராம்.*

*வேற என்ன,*

*இப்போதைக்கு ஒண்டுமில்ல அடுத்த பேப்பரில சந்திப்பம்.*

*வணக்கம்*

*சீ... யூ . . .*

*- **ஒரு பேப்பர்** காரன்கள்.*

# The Tamil National Question

By P. Ramasamy

The question foremost in the minds of many is whether the Tamil national question in the northeast of Sri Lanka whether in the form of separate state or through political accommodation with the Sinhalese can be successfully resolved under the present political, economic and social circumstances. The relationship between the LTTE and the Sri Lankan state, whether conflictual or cooperation, will be a crucial component in the resolution of the Tamil nationalist conflict, there is another factor that need to be factored in. This is none other than the role of India.

India's posture of disinterest or neutrality in regard to the ethnic conflict in Sri Lanka as result of the debacle of the Indian Peace Keeping Forces in the late 1980s and the subsequent assassination of its Prime Minister Raji Gandhi have been accepted by academic analyses as sign of its limited importance in the Tamil national question. But however, some scholars and analysts have repudiated this posture in the recent past. They argue that although India sought to clear itself from interfering with the ethnic conflict in Sri Lanka in the aftermath of the above two incidents, India's could not just disentangle itself from the affairs of the island for geo-political reasons. India has often called for the negotiated settlement of the Tamil question through peaceful process and lately India has ventured into the dredging of the narrow Palk Straits. Beyond this, the possibility of defence pact/cooperation with the Sri Lankan state, military training programmes for the members of the Sri Lankan armed forces and most importantly the desire for India to maintain South Asian region free from the interference of super powers have provided some conclusive grounds that India is reasserting its regional role with the possibility of it affecting the nature of settlement of the Tamil national question.

The LTTE is not a naïve political and military organization. Its leaders, during the period of armed conflict with the Sri Lankan state, recognized the resolution of the Tamil question would invariably involve India in one form or another. Following the ceasefire brokered by the Norwegians in early 2002, after a six rounds of peace talks, the LTTE proposed the subject of interim administration for the furtherance

> *If the Tamil national question is basically confined to the relationship between the LTTE and the Sri Lankan state*

of a negotiated political settlement. The impact of tsunami lessened international pressure on Kumuratunga's coalition government and ultimately paved the way for the discussion of the adoption of a joint mechanism for the management and distribution of financial aid to the victims. On 26 June 2005, the government and the LTTE despite opposition from the hard-line Sinhalese spearheaded by the JVP and JHU have signed the P-TOMS MOU.

The quest for an interim administration was predicated on the grounds that its participation in peace negotiations must be matched by measures to rebuild, rehabilitate and improve the lives of ordinary Tamils. The ISGA and P-TOMS to the LTTE are mere temporary arrangements necessary to improve the lives of Tamils so that they share the benefits and the same time come to acceptance the peace process as something legitimate.

It need to be said in military and strategic terms, with or without these administrative mechanisms, if the Tamil national question is basically confined to the relationship between the LTTE and the Sri Lankan state, the latter could have moved in the direction of separate state. Some political analysts are of the opinion, in the absence of a third force, meaning India; the LTTE could have with some difficulty expelled the armed forces from the Tamil areas. The formidable presence of India, its hostility to the LTTE, its avowed principle not to allow for the separate state and its close cooperation with the Sri Lankan state are factors as to why the LTTE has not pursued the separate state option vigorously and in line with the 'thirst' of its cadres. About two years before the conclusion of the ceasefire, the collapse of the Jaffina was quite imminent, but then the LTTE pulled back, purportedly to avoid civilian casualties. This is merely a partial explanation. What was India's position then?

The Sri Lankan state with all its mighty armour is not a position to defeat the LTTE, but counts on the good office of India to checkmate the latter's quest for a separate state. Factoring India into this kind of a new framework suggests that supporters of the Tamil national liberation movement take up the intellectual challenge of fostering and nurturing good and amicable relationship with people of India. A functional people to people approach might lay the basis for a long-term relationship between the Tamil nationalist movements and other similar movements in India.

*(Shortened version)*
*Source: TamilCanadian*

கருத்து

# கொஞ்சம் யோசிங்க . . .

எல்லாளன்
(ஒரு பேப்பர்)

இது புலம்பெயர் தமிழர்களின் திரைப்பட வளர்ச்சிக் காலம் என்று சொல்லலாமா? அல்லது பலர் இத்துறைக்குள் இப்போதுதான் நுழையத் தொடங்கும் காலம் என்று சொல்லலாமா? இரண்டாவதுதான் எமக்குப் பொருத்தமானது என்று எனக்குப் படுகிறது. புலம்பெயர் தமிழர்களுக்கான சினிமா இன்னும் உதிக்க வில்லை. உதிக்கப் போகிறது. (நான் ஒரு படத்தை எடுத்துப் போட்டு உதிச்சிட்டுது எண்டு சொல்ல திட்டம் வைச்சிருக்கிறன்)

ஏன் உதிக்கவில்லை? இப்படி ஒரு கேள்வி கேட்டால் அதற்குப் பல பதில்கள் இருக்கின்றன. அதில் முக்கியமாக சில பிரச்சனைகள் சொல்லப் பட வேண்டும் என்று நினைக்கிறேன். திரைப்படம் எடுக்கின்றோமா முதலில் பார்வையாளர்களைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் (ஐயோ பாவம் என்றும்தான்)

நான் இங்கு பார்த்த திரைப்படங்கள் சில அந்த அக்கறை எல்லாம் இல்லாமல் எடுக்கப்பட்டு இருக்கும் அதாவது இது புலம் பெயர் தமிழர்களின் சினிமா என்றால் அது சார்ந்ததாக எடுக்கப் படலாம் (கவனிங்கோ எடுக்கப்படலாம். எடுக்கோணும் என்று சொல்லவில்லை) அதை விட்டுத் தென் இந்தியச் சினிமா போல் "நான் ஒரு தடவை சொன்னா!" நான் ஒரு தடவை சொல்லவில்லை எண்ணா! இப்படி Hero இசத்தினைக் காட்டினால் தான் மக்கள் மயங்குவார்கள் என்று படம் எடுப்பது பயனளிக்காது.

நான் புலம்பெயர் நாடுகளில் தயாரிக்கப்பட்ட சில படங்களைப் பார்த்து இருக்கிறேன். அனைத்து படங்களும் பார்த்து முடிக்க வேண்டும் என்று கடைசிவரை இருந்திருக்கிறேன். கடைசிவரை இருந்திருக்கிறேன் என்பது "கடினப்பட்டே" என்பதைக் குறிக்கிறது. சில புலம் பெயர் தமிழர் வாழ்வு சார் பிரச்சனைகளை சொல்ல வருகின்றன. சில அது பற்றி அல்லாமல் சாதாரணமான ஒரு கதையைச் சொல்ல முயல்கின்றன. சில தொழில் நுட்ப ரீதியாக கதை தவிர்த்து கொஞ்சம் முன்னுக்கு அடி எடுத்து வைக்கின்றன. ஆனால் நான் பார்த்த எந்தப் படமும் "பார்க்கலாம்" என்று சொல்வதற்கு இல்லை. ஒரு படம் பார்த்துக் கொண்டு இருந்தபோது வெறுப்பில் அப்படி இப்படி அசைந்து கொண்டு இருந்தேன் (அட எனக்குப் பின்னாலும் ஆக்கள்...) உடனே பின்னால் இருந்தவரிடம் திரும்பி மறைச்சுப் போட்டன் மன்னிச்சுக் கொள்ளுங்கோ என்றேன். அதற்கு அவர் முடிஞ்சா முழுக்க மறைங்கோ என்றார்.

ஏன் இந்த நிலை? என்று கேட்டால் தமிழ்நாட்டுச் சினிமாவின் தொழில்நுட்பத்திற்குக் கிட்டே நெருங்க ஏலாது ஐசே! என்பார்கள். அப்படியா! சரி அப்படி அவர்கள் என்ன செய்துகொண்டு இருக் கிறார்கள்? ரஜினி நடந்து வரும்போது காலின் கீழ்ப்பகுதியில் நெருப்புப் பொறி பறக்கிறது. கிரபிக்ஸ் பூக்களுக்கிடையில் காதலர்கள் டுயட் பாடுகிறார்கள். இந்த அளவுக்கான தொழில் நுட்பத் தேவை எமக்கு இருக்கிறதா? அல்லது இருந்தாலும் இப்படியான சீன்களுக்கான தேவை எமக்கு இருக்கிறதா?

சரி அதை விடுவோம். அழகி, காதல், ஆட்டோகிராப், போன்ற படங்கள் வெற்றி பெற்ற தற்கும் நெருங்க இயலாது என்று கூறப்படும் அந்தத் தொழில் நுட்பத்திற்கும் இடையே எந்த அளவிலான தொடர்புகள் இருக்கின்றன. மேற்சொன்ன படங்களுக்கு அடிப்படைத் தொழில் நுட்பமே பயன்படுத்தப்பட்டது. ஆக சினிமா எடுப்பதற்கு அடிப்படைத் தொழில் நுட்பம் இருந்தாலே போதுமானது.

இப்படி வேண்டுமானால் சொல்லலாம் "எங்களுக்கு" திரைப்படம் உருவாக்கல் தொடர்பான அனுபவ அறிவு குறைவு. அல்லது இல்லை. இதனால்தான் இவ்வளவு சிக்கலும். கதை, திரைக்கதை, இயக்கம் மூன்றிலும் கவனம் எடுத்தால் கூட பார்க்கக் கூடிய ஒரு படத்தினை உருவாக்கலாம் என்பது என் நம்பிக்கை.

ஆனால் சிலர் என்ன செய்கிறார்கள். தங்கள் திரைப்படத்திற்கு வித்தியாசமான முறையில் விளம்பரம் தேடிக் கொள்கிறார்கள். அதாவது தமிழர்களுடன் தொடர்பான உணர்வுகளைத் தங்கள் தனிப்பட்ட உற்பத்திகளுடன் சேர்த்து விடுவதே அம்முறை. தமிழ், விடுதலை, போராட்டம், போன்ற சில விடயங்களை சம்பந்த மில்லாத தம் உற்பத்திகளுடன் ஊறுகாய் போல் சேர்த்து அவற்றினை ருசி பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள் படைப்பாளிகள்.

உதாரணத்திற்கு மாவீரர் துயிலும் இல்லம்! புலம்பெயர் திரைப்படங்களில் காண்பிக்கப் பட்டுள்ளது. காண்பிக்கவும் படும். அதை யாரும் காண்பிக்கக் கூடாது என்று சொல்ல முடியாதுதான்! ஆனால் அப்படியான இடங்களை தங்கள் லாபத்திற்காக அல்லது ஏதோ சுற்றுலாத் தளங்கள் போல படங்களில் காட்டுவது சரியா என்று தெரியவில்லை. அதைவிட அப் பிரதேசம் சென்று அதனைப் படம் பிடிப்பதன் நோக்கம் என்ன? சினி ஸ்டைலில் Feeling காட்டுறீங்களா? இல்லை Film காட்டுறீங்களா? என்றுதான் கேட்கவேண்டும்.

வெளிப்படையாக சொல்ல வேண்டும் என்றால் இப்படிச் சொல்லலாம் "இந்தப் படைப்பாளிகளுக்கு தங்கள் படைப்புக்கள் மேல் நம்பிக்கை இல்லை". இப்படி நான் எழுதுவதால் அவர்கள் என்ன சொல்கிறார்கள், படம் எடுப்பதில் உள்ள சிரமம் அறியுங்கள். பின்னர் எழுதுங்கள் உருவாகும் புலம் பெயர் தமிழரின் திரைத் துறையை முளையிலேயே கிள்ளி எறியாதீர்கள்.

நான் என்ன சொல்கிறேன்; உருவாகும் துறை ஒழுங்காக உருவெடுக்க வேண்டும் என்றால் இப்படி எழுதத்தான் வேண்டும். இல்லை என்றால் தென்னிந்திய சினிமா போல் C கிளாஸ் ஓடியன்சுக்குத்தான் படம் எடுக்கும் நிலை வரும் புரியவில்லையா? 3 சண்டை 2 கானா கொஞ்சம் நகைச்சுவை இப்படி ஒரு "துறை" உருவாகுவதற்கு அது உருவாகாமல் இருப்பது மேல்.

பண்ணும் முயற்சி

எல்லாம் பயனுற

ஓங்குமங்கே

எண்ணிய எண்ணம்

எல்லாம் எளிதில் வெற்றி

எய்தும்!

# டும் டும் டுமீல் டுமீல் புர்புர் புஸ்புஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்

# இதோ அதோ இதோ கோணல் மீண்டும்!!!!!!!

றோ..கரா! றோ..கரா!! ஓம் கோவில் உண்டியல் நாம நாமக!!

ஐயோ! அய்யய்யோ!! ரோதனை தாங்க முடியவில்லையடாப்பா!! மாற்றுக்கருத்து! மாற்றுக்கருத்தாளர்கள்!! பூ..... அப்பழுக்கற்ற தங்கங்கள்! கலக்கிப் போட்டு வடிச்சால் .......... சோஓஓ...... ம்ம்ம்ம்ம்ம்ம்..........

டக்கிலசு, கோணல் கருணா, ஆனந்தசங்கரி, கதிர்காமர், பரந்தன் ராசன், சித்தாத்தன் மற்றும் எச்சிலிலைகள் நக்கும் புலத்தில் ஒரு நாலும். ஐயோஓஓ....... உலகத்தில் எங்கேயும் இப்படியான கொள்கைச் சிங்கங்களைக் காண முடியாது!!!! சோஓஓஓஓஓஓ..........

..ஒண்டுண்டால் சூழைமேட்டில் பொம்பளை களுக்கு ..கொடுக்கப் போய், அடி வாங்கி, சூடு நடாத்தி, கொண்டு சிறை சென்று வந்த சிங்கம். இண்டைக்கு புலிகளின் பெயரால் உட்கட்சிக் கொலைகள் செய்து கொண்டு மகேஸ்வரி, சிறீ, சபாரட்ண, சந்திரகாச, தேவானந் தாவிற்காக ஒகோ அரசியல் நடாத்துகிறார்.

...இந்தக் கோணல் இந்திய பெண் பத்திரிகை யாளருக்கு ..கொடுக்க வெளிக்கிட்டு றோவை கட்டிப் பிடிக்கப் போய், இண்டு துண்டைக் காணோம், துணியைக் காணோம் என எம்பிட்ட இடத்தில் எச்சிலிலை நக்கி வாழும் ஈன வாழ்க்கை. அதிலும் இந்தக் கோணல்தானம் இப்போ மாற்றுக்கருத்தாளர்களுக்கு கிங்காம்!!!!!!!!! ஓஓஓஓஓ.....

...யாழ்ப்பாணத்திலை லெக்ஸன் கேட்டு அடிச்சுத் திரத்தப்பட்ட இந்த பல பெண்களையுடையவருக்கு இன்று ஜாதிகெலவும், ஜேவிபியும் தானாம் நண்பர்கள்! புத்தனைத்தானாம் அதுகும் தலதாமாளிகை சென்றுதானாம் கும்பிடுகிறார். அற்புதம்! அற்புதம்!! இன்று இந்திய றோவின் செல்லப்பிள்ளை வேறு! பரந்தன் ராசுவின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளராம்! இனம் இனத்தோடைதானாம் சேருமாம். பதவிக்காக, கதிரையைக் காப்பாற்ற எதையும் செய்யும் அரசியல் உறுதியுடையவராம்! கொஞ்சக் காலத்திற்கு முன்னம் சபாநாயகர் பதவிக்காக கூட்டணியையே கைவிட வெளிக்கிட்டவராம்!! ம்ம்ம்ம்ம்.........

...கட்டைக்குப் போற வயதிலும் கதிரையை காப்பாற்ற கண்டும் மாடும் பெரும்பான்மையினத்தில் அவிட்டவராம். எவ்வளவு நக்கியும் பிரதம மந்திரி கனவு காற்றோடு போய்விட்டதாம்! எண்டாலும் நக்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ் தொடருமாம்! அவ்வளவு இனப்பற்று!!! நாள் செல்ல மாடும், கண்டும் இடர என்ன செய்வாரோ தெரியாது??? ம்ம்ம்ம்.........

...மற்றது மாட்டுக்களவு, கூரையுடைப்பு, நெல்லுமூட்டைக்களவு என பரந்தன், கிளிநொச்சி யில் பிரபலமான அரசியல்வாதி!!!! இந்திய றோவின் ஒரு காலத்தில் தமிழ் மக்களின் பிரட்சனையை தீர்க்க தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல் தலைவராம்!!! தூள் கடத்தல், ஆள்கடத்தல்தானாம் இவரின் அரசியல் வேலைத்திட்டம்! உப்ப்ப்ப்ப்ப்ப்ப்...........

..அந்தக் காலமாம் லண்டனிலை 24 மணிநேரமும் தண்ணியில் மிதந்து திரிந்த ஒரு வேலையற்ற மனிதராம்! உமாமகேஸ்வரனை ஆள்வைச்சுப் போட்டு தலைமையை எடுத்த மனிதராம்! இண்டும் தண்ணிதானாம் அவரின் முக்கிய கொள்கை! சந்திரிக்காவின் எச்சில் பணத்தில் கொழும்பில் ராஜபோகம்! டக்லஸ்தானாம் உயிர் நன்பனாம்! வேறொன்று மில்லை டக்லஸுக்குப் போடவேண்டிய ஈபிடிபிக்களை இவர் போடுவராம்!!! இவருக்குப் பிடிக்காத புளொட்டுக்களை டக்லஸ் போடுவராம்! அற்புதமான மாற்றுக்கொள்கை!!! ம்ம்ம்ம்.......

உதுகள் போதாதற்கு உதுகளின் எச்சிலிலைகளை நக்க புலத்தில் கொஞ்ச மாற்றுக்கருத்தாளர்களாம்!!! என்ன அவனைச் சுத்தி இவனைச் சுத்தி இன்சூரன்ஸை சுத்தி ஒரு வானொலியாம்! மற்றது இரண்டு மூண்டு இணையத்தளங்களாம்!! உதெல்லாம் என்னத்திற்கு? உங்கே யாரும் தேசியத்திற் காதரவாக வேலை செய்தால் காட்டிக் கொடுக்கத்தான்!

உந்த வயல்களிலாம் நெல்லு வளரேக்க புல்லும் நெல்லை மாதிரியேதானாம் வளருமாம்!! பார்க்கவும் ஒரே மாதிரித்தானிருக்குமாம்!! ஆனால் கடைசி மட்டும் விட்டால் என்ன நடக்கும்???? ஒரு வேலை புல்லு நினைக்குதோ தெரியாது எனக்கும் வயல் சொந்தம் தானெண்டு?????? ஆனால் விவசாயிற்குத் தெரியும் எங்கே அறுவடை மட்டும் எது வயலில் இருக்க வேண்டுமென்று!!!!! மருந்தடித்தோ, வெட்டியோ அழிக்கத்தான் முயல்வான்!!!! கொஞ்சம் தப்புந்தான்!!! அதற்காக அழிக்காமல் விடலாமோ???? விட்டால் நெல்லு அறுவடை இருக்குமோ???? அறுவடை முடிய புல்லுகளை வயலில் விடுவான் பின் மாட்டிக்குத்தானென்று!!!!!!! ...

ஓம் மாற்றுக்கருத்து நாமக!

ஓம் மாற்றுக்கருத்தாளர்கள் நாமக!

கோவில் உண்டியல் நாமக!

ஓம்! ஓம்!! றோ..கரா! றோ... கரா!! ஓம்! ஓம்!!

onlonkaruna@hotmail.com

**இதோ அதோ இதோ ......**
**டும் டும் டுமீல் டுமீல்**
**புர்புர் புஸ்புஸ்ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்**

ஒரு பேப்பர்
ORU PAPER

# Further Memories of Jaffna

By Vellaipuli

*(Continued from previous issues)*



There was also the body of a teenaged boy at the temple entrance.

Inside the temple, we found three men whose injuries could be treated and they were put on a mattress in the rear of the pick-up. After driving as fast as the pot-holed lanes would permit; blue strobe light on; headlights flashing; and horn blaring, we were waved through junctions by LTTE troops until we eventually reached the hospital. There, we were met by the UN representative who told us that all the hospital porters had left and that we would have to stretcher the wounded men into the emergency ward. That exercise nearly saw me admitted too!

## Deafning mine

That evening, shelling began around 10.00 pm and various types of ordinance were used. Many of the shells were of a type that exploded in the air with a deafening noise. Whilst frightening people and making them move, casualties were avoided. Other shells were of a more 'traditional' nature, targeting LTTE troops and bases, and I heard many of these 'whistling' as they passed overhead. How I slept that night, I will never know, as the building was shaking as shells exploded as close as 500 metres to either side of our compound. Luckily, we had fitted sticky-tape to all the windows to prevent injuries from flying glass. When I awoke up in the morning, the shelling continued unabated and I went to the entrance to our premises and was struck by the absence of people and vehicles. Animals, which had been abandoned by fleeing families, wandered about in search of their owners and their next meal. It had a very eerie feeling about it – Jaffna had become a 'ghost town'.

## Made an 'English Lunch'

What do you do in such a situation? Everyone had fled and the air was filled by the continuous noise of artillery fire. I decided that I would sit in my 'back garden' – a banana and papaya 'plantation' I had created in my spare time – and drink copious amounts of arrack and cola whilst listening to 'the three tenors' at maximum volume. I even went into the kitchen and made an 'English' lunch buy my nerves were so strung out, I couldn't eat it. I opted for the liquid lunch! That afternoon, I had a radio message from my Colombo HQ telling me that I too must now move to the Subash hotel.

In the November of 1995, after we had fled from Valikamam and set up our operations in Point Pedro, I was due to take a couple of weeks' leave and had bought my ticket for a Thai International flight to Bangkok.

On arrival at Bandaranaiyaka airport I moved into the security clearance area and presented my opened bag for inspection. The employee while checking my bag, removed a packet of photographs and negatives which I was taking to show friends in Thailand.

Having looked through the photos he waved to a group of men standing nearby who came over and, after studying the photos, waved for another group of men to come and examine them. After some discussion, I was asked where the photographs had been taken. "Jaffna", I replied. "And how did you get to Jaffna?". "I live and work there", was my response. They asked me to accompany them to an office where they identified themselves as Airport Security Police and NIB (National Intelligence Bureau).

The various officers then proceeded to snatch photos from each other and one asked me if I was going to hand them to the Thai media to discredit the GoSL. I told them that what I had seen with my own eyes and what I could tell with my own tongue, would be far more damaging than what was contained on the photos. They were most concerned about a photo of the Subash Hotel- taken when we had to move there when our Rajavithi HQ became too close to the 'front line'. What I didn't know was that after we had left, the Subash Hotel had been taken over by the SLA as one of their main HQ. They were also interested in the photos of the Arialai bombing, including the photos of the dead goat and the severed arm of the young woman mentioned earlier. " Who did this?" they asked, "Was it the LTTE?" They were not happy to be told that the damage had been done by aerial bombardment and that the only people possessing aircraft was the SLAF!

> *Animals, which had been abandoned by fleeing families, wandered about in search of their owners and their next meal*

At that point, I was getting anxious about missing my flight and the Thai International manager was already dubious about this 'suspect' passenger who was booked on his flight. The various 'sleuths' assured him that I was 'OK' and that I would soon be allowed to board and, to hurry things along, told them that they could keep the negatives and any of the prints they chose.[I did not tell them that I sent my films to a friend in the UK who had the films developed and who ordered two sets of prints - one to stay in the UK and one, with the negatives, to return to me in Sri Lanka!]. They did one more viewing of the photos, gave me what they didn't want, and told me I was free to go. "I haven't passed through passport control and obtained my exit stamp" I told them, "and what have you done with my ticket?" Suffice it to say that eventually, everything was sorted out and it wasn't until the plane was in the air that I was finally able to relax. I looked at the photos I had been given back and noticed that the most incriminating one – the severed arm of the young woman – had been returned to me. They had kept the one of a dead goat!

## Oraganisation's Cat

One of the responsibilities I had in taking up my post in Jaffna was the care of the organisation's cat – Paddu(Tamil for silk). Paddu was a lovely cat even though she had an identity crisis – she thought she was a dog! She literally followed me wherever I went and always accompanied me up the garden to the wall of our compound, where I used to talk to passers-by in Rajavithi, at the end of each day's work. Paddu would jump up on the wall and be greeted by home-going workers too.

At one point, Paddu started acting strangely and I considered taking her to the vet until one of my staff pointed out that she was pregnant! From then on, I fussed about like any other 'father-to-be'. As she grew larger, I made a secure 'hide-away' from two empty cardboard boxes and padded the base with an old mosquito net. Paddu sniffed around it, poked her nose inside and gave it no more regard – that is, until the day she gave birth! It was as though she instinctively knew why I had made the 'maternity ward' as, after some rather animated meowing, she went into the box and gave birth to three kittens.

As the kittens grew, they became a real joy to watch as they explored their surroundings and got up to the mischief that all kittens, puppies and young children get up to. They used to jump up on my desk and sit in the filing trays – the reason I named them 'In', 'Out' and 'Pending'!

The kittens went to various homes and were abandoned when the mass exodus of Valikamam took place. Paddu went wherever we did – the Subash Hotel, the night out in the 'bush' and the school premises and house in Point Pedro. People say that when a family moves home, their cat will often travel back to the old house – not Paddu! She knew where she was well off and maybe the bombing and shelling, that was driving our journey, played a part also!

> *They used to jump up on my desk and sit in the filing trays – the reason I named them 'In', 'Out' and 'Pending'!*

One afternoon, at our new Point Pedro HQ, I returned to my room and found Paddu sat on a table, in front of the window, looking up towards the ceiling. At first, I couldn't make what the cat was watching but, as my eyes became accustomed to the gloomy room, I easily made out the head of a snake! Around the upper wall was a sort of guttering and the snake had decided that this would make an ideal resting place for it's afternoon siesta. I called the 'watcher' and asked if he could come and look at a snake in my bedroom and tell me if it was dangerous. The 'watcher' immediately sought a long bamboo pole, tied a paraffin-soaked rag to it's end and came with me back to my room. After removing Paddu, he pushed the rag towards the snake's head and I was amazed, as the snake dropped onto the table and shot out of the window, that it was about four to five feet long! As it was not a poisonous variety, I persuaded the 'watcher' not to pursue and kill it.

*(Continued on page 29)*


**Quotation / cover provided over the phone**

**No more proposal forms to complete**
**No more immediate payment**
**No more Direct Debit Mandate to complete**
**No more claim form to fill - All the details are taken over the phone.**

But Immediate Quotation at a competitive Premium from leading Insurer and Instant Cover

Please ring us for a friendly service **020 8763 2221**

**P.SRINIVASAN** 32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH

PENSION * LIFE * SAVINGS * MORTGAGES * COMMERCIAL LOANS

Fax: 020 8763 2220

E-Mail: sri@armassociates.co.uk www.srinivasan.co.uk

**Home Insurance**
Building and Contents Insurance including Let Properties
**Term Assurance / Critical Illness**
Level Term, Mortgage Assurance and Family Income Benefits
**Retailer, Shopkeepers & Liabilities**
All types of Shops Including Jewellery Shops, Self-Employed Business.
**Mortgages / Re-Mortgages -**
**Decision in Principle/Virtual offer over the phone**
All types of mortgages including Self-cert and buy-to-let.
All circumstances will be considered

*ARM* Associates FSA Financial Services Authority

Authorised and Regulated by the Financial Services Authority

# Kunasekeram Nesiah - Life and Vision

By: J.J.Atputharajah

The centenary year of the late Mr. K. Nesiah fell on the year 2003. He led a simple life with a great vision. He was for a long time lecturer in Education at the University of Ceylon, Peradeniya and then retired in the sixties. He lived in Jaffna till the end of his life in 1993.

He hailed from Kaitadi but his ancestors were immigrants from Malaysia. He married the daughter of Cannon Somasunderam who was a dedicated servant of God in the early part of the 20th century.

## Ghandian way of Life

Mr. Nesiah was a man of firm convictions. He was a follower of Mahatma Gandhi and adopted the Gandhian way of life. He made it a commitment to lead a simple life and was particular in wearing the national dress. He was a person who believed that money should not be spent unnecessarily on purchasing expensive materials. Nesiah practised austerity in all aspects of his life. His contention was that there are many people in the world who suffer from lack of their basic needs and therefore one should save whatever he can and help the poor. He has been helping several social rehabilitation projects like the Kaitadi School for the Deaf and Blind and the Christian Orphanage run by Ms. Hutchchins at Klinochchi.

Having been a lecturer in Education, Nesiah continued to have an alert interest on current educational issues. With a B.A honours degree, he was selected by Professor Green who had gauged his intellectual capacity at the interview. He had the knack of remembering volumes of facts and can speak fluently on any aspect of education. He participated in national and international conferences and seminars on education. He had written research papers in all major milestones in the history of education in Sri Lanka like the nationalization of schools, introduction of Swabasha as the medium of instruction, vocational education and the Zonal system.

## Pioneer in Education

Nesiah believed in a Sri Lanka that is socially and nationally integrated. He was a pioneer in the field of social studies as a subject in the curriculum. Being impressed by the theories of education put forward by John Dewey, Nesiah asserted that the children should be presented with an integrated social knowledge instead of compartmentalizing it into Geography, History, Sociology and Civics. It is through the efforts of educationalists like him that social studies has now become a subject in the curriculum up to the G.C.E ordinary level, displacing the traditional subjects._ which would ensure a life -centred education.

His view for Sri Lanka is that it should remain united through social, cultural and national integration. He shunned caste distinctions and gave shelter in his own home for depressed- class children so that they could attend prestigious schools like St. John's- from where they were debarred in the past. He participated in functions at 'harridan' homes to build their social esteem and acceptability. He practised 'Gandhism' and adopted it to suit Sri Lankan conditions. A person helped by him later became the head of the Primary Section of St. John's. Much to his credit, the members of the so-called low caste later entered the fields of medicine and engineering which were earlier monopolized by students from affluent homes.

Nesiah was one of the philosophers behind the Federal party led by the late S.J.V Chelvanayagam. He was an active member of the "think tank" of the Federal party which had its discussion meetings at his very home. He believed that Federalism was the solution to Sri Lanka's burning ethnic problem. Federalism will ensure the safeguard for all the component ethnic groups. Sri Lanka being a small country is not suitable for partition and therefore every effort should be made to preserve its unity through a political concept. He preferred Federalism to any other solution.

## Man of Principles

The pivotal strength of Nessiah's emotional and spiritual well being was self-reliance. He was a hard nut who always struck to his principles and convictions. After his retirement he continued to live in his mansion at Somasunderam Avenue. When his sons wanted him to move to Colombo and live with them he refused. During the time his wife became feeble and weak, he is the one who looked after her. Even at the ripe old age of 90, he could draw water from his well and bathe(rope and bucket). His stamina could be compared to the 'kited campy" which has the capacity to survive in a dry and rugged terrain. When the I.P.K.F took over Jaffna, they wanted the people in Chundikuli to go and take shelter in schools close by. Nesiah did not budge. He continued to stay at home during the turmoil and survived dangerously. He had the indomitable courage to live by his convictions. He lived alone in his house during the latter stages of his life. A woman came to cook for him during the day time but he lived boldly in his huge mansion without any help. He lived by his faith and courage which helped him throughout his life. I happened to be his kinsman and neighbour. While conversing with him a few days before his demise, I mentioned that John Dewey, the American educationalist died at the age of 93. It was unfortunate that he became ill and died just a few days after at the age of 93. He was a legend of his times- a Tomlin who had the making of a 'Gandhian type philosophy'. His life-style should be a shining example for the future generations of Tamils and give them the inspiration to lead a courageous and purposeful life.

# Vimal Weerawansa cautions....

JVP Propaganda Secretary, Vimal Weerawansa, who was confident that the President would not sign the joint mechanism, is after all a clever chap.

"We must be careful about our dealings with the SLFP in the future. We must make sure we don't drive the President to the point where she has to dissolve the parliament. If she dissolves the parliament or the WPC we will collapse. If there is a general election we won't be able to get more than 17 or 18 seats. At the WPC we will be reduced to 10 or 12 seats from 23. For at least three months, we need to retain our power in the councils and go on without angering the President."

*(Sunday Leader- June 26)*

# ...to withdraw the blessings!

Venerable Dambara Amila Thero who staged a fast-to-death campaign a week ago against the signing of the P-TOMS between the UPFA Government and the LTTE was speaking at a press briefing held at Hotel Nippon in Colombo.

"President Chandrike Bandara naike Kumaratunge is the number one enemy of Buddhism in Sri Lanka," said the National Bhikku Front (NBF), an organization of Sinhalese Buddhist monks of Sri Lanka in Colombo. The NBF urged the top Buddhist Prelates to withdraw the blessings they gave Ms Kumaratunge as head of the State and to declare as a non-Buddhist.

Dambara Amila Thero who was forcibly removed from the venue by Police to the Colombo hospital further said that the President had earlier agreed to discuss the P-TOMS with the Chief prelates of Sri Lanka and obtain their explicit blessings before signing the agreement.

"Ms Kumaratunge did not keep her pledge and went against the Buddhist hierarchy of the country," he said

*(TamilNet)*

# Why did she do it?

This is what Gamini Weerakoon, a regular columnist in Sunday Leader writes under the caption ' What's Chandrika's card?'

"It simply could not have been her commitment to alleviate the sufferings of the victims of the tsunami that stuck this island six months ago.

She has not evinced any interest before of working together with the LTTE that tried to kill her not many months ago. In fact she used all her powers as executive president to throw out the UNP government of Ranil Wickremesinghe for 'collaborating and surrendering' to the demands of the LTTE.

The answer could be in the psychological make up of Chandrika Kumaratunga; her penchant to kick out those who had helped her to power.

Take the sprightly young girl, imbued with revolutionary politics of the 1960s and '70s who gained automatic access to the top rungs of her mother's political party. Very soon she and her husband were crossing swords with her mother and brother. She then left her ancestral political party and formed a Bahujana Samajawadi Party (BSP), a radical leaning party with young revolutionaries of that time such as Ossey Abeygunasekera, Rajitha Senaratne . Sarath Kongahage.

Ossie is now dead but Senaratne and Kongahage are her bitterest opponents among many others who were in the BSP. On her return from exile in London after fleeing from the JVP that killed her husband, she once again joined her mother's party displacing the hereditary crown prince of the party, Anura Bandaranaike from the position he was comfortably ensconced in. Whether our theory of Chandrika's ingrained political gene of kicking out those whom had loved her best is correct or not, it is a theory worthwhile pursuing. We commend it to those sociologist think tanks who are obsessed with 'Sinhala chauvinism'.

On the other hand did our new overlords, the 'international community' twist the arm of this once intrepid socialist? Or does she have something quite potent tied up in her saree pota?"

*The Sunday Leader, June 26,*



ஸ்ரீ சிவசங்கர ஜோதிடம் ASTRO - PALMIST

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள ஸ்ரீ முரளிதர சாஸ்திரி அவர்கள்

உங்கள் சகல பிரச்சனைகளும் தீர்த்து வைப்பார்



கைரேகை, முகநாடி ஆகியவற்றைக் கொண்டு, குறிப்புப் பார்த்தும் உங்கள்
நிகழ்காலம், வருங்காலம், வியாபாரம், கல்வி, குடும்ப விவகாரங்கள்,
தேகசுகம், எல்லாம் சரியாக கணித்துச் சொல்லப்படும். அத்துடன் சாந்தி பூஜா,
இலட்சுமி பூஜா, பிராத்தனைகளும் கண் திருஸ்டி, தோசம் நிவர்த்தி செய்தும் தரப்படும்.

சாஸ்திரிகளை சந்திக்கும் இடம்
Ganapathy Cash & Carry
44 Ealing Road
Wembley, Middlesex
HA0 4TL

திறந்திருக்கும் நேரம் காலை 9.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை

ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

*ஆசிரியர் குழு:*
சேயோன் - திரு
சிறி - சுஜீத்

*பொறுப்பாசிரியர்*
- கோபி -

*மக்கள் தொடர்பு*
பாலா - செல்வி

*விளம்பரம்*
செல்வி - மைதிலி - ஜெனி

*அச்சு*
அபிஷா - சுகந்தா - தர்சினி

*வடிவமைப்பு*
jasmine studio

*முகப்பு வடிவமைப்பு*
seven zero graphics

*விளம்பர வடிவமைப்பு*
ரஜீவன் - கிரி

*இணையத்தள வடிவமைப்பு*
ரஜீவன்

*தமிழ் எழுத்துரு உதவி*
சுரதா யாழ்வாணன்

*நிதி – நிர்வாகம்*
செல்வி - முருகானந்தன்

*வழங்கல்*
உதயகுமார்-கதிர்-கரன்

**உங்கள் தொடர்புகட்கு:**

*தொலைபேசி* (Tel)
020 8640 4604
020 8286 9327

*தொலைநகல்* (Fax)
020 8640 6972

*ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:*

பணிமனை முகவரி
ORU PAPER
45'B' CRUSOE ROAD
MITCHAM CR4 3LJ
SURREY

*மின்னஞ்சல்:*
info@orupaper.com
இணையம்:
www.orupaper.com


Orupaper is a Tamil Newspaper Published fortnightly from London by Jasmine Studio Ltd. The views expressed are those of the contributors and do not necessarily reflect the views "Oru Paper" or its publishers. Information (including advertisements) presented in this publication is compiled from the sources believed to be accurate. However the publisher assumes no responsibility for errors or omissions.

# சற்று மாறுதலுக்காக

**சேயோன்**
*(ஒரு பேப்பர்)*

## மனமுண்டானால் இடமுண்டு

எதிலிருந்து தொடங்குவது? இதுதான் எப்பொழுதுமே என் பிரச்சினை. சொல்லுவதற்கு நிறைய விசயங்கள் முட்டி மோதிக்கொண்டிருக்கும். ஆனால், எதிலிருந்து தொடங்குவது எப்படித் தொடங்குவது?

இப்போதும் அப்படி ஒரு முக்கிய விசயம் சொல்ல வேண்டும், ஆனால் சொல்ல முடியாது தத்தளிக்கின்றேன். யாருக்கும் நோகக்கூடாது என்று கவனமாக சொற்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். அதையும் மீறி யாரையாவது சொட்டாவது, நோகப்பண்ணிவிட்டால், மன்னித்துவிடுங்கள். இப்படி மன்னிப்பு கேட்பது மானுட விரோதிகளிடம் அல்ல.

பலங்களும், பலவீனங்களும், தகுதிகளும், தவறுகளும் மலிந்த மனிதர்களிடம் மாத்திரமே! மானுட விரோதிகளிடம் எனக்கு இம்மியளவும் இரக்கம் இல்லை. வார்த்தைகளால் மிக வையத்தான் விரும்புவேன். சரி, விசயம் இனி.

ஒரு கதை உலாவுகிறது. வதந்தி என்று சொல்லலாம் வெளிநாடுகளிலிருந்து செல்பவர்களிடம் பணம் அறவிடப்படுகிறதாம். ஒருசில தமிழர்களின்? ஒப்பாரியாக இது இருக்கிறது என் முதற் கேள்வியே அதில் என்ன தவறு? என்பது தான். மயிலே மயிலே இறகு போடு என்று கேட்ட போது இறகு போட்டிருந்தால் இந்த பிரச்சனை இல்லைத்தானே?

எங்கள் இறகை ஏன் இவர்களுக்கு போட வேண்டும்? என்று நீங்கள் கேட்டால்.? சரி சொல்கிறேன் இந்தப் போர் யாருக்காக நிகழ்கிறது? ஏன் நிகழ்கிறது? எதற்கு நிகழ்கிறது? வரலாறு முழுதும் புரட்சிகள் மக்களுக்காகவே வெடித்தன. இந்தப் புரட்சியும் மக்களுக்கானது. அதை நான் மனதார நம்புகிறேன் நீங்களும் நம்புகிறீர்கள்! அப்படி நம்பிய படியால் தானே ஆனையிறவு அடிபட்ட போது ஆகாவென்று ஆர்ப்பரித்தீர்கள். அப்போது அள்ளி, என்றில்லா விட்டாலும் கிள்ளி கொடுக்கவாவது சித்தமாயிருந்தீர்கள். இது மக்களுக்கான பரட்சி என்பது குறித்து சொல்ல இன்னும் நிறைய உண்டு. இடம் போதாமையால் விடுகிறேன?

இது எங்கன்ர மண், எங்கன்ர நிலம், எங்கன்ர மொழி, எங்கன்ர போர், பதினேழாயிரம் பேருக்கு மேற்பட்டோர் இப் போரில் வித்தாக விழ்ந்தார்கள். என்றால் அவர்கள் எங்கன்ர பிள்ளைகள். அத்தனை எங்கன்ர பிள்ளைகளும் உயிரைக் கொடுத்து விடுதலை விளக்கை அணைக்காமல், அணைய விடாமல் வைத்திருக்கவே விரும்பினார்கள். உயிரைக் கொடுத்தோருக்கு முன்னால் ஒருசதம் கொடுக்க ஏன் தயங்?கவேண்டும?

எங்கள் விடுதலையை அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும், சிறீலங்காவுக்கும், விற்பதற்கு எத்தனை தூரோகிகள், எத்தனை எட்டப்பர்கள் முயன்றனர். அத்தனையையும் முறியடித்து விலைக்கு விற்க அல்ல, தலையே வணங்காத வீரம் விளங்க வைத்தார்கள் அல்லவா? இந்த வீரத்திற்கு, இந்த தியாகத்திற்கு, ஒரு சதம் கொடுக்க நாங்கள் தயங்குகின்றோம் என்றால் நாங்கள் மனிதர்கள் தானா? கொஞ்சம் சிந்தியுங்கள்.

போர் நிகழ்ந்த காலத்தின் கதைகளை கேளுங்கள். எங்கள் தேசத்தின் புதுக்குடியிருப்பு என்ற கிராமத்தில் சிங்கள அரசு போட்ட குண்டில் சிதைந்த தம் பிள்ளைகளின் உடலங்களை கூட்டி அள்ளினாராம் ஒரு தந்தை இது உண்மையில் நிகழ்ந்த கதை. எங்கள் பிள்ளைகளுக்கு சின்னத்தலையிடி வந்தாலே துடித்து போகிறோம். அந்த தந்தையின் மன நிலையை ஒரு கணம் யோசியுங்கள். ஒரு சதம் கொடுக்கவா தயங்குகிறீர்கள்.?

உண்மையில் கடும் கோபம் வர என் கையைக் கட்டி மிருதுவாகக் கதைக்கின்றேன். ஏன் ஏன்றால் நல்லது நடக்க வேண்டும். உங்களைக் கோபித்து ஒரு புறத்தில் தள்ளி விட விரும்பவில்லை ஒவ்வொரு போராளியினதும் தியாகத்தைக் கேளுங்கள். வித்தான போராளிகளின் காவியங்களை கேளுங்கள். உலகில் எங்கேனும் இப்படி ஒரு வீரம், தியாகம், நிகழ்ந்திருக்குமா? ஒரு சதம் கொடுக்க ஏலாமல் ஒழித்துத் திரிகின்றோம். இது சர்வாதிகாரம் என்று வாய் கூசாமல் சொல்கின்றோம். சொல்கின்ற நாங்கள் மனிதர்கள் தானா?

நமது போருக்கு எதிராக அத்தனை ஏகாதிபத்தியங்களும், அத்தனை வல்லரசுகளும், போதாதற்கு உலகவங்கி ஐ.நா. சபை போன்றனவும் பணத்தை ஆயுத தளபாடங்களை, மூளைவளங்களைக் கொட்டிக் கொட்டிக் கொடுக்கின்றன. எமது போருக்கு எவர் கொடுப்பார்? நம்மை விட்டால் வேறு யார் கொடுப்பார்.

நண்பர்களே, சுயநலமாக இருங்கள் அது பரவாயில்லை. கொஞ்சம் பொதுநலனையும் பாருங்கள். இது நமது தேசம், நமது மக்கள், நமது மொழி, வேறு யாரும் வந்து நம்மை வாழவைக்க மாட்டார்கள்.

காசில்லாத எங்களை கஷ்டப்படுத்துகிறார்கள் என்று ஒரு சிலர் சொல்கின்றனர். மூன்று நேர உணவு, இருக்க இடம், உடுக்க உடை, கல்வி, மருத்துவம், என்று வாழ்வின் உணவு, அடிப்படைத் தேவைகட்கு இங்கு உத்தரவாதம் உண்டு. உயிருக்கே எந்த உத்தரவாதமும் இல்லாமல் வாழ்கிறார்கள் நம் மக்கள். அதை யோசித்து பார்த்தீர்களா?

எத்தனை வகையால் எல்லாம் வீணாக நாம் செலவழிக்கிறோம். மது, சிகரட், வேறு களியாட்டம், கலியாண வீடு, சாமத்திய வீடு, என்று சடங்குகள், கோயில் அர்ச்சனை, கும்பாபிஷேகம் திருவிழா, அரங்கேற்றங்கள், இப்படி எவ்வளவு வீணான செலவுகள். அட வருசம் தோறும் சாய்பாபாவிடம் போய் வரவே நிறையச் செலவழிக்கின்றோம்.

இவற்றை ஒறுத்து, நாள்தோறும், இரண்டு பவுண்களாவது கடைசி ஒரு பவுணாவது சேமித்து எங்கள் தேச விடுதலைப் போருக்கு கொடுக்க முடியாதா? மனச்சாட்சியை தொட்டு சொல்லுங்கள். எங்களால் இயலாதா?

*மனமுண்டானால் இடமுண்டு.*

# எது ஆன்மீகம்? - ஆறுதலாய் இருக்கலாம் வாங்க!!

**செல்வநாயகி**
*(மரத்தடி.கொம்)*

புத்தாண்டு பிறந்துவிட்டது. தொலைதூரத்திலிருந்தும் நண்பர்கள் வாழ்த்துச் சொல்கிறார்கள். எல்லோருமே 'மகிழ்ச்சியான, வளமான, நன்மைகள் பொழியும் ஆண்டாக அமையட்டும்!!' என்றுதான் வாழ்த்துகிறோம். எல்லாப் புத்தாண்டு வாழ்த்துகளுக்கும் இந்த வார்த்தைகளையே பயன்படுத்துகிறோம். நல்ல சொற்களையே பிரயோகித்து வாழ்த்துவது நம் பண்பாடு. அதில் தவறில்லை. ஆனால், வாழ்வின் நிதர்சனம் நாம் நினைப்பது போலவே அமைந்துவிடுவதில்லை. முடிந்தவரை எழுந்துவிட அனுமதிக்கிற துக்கங்களும், எதிர்பார்க்காதபோது வந்து, அடுத்து என்ன செய்வதெனச் சிந்திக்கக்கூட விடாமல் இடித்துப் போட்டுவிடும் துக்கங்களும்கூட வருவதுண்டு வாழ்க்கையில், சுனாமியைப் போல.

வாழ்க்கையில் வெளிச்சம் குறைகிற நேரத்திலெல்லாம் இறைவனைத் தஞ்சமடையாதிருப்பதில்லை பக்தர்கள்.

*'பொடியார் மேனியனே*
*புரிநூலொரு பாற்பொருந்த*
*வடியார் மூவிலைமேல்*
*வளர்கங்கையின் மங்கையொடும்*
*கடியார் கொன்றையனே*
*கடவூர்தனுள் வீட்டத்தெம்*
*அடிகேள் என் அமுதே*
*எனக்கார் துணை நீயலதே'*

என்று பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகளில் இருந்து,

*'என்னென்று பார்க்கவும் ஏனென்று கேட்கவும்*
*இங்கெனக்கெவருமில்லை*
*ஏற்படும் சுகதுக்கம் எதுவந்தபோதிலும்*
*எனக்கிங்கு யாருமில்லை*
*முன்னின்று என்செயல் முடித்திடும் வகையிலே*
*முயல்பவர் எவருமில்லை*
*முயற்சிகள் தோற்கையில் மொழிகின்ற கேலிக்கு*
*முன்னூறு பேர்களுண்டு*
*நின்னையே கதியென்று நின்னையே சரணமென்று*
*நின்பதம் போற்றுகின்றேன்*
*ஊரார்கள் முன்னிலையில் உன்னுறவு நானென்று*
*ஒளிபாது உணர்த்தவேண்டும்*
*ஸ்ரீசக்ரம் மேவியே செல்வங்கள் பொழிகின்ற*
*ஸ்ரீராஜராஜேஸ்வரி'*

என்று சரணமடைந்த கண்ணதாசன் வரைக்கும் தங்களுக்கு ஆறுதல் தரும் உற்ற துணையாகவே கடவுளைச் சித்தரித்து எழுதும் பாங்கினை நம் பக்தி இலக்கியத்தில் பார்க்கிறோம். எல்லா சோகங்களுக்கும் ஆறுதல் தேவைப்படுகிறது. மருந்திடப்படாத காயங்கள் இருக்கலாம். ஆனால் மருந்தைத் தேடாத காயங்கள் இருக்க முடியுமா என்ன?

கண்களுக்குப் புலப்படாத கடவுள் மட்டுமில்லை நாமும் மருந்தாகலாம் மனமிருந்தால்.

சில வருடங்களுக்கு முன்பு, வாரப் பத்திரிகை ஒன்றில் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள மேலூரில் மனநல மருத்துவமனையும், காப்பகமும் நடத்திவரும் மருத்துவர் ஒருவர் அளித்திருந்த பேட்டியின் கடைசி வரிகள் இவை:- 'எந்த ஒரு மனிதனுக்கும் தன் இதயத்தில் கொஞ்சம் கூட மிச்சம் வைத்துக்கொள்ளாமல் முழுமையுமாகத் தன்னைப் பகிர்ந்து கொள்ள ஒரு ஆறுதலான சகமனிதன் இருந்தால், இங்கு மனநலக் காப்பகங்கள் தேவையிருக்காது'. இதோ இப்போதும், சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் மன அழுத்தத்தைப் போக்க அவர்களுக்கு இதமான கவுன்சிலிங் இருந்தால் நல்லது என்று பல உளவியல் அறிஞர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு சின்ன ஆறுதல் வார்த்தை எவ்வளவு மதிப்புமிக்கது என்பதை நாம் அனைவருமே அறிவோம்.

இதை எழுதிக்கொண்டிருக்கிறபோது நினைவுக்கு வருகிறது. நான் கல்லூரியில் படித்தபோது, தங்கியிருந்த இடத்தில் 'ரக்ஷா' என்று ஒரு ஆதரவற்ற முதியவர்களுக்கான காப்பகத்தை ஒரு பெண்மணி நடத்தி வந்தார். செய்வதற்கு எதுவுமில்லாத வேளைகளில் அங்கு எட்டிப்பார்த்த என்னை அங்கிருந்தவர்கள் ஈர்த்துவிட்டார்கள். எல்லாப் பாட்டி, தாத்தாக்களும் நண்பர்களானார்கள். அவர்களுக்கென்று நான் எதுவும் செய்ய அப்போது என்னால் முடிந்ததில்லை. ஆனால் கல்லூரிக்குப் போகையில், வருகையில் என் வழியில் அவர்கள் யாரையேனும் சந்திக்க நேர்கையில் 'பாட்டி நல்லாருக்கீங்களா? ஆப்பரேஷனுக்குப் பிறகு இப்ப கண் பார்வை எப்படி இருக்கு? தாத்தா நீங்க மாத்திரை எல்லாம் சரியா சாப்பிடறீங்களா?' என்பது மாதிரி சில நொடிகள் பேசுவேன். இறுக்கமான அவர்கள் முகத்தில் சுருக்கங்களையும் மீறி ஒரு சந்தோஷ ரேகை வந்துவிட்டுப் போகும். அந்தச் சாதாரண அன்பைக்கூட என்னைக் கடந்து போன தேவைப்பட்ட எல்லா இடங்களிலும் கொடுத்திருக்கிறேனா என்றும் என்னைக் கேட்டு வைக்கிறேன்.

*வளரும் . . .*

# வராதே வரவல்லாய்...

கம்பவாரிதி ஜெயராஜ்
*(மல்லிகையில்)*



*இலங்கைக்கான முதலாவது 'றோ' ஏஜன்ட் அனுமான், இராமனால் "இலங்கையை ஓடிப் போய் கொழுத்திட்டு வா" என்று பணித்ததை சித்தரிக்கும் காட்சி. பின்னணியில் கொழுந்து விட்டு எரியும் தாயகத்தையும், சீதைக்கு அனுமான் பந்தம் பிடித்து கொண்டிருப்பதையும் காண்கிறீர்கள்.*

ஒரு நிமிஷம் பொறுங்கள்! இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்க வேண்டாம். உங்களுக்காக இதை நான் எழுதவில்லை. என்னை முறைத்துப் பார்க்கிறீர்கள்? புத்தகம் உங்களுடையதானாலும், கட்டுரை என்னுடையதல்லவா? யார் படிக்க வேண்டும் என நான்தானே சொல்லவேண்டும். இந்த 'ஹூசன்' எப்பவும் இப்படித்தான். உங்கள் முணுமுணுப்புக் காதில் விழுகிறது. நீங்கள் என்ன திட்டினாலும், இந்தக் கட்டுரை உங்களுக்கானதல்ல என்பதுதான் உண்மை. பின் யாருக்கு இக்கட்டுரையெனக் கேட்கிறீர்களா? இந்த மண்ணில் பிறந்து. இன்று உலகெல்லாம் பரவியிருக்கும், என் அன்பான இரத்தத்தின் இரத்தங்களுக்காகவே இக்கட்டுரை. சிலநாள் பலபிணிச் சிற்றறிவு உடைய மனிதர்கள், அறிவிற்காகக் கல்வியென நினைத்த, சில பழைய பைத்தியக்காரப் புலவர்கள் சொல்லியிருக்கிறார்களாம். அதனால்தான், உங்களுக்காக எழுதப்படாத இக்கட்டுரையை, படிக்க வேண்டாம் எனச் சொன்னேன். சரி, நீங்கள் இனி அடுத்த கட்டுரைக்குப் போகலாம்! என்ன இவ்வளவு சொல்லியும், கேட்க மாட்டேன் என்கிறீர்கள். பத்திரிகை படிப்பதையே அறிவென்று நினைக்கும் உங்களை, திருத்தவா முடியும்? இதற்கு மேல் உங்கள் இஷ்டம். காலத்தை வீணாக்குவது என்று நீங்கள் முடிவுசெய்துவிட்டால், அதைத் தடுக்க நான் யார்? கெடுகுடி சொற்கேளாது என்று சும்மாவா சொன்னார்கள். படித்துத் தொலையுங்கள்! உங்களோடு மினக்கட எனக்கு நேரமில்லை. நான் சொல்லவந்ததை, சொல்ல வந்தவர்களுக்குச் சொல்லவேண்டும். நம் செம்பாட்டு மண்ணில் பிறந்து. இன்று தேசமெல்லாம் வேரூன்றி நிற்கும், என் உடன்பிறப்புக்கள்! உங்களுக்காகத்தான் இக்கட்டுரை வரைகிறேன்.

உங்களில் ஓரிருவராவது, இக்கட்டுரையைப் படிப்பீர்கள்தானே? ஏன் கேட்கிறேன் என்றால், 'டொச்' என்றும், 'பிரெஞ்' என்றும், 'இங்கிலிஸ்' என்றும், இன்று பலமொழிகளை வெளுத்து வாங்கும் உங்களுக்கு, தமிழ் இன்னும் ஞாபகத்தில் இருக்கிறதா? என, எனக்கு ஒரு சிறு ஐயம்! ஏன் இந்த ஐயம் என்கிறீர்களா? எல்லாம் உங்களால்தான் ஐயா! அண்மையில், சுவிஸிலிருந்து வந்திருந்த, என் அக்காவின் பேரன், தன் மாமனைப் பார்த்துக் கேட்டானே ஒரு கேள்வி, ஊரே சிரித்துவிட்டது போங்கள். தன் அன்புப் பேரனுக்கு என் அக்கா, ஆசையாசையாய் ஆனை வாழைப்பழம் வாங்கிக் கொடுக்க, அவன் அதைத் தின்னும் அவதியில், குளிக்கத் தயாராய்த் துண்டோடு கிணற்றடியில் நின்ற, தன் மாமனிடம் கொண்டோடிப் போய், பிளீஷ் அங்கிள், வாழைப்பழத்தை ஒருக்கா கழட்டித் தாங்கோ என்று கேட்க, எங்கோ பார்த்துக் கொண்டிருந்த அந்த மாமன், அக்கேள்வியால் பதறியடித்து, இடுப்பிலிருந்த துண்டை இறுகப் பொத்திய காட்சி கண்டு, எங்கள் ஊரே சிரித்தது. வாழைப்பழத்தை உரித்துத் தாருங்கள் என்பதற்குப் பதிலாக, கழட்டித் தாருங்கள் என்கிறது ஈழத்தமிழினத்தின் (f)பொறின் வாரிசு. பாவம்! ரமில்ராய், உங்கள் பிள்ளைகளிடம் அவள் படும்பாட்டைப் பார்த்ததால்தான், மேற்சொன்ன ஐயம் வந்தது. தயவுசெய்து கோபிக்காதீர்கள். எங்களுக்கா தமிழ் தெரியாது? இதோ! உம் கட்டுரையை முழுக்கப் படித்துக் காட்டுகிறோம் என்கிறீர்களா? நன்றி, நன்றி, நன்றி. தொடருங்கள். எல்லாத் தீமையுள்ளும் ஒரு நன்மையுண்டு என்று, அறிஞர்கள் சும்மாவா சொன்னார்கள்? உரிமைக்காகத் தொடங்கப்பட்ட போரால், உயிரிழப்பு, உறுப்பிழப்பு, உடைமையிழப்பு என, பலபேர் அனுபவித்த தீமைகளுக்குள், உங்களுக்கான நன்மை ஒளிந்திருந்தது மறுக்க முடியாத உண்மை. ஈழத் தமிழர்கள் இன்னலுக்காளாகிறார்கள். என, உலகம் முழுவதும் பரவிய செய்திகளால், வளம்மிக்க நாடுகள் பலவாசல் திறக்க, இன்னலுற்றவர்களாய் இனங்காட்டி, மின்னல் போல் உள் நுழைந்தீர்கள். பக்கத்து வீட்டு முருங்கைக்காய் திருட முனைந்து, விழுந்து முறிந்த முழங்கையை, இராணுவத் தாக்குதலில் ஏற்பட்ட விழுப்புண்ணாய் நீங்கள் விபரிக்க, தூதராலயங்கள் பல துடிதுடித்துப் போயின.

தேசத்தைக் காக்க முன்வந்த பல உண்மைப் போராளிகளின், ஒன்றுவிட்ட, ஒன்றுவிட்ட, ஒன்றுவிட்ட, உறவெல்லாம் காட்டி உங்களில் பலர் ஓடித் தப்பினீர்கள். வெள்ளைக்காரனின் பெருந்தன்மையால், உங்கள் கள்ளங்கள் விலை போயின, எது, எப்படியோ? செல்வந்த நாடுகளின் உள்வந்த காரணத்தால், இன்று நீங்கள்தான் ஐயா பெரிய மனுசர்கள். பணம் பத்தும் செய்யும் எனும் பேருண்மையைத் தெரிந்துகொண்டு, பலம் பெற்ற உங்களைப் பாராட்டாமல் இருக்கமுடியவில்லை எங்களைக் கிண்டலடிப்பதற்குத்தான் இக்கட்டுரையா? நீங்கள் கோபப்படத் தொடங்குவது தெரிகிறது. கொஞ்சம் பொறுங்கள். சமூகத்தின் பெரிய மனிதரான உங்களை நான் பகைத்துக் கொள்வேனா? ஈழத்தமிழினத்திற்கு எழுச்சி ஏற்படுத்திய இயக்கங்களே, உங்களுக்கு மரியாதை செய்யும் இக்காலத்தில், உங்களைப் பகைத்துக் கொள்ள நான் பைத்தியக்காரனா, என்ன? உங்களுக்கு நன்மை தருகிற ஒரு புத்திமதியைச் சொல்லத்தான், இக்கட்டுரை வரைகிறேன். தயை கூர்ந்து கோபப்படாமல் பொறுமையாய் மேலே படியுங்கள். டொக்ரராக வேணும் எஞ்சினியராக வேணும், எக்கவுண்டனாக வேணும் என்று யாழ் இளைஞர்கள் கனவு கண்டதெல்லாம் பழைய கதை வெளிநாடு போகவேணும், இஃதொன்றே இன்றைய எல்லா இளைஞர்களினதும் ஒரே கனவு. கனவை உருவாக்கியவர்கள் நீங்கள். யாழ் மண்ணின் அடிப்படையையே ஆட்டங்காண வைத்த, உங்கள் ஆற்றல் கண்டு அதிசயிக்கிறேன். வெளிநாடு போய்ச் சேர்ந்த ஓரிரு மாதங்களுக்குள்ளேயே, கலர், கலரான கார்களுக்கு முன்னின்று, கோர்ட்டோடும், சூட்டோடும், ரையோடும், நீங்கள் அனுப்பி வைத்த புகைப்படங்களைக் கண்டு, யாழ்ப்பாணமே கதிகலங்கிப் போய்விட்டது. அந்தக்கார் உங்கள் சொந்தக்கார் இல்லையாம். பொறாமைக்காரர் சிலர் உங்கள் புகழைக் கெடுக்க முனைந்தார்கள். நாங்களா நம்புவோம்? உங்கள் புகைப்படங்களைப் பார்த்த பிரமிப்பிலிருந்து, நாங்கள் இன்னும் விடுபடவே இல்லை.

பிளேன்ரீக்கும் வழியில்லாமல் காய்ந்து திரிந்த உங்கள் தோற்றத்தில், கோர்ட்டாலும், சூட்டாலும், ரையாலும் ராஜகளையே வந்துவிட்டது போங்கள். உங்கள் வெளிநாட்டு விலாசத்தால், இங்கு எல்லோரதும் மனநிலை மாறிவிட்டது மற்றொரு கூத்து, இங்கிருந்த போது தெரியாமல் சினேகிதர்களோடு நீங்கள் பீடி குடித்ததை, பக்கத்து வீட்டு அங்கிள் வந்து சொல்ல, ஆவேசம் வந்து, உங்களை அடி அடியென்று அடித்து, இல்லாத குலமானம் போய்விட்டதாய் ஏங்கிய, உங்கள் தகப்பனாரும், தாயாரும், லண்டனில், நீங்கள் (f)பாரில் இருந்து எடுத்தனுப்பிய புகைப்படத்தில், கையில் வைத்திருப்பது விஸ்கியா? பிரண்டியா? என, பக்கத்து வீட்டாரைக் கூட்டி, பட்டிமண்டபம் நடாத்துகிற அளவில் முன்னேறி இருக்கிறார்கள் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன். இவனுக்குப் பொம்பிள கொடுக்கிறத விட, என்ட மேள பாழுங்கிணத்தில தள்ளுவன், என்ற உங்களின் மாமா, மச்சானுக்கு பேத்டே கார்ட் போட்டனியே !என்று, இன்றுமகளை அக்கறையாய் விசாரிக்கிறார். இங்கிருக்கும்போது, சொறி நாயை விடக் கேவலமாய் உங்களைப் பார்த்த உங்களின் மச்சாள், உங்களிட்ட இருந்து ஒரு கிழமை கோல் வரவில்லை என்றதற்காக, ஏழு கிழமையா அந்தோனியார் கோயிலுக்குப் போறாவாம். தெரியாமல் முழங்காலுக்கு மேல ஒரு நாள் சட்டை ஏறியதற்காக, தன்ட மகளுக்குக் காலில சூடு போட்ட செல்லம்மா மாமி, இப்ப தன்ட மகள் வெள்ளைக்காரனோட நீச்சல் உடையில குளிக்கிற படத்தை, ஊரெல்லாம் கொண்டு பெருமையாய்க் காட்டுது. ஊரில குறுக்குக் கட்டோட இலுப்பங்கொட்டை பொறுக்கின எங்கட குச்சாச்சி, மகன் கனடாவில இருந்து காசனுப்ப, இப்ப கொழும்பில, மக்ஷியும், 'ஹை ஹீல்ஸ்'சும் போட்டுக்கொண்டு வெள்ளவத்தை மார்க்கற்றுக்குள்ள, றுப்பியல் பவுறாய் என்று சிங்கள வியாபாரி சொன்ன சரப்பிலாக்காயை, நோ நோ, ஐ கிவ் ஒன்லி (f)பிப்ரீன் றுப்பீஷ் எனக் கூறி, இல்லா தன்ர ஆங்கில ஞானத்தை அவனுக்குக் காட்ட, அநியாயமாய் பத்து ரூபாவை அதிகம் குடுத்துட்டு வருகுது. சும்மா சொல்லக் கூடாதையா, அங்க இருந்து நீங்கள் ஆட்டின ஆட்டத்தில, இங்க எங்கட ஆணி வேரே ஆடிப்போனது உண்மையிலும் உண்மை.

இதுகளைப் பாத்திட்டும், எஞ்சினியருக்கும், டொக்டருக்கும் படிக்க, எங்கட பொடியள் என்ன விசரங்களே? யாழ்ப்பாணப் பொடியள் அறிவாளிகளாக்கும்! நீங்கள்தான் அவர்களின் இன்றைய குறிக்கோள்கள் உங்களைக் குறை

தொடர்ச்சி மறுபக்கம் . . .

*மெள்ளப் பலதெய்வம்*
*கூட்டி வளர்த்து*
*வெறும் கதைகள்*
*சேர்த்து - பல*
*கள்ள மதங்கள்*
*பரப்புதற்கு ஓர்*
*முறை காட்டவும்*
*வல்லீரோ!*

# வராதே வரவல்லாய்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னதாய்க் கோபித்தீர்களே! பார்த்தீர்களா? உங்கள் பெருமையை, எவ்வளவு அழகாய், என் கட்டுரை எடுத்துரைக்கிறது. இனிமேலும், ஆறுதலாய்த் தொடர்ந்து படியுங்கள். சும்மா சொல்லக்கூடாது. ஊர் பேர் தெரியாத தேசங்களுக்குப் போய், பத்துப் பதினைந்து ஆண்டுகளில், நீங்கள் செய்திருக்கும் சாதனைகளைப் பாராட்டாமல் இருக்கமுடியாதுதான். என் முன்னைத் தவப்பயனால், உங்களை எல்லாம் நேரில் வந்து பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது, என் அனுபவங்களை எப்படிச் சொல்ல? லண்டனில் மட்டும் இன்றைக்கு பதினான்கு கோயில்களாம். கோயில்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறதாம். அங்கு வந்து இந்தச் செய்தி கேள்விப்பட்டதும், ஆத்மீகவாதியான நான் ஆனந்தப்பட்டுப் போனேன். பிறகுதான் தெரிந்தது உண்மை. கோயில்களுக்கென்று அந்நாட்டு அரசாங்கம் காசு ஒதுக்கும்போது, நாங்கள் ஒதுக்கக்கூடாதா? என்று, அறங்காவலர்களுக்குள்ளே அடிதடி சண்டையாம். செல்வாக்கால் ஒருவர் வெல்ல, பிரிந்தவர் மற்றொரு கோயில் தொடங்குகிறாராம். பதினான்கு கோயில்கள் என்றால் பதின்மூன்று கோயில்கள் என்றால் பதின்மூன்று சண்டை என்று அர்த்தமாம். நண்பன் ஒருவன் சொன்னான். உண்மை பொய் எனக்குத் தெரியாது, ஆனால், கவலையாய் இருந்தது, கனடா போனபோது, இங்கு பதினாறு கோயில்கள் என்று ஒருவர் சொல்லத் தொடங்க, காதுகளை மூடிக்கொண்டேன். சரி. அதைவிடுங்கள், கோயில்களுக்குள் கடவுள்கள் படும்பாடு இருக்கிறதே! அது பெரியபாடு. எற்புத்துளைதொறும் லண்டன் குளிரில், பரமசிவனுக்குப் பச்சைத் தண்ணீரில் அபிஷேகம், அன்றாடம் நடக்கிறது.

தங்கள் குளிர்தீர கோர்ட்டோம் சூட்டோடும் நின்றுகொண்டு பக்தர்கள் அபிஷேகம் செய்விக்கிறார்கள். வெறும் மேலை, பனிக்குளிரும், பச்சைத் தண்ணீர்க் குளிரும் சேர்ந்து தாக்க, நடுங்கிக் கொண்டிருக்கிறார் பரமன். வேதம் வழங்காத நாடுகளுக்கு வரமாட்டேன் என்றிருந்த அவரையும், கட்டாயமாய் அங்கு கொண்டுபோய் படுத்தும்பாடு...... பாவம் சிவனார்! அவரைப்பார்க்க, அழுகையழுகையாய் வந்தது எனக்கு. கோயில் நிலையே இதுவென்றால், வீட்டு நிலையைக் கேட்கவா வேண்டும்? வெள்ளைக்காரன் விரித்த கடன் வலையுள் விழுந்து, வீடு, கார் என எல்லாவற்றையும் கடனுக்கு வாங்கி, மாதா மாதம் அக்கடன் கட்டுவதற்காக, மாய்ந்து கொண்டிருக்கிறார்கள் நம் மனிதர்கள். கணவன் மோனிங் டியூட்டி போய்வர, மனைவி நைட் டியூட்டி போகிறாள். இந்த டியூட்டிகளுக்கிடையில், அக்சிடன்ராய் பிறந்த குழந்தை, அனாதையாய் ஆகாயம் பார்த்தபடி இருக்கிறது. அக்கிரமம் ஐயா! அக்கிரமம்! ஒருமாதக் கடன்கட்டத் தவறினாலும், உரிமைக்காரர்களால் அபகரிக்கப்படக் கூடிய, இருபதாண்டு கடனிலுள்ள, வீட்டையும், காரையும், சொந்தவீடு, சொந்தக்கார் எனக் கூறிப் பெருமைப்படுகிறது ஒரு கூட்டம். கூலிவேலை செய்யும் இடத்தில், வெள்ளைக்கார எஜமானர்களிடம் நல்ல பெயர் வாங்க, தலைமயிரை மட்டுமன்றி, கால்மயிரையும் வழித்துக் கொள்கின்றனர் நம் காரிகையர். நவீன இயந்திரங்கள் நிறைந்த அவர்களின் குசினி, அடுத்த வீட்டு வெள்ளைக்காரர்களுக்கு மணந்து விடும் என்பதற்காக, சமையல் இன்றிக் கிடக்கிறது. லட்சக் கணக்கான ரூபாயில் வாங்கிய குஷன் செற்றி, குந்தியிருந்து குதூகலிக்க, உறவேதுமின்றி ஓய்ந்திருக்கிறது. பொருள் நிறைந்தும் போகம் இல்லாத வாழ்க்கை. எங்கட றோட்டில ரமில்ஸ் (Tamils) இல்லை. அவையளோட இருந்தால் பெரிய பிரச்சினை. இது தன்னை மறந்த ஒரு தமிழ்ப் பெண்ணின் பெருமிதம். இப்படிக் கூத்துகளுக்கு அங்கு குறைவே இல்லை.

நீங்கள் என்ன செய்வீர்கள்? கைநிறையக் காசு கிடக்கிறது. வெள்ளைக்காரன் ஏனென்றும் உங்களைத் திரும்பிப் பார்க்கிறானில்லை. இங்கு பறையன் என்று சொல்லி சிலரை நீங்கள் ஒதுக்கியது போல, அங்கு பாக்கி என்று எல்லோரையும் சேர்த்து ஒதுக்குகிறான் அவன். இந்தநிலையில் உங்களது பணப் பவுசை யார் மூலம் காட்டுவது? அகப்பட்டவர்கள் உங்கள் குழந்தைகள்தான். பள்ளிக்கூடத்தில் வெள்ளைக்காரர்களாகவும், வீட்டில் தமிழர்களாகவும், வேஷம் போட்டு, எது வேஷம்? எது நிஜம்? என்று தெரியாமல், அர்த்தநாரீஸ்வரராய் இரண்டும் கெட்டுக் குழம்பும் அவர்கள் நிலை பரிதாபம்! வெள்ளைக்காரர்களாகுங்கள் என்று அவர்களை இலட்சியப்படுத்தி, தமிழராக இருங்கள் என்று. அவர்கள் முதுகில் நீங்கள் ஏற்றும், பண்பாட்டு மூட்டையின் சுமை தாங்கமுடியாமல், அக்குழந்தைகள் படும்பாடு.... பரிதாபத்திலும் பரிதாபம். அங்கிளுக்கு ஒரு தேவாரம் பாடிக் காட்டுங்கோ, பாடி சொல்ல, 'தொடு உடாய செவியேன் விடாய்' என, ஆங்கிலத்தில் எழுதிப் படித்த தமிழ்த் தேவாரத்தை பிள்ளை பாடுகிறான். 'வெரி கிளவ போய்' என்று தேவாரத்திற்கு கைதட்டுகிறார் மம்மி. செத்தார் சிவபெருமான் என்று ஓடியே வந்துவிட்டேன். என்ட டோற்றர், நல்லா டான்ஸ் பண்ணுவா என்று சொல்லி, மகளை எங்களுக்கு ஆடிக்காட்டச் சொல்ல, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு எல்லாம் கழற்றி எறிந்து, காற்சட்டையோடு வந்து நின்ற அந்த கலவன் குஞ்சு, இன்ன ரவம் செத்தனை பவேஷாடா என்று பாடி ஆடத் தொடங்க, நான் செய்த தவத்தால் ஏதோ ஒருமாதிரித் தப்பி ஓடிவந்தேன். வேறொரு நாள், இந்த டேட்டி ராஸ்கள் பஸ்சுக்குள்ள, என்னைப் பார்த்து, என்ன மச்சான் என்று. ரமில்ல கேக்கிறான். வெள்ளைக்காரங்களெல்லாம் திரும்பிப் பார்க்கிறாங்கள். மனஸ் தெரியாத (b)பாஸ்ரேட், சொல்லும் சொல்லின் விரசம் தெரியாமல், மனைவியுடன் என் நண்பன் உரையாடியது காதில் விழுந்தது, அவர்களே பிறகு ஆனையிறவு அட்ராக் நைஸ் என்ன?, எப்பிடியும் எங்களுக்குத் ரமில் ஈலம் கிடைக்கும் பாருங்கோ. பிரபாகரன் இஸ் வெரி கிரேட், என்று என்னிடம் பாராட்டினார்கள். இப்படி தெளிவான குழப்பத்தில், அல்லது குழப்பமான தெளிவில், வாழும் உங்கள் நிலை இங்குள்ளவர்களுக்குத் தெரியவா போகிறது? அதனால்தான், உங்களுக்கு முக்கியமான ஒரு புத்தி சொல்லவேண்டியிருக்கிறது. அதற்காகத்தான் இந்தக் கட்டுரை. ஊரெல்லாம் சுற்றி ஒருமாதிரி தேர் இருப்பிடத்திற்கு வந்துவிட்டது. இனி, விஷயத்திற்கு வருகிறேன். அரசாங்கத்திற்கும், புலிகளுக்குமிடையிலான போர்நிறுத்தத்தைப் பயன்படுத்தி, உங்களில் பலபேர் தாயமண்ணிற்கு வருகிறார்கள். பதினைந்தாண்டுகளுக்குப் பிறகு தாய் மண்ணைப் பார்ப்பதென்றால் சும்மாவா? போர் நிறுத்தத்தால் விலையேறியுள்ள வீட்டை விற்கவும், ஆயுள் முழுக்க உங்களுக்கு அடித்துக் கொடுத்துவிட்டு, அனாதை விடுதிகளில் இருக்கும் டாடியையும், மம்மியையும், உங்கள் பிள்ளைகளுக்குக் காட்டவும், பதினைந்தாண்டுகளில் நீங்கள் பெற்றிருக்கும் வெள்ளைக்காரத் தகுதிகளை விளம்பரப்படுத்தவுமே, உங்களில் பலர் இங்கு வருவதாய், என் நண்பன் ஒருவன் குற்றம் சாட்டுகிறான். அவன் கிடக்கிறான். அறிவில்லாதவன், நீங்கள் எதற்காக வந்தாலும், வருவதற்கு முன் இந்தக்கட்டுரையை வாசிப்பது நல்லது, அதற்காகத்தான் இந்தக் கட்டுரை.

ஊருக்கு வெளிக்கிடும் நாள், கொஞ்சம் பெ(f)ப்யூம் போத்தல்கள், ஓ(f)பிஸ்சில் டியூட்டிக்காக வெள்ளைக்காரன் தந்த சேட்டில். ஏமாற்றி எடுத்தவை கொஞ்சம். உங்கள் மனைவியும், பிள்ளைகளும் பாவித்த சீலை, சட்டைகள் சில, கிறிஸ்மஸ் சேல்ஸ்சில் வாங்கிய மலிவு விலைப்பொருட்கள் கொஞ்சம், பிஸ்கட், சொக்லேட், முதலிய இன்ன பிற மலிவுப் பொருட்கள், இதைவிட, நீங்களும், உங்கள் மனைவி பிள்ளைகளும், இங்குள்ள ஏழைச் சொந்தக்காராகளுக்குப் பவுசு காட்ட, புதிதாய் வாங்கிச் சேர்த்த, ரவுசர், சேட், சட்டை, சப்பாத்து என சாமான்களால், இரண்டு மூன்று பெரிய பெரிய 'சூட்கேஸ்'சுகளை நிரப்பி விட்டீர்களா? இனி வெளிக்கிட வேண்டியதுதான். கொஞ்சம் பொறுங்கள், முக்கியமான இரண்டு பொருட்களை மறந்து விட்டீர்கள் எவை என்று தெரிகிறதா? நேற்று 'சுப்ப மாக்கற்றில்' உங்கள் பாசத்தில் அடையாளமாய், அனாதை விடுதியிலுள்ள அப்பாவிற்குக் கொடுக்கவென, உங்கள் அன்பைப் போன்ற, செயற்கை றோஜா மலர்களாலான பூச்செண்டு ஒன்றை வாங்கினீர்களே? அதையும் எடுத்து வையுங்கள். அடுத்தது, வெளிநாட்டிலிருந்து வந்தவர் நீங்கள் என்று, மற்றவர்கள் தெரிந்துகொள்ள, முழுசுமில்லாமல், அரையுமில்லாமல், முக்காலாய் புதிதாய் வந்திருக்கிறதே ஒரு காற்சட்டை, அதிலும ஐந்தாறைத் தூக்கிப் போடுங்கள். எல்லாம் 'ரெடி' இனிப் புறப்படலாம், திரும்பவும் மறந்துவிட்டது, இங்கு நாங்கள் காய்கறி வாங்கும் கூடையைப் போல, கைக்குழந்தையைக் கிடத்த ஒன்று வைத்திருப்பீர்களே, அதையும் எடுங்கள். ஏனென்று கேட்கிறீர்களா? அப்போதுதான், பக்கத்துவீட்டுச் சின்னம்மா, 'உதென்ன தங்கச்சி' என்று கேட்க, அதெங்கட பபாவைக் கிடத்துறதுக்கு, என்று, உங்கள் மனைவி பெருமையாய்ச் சொல்லலாம். 'குழந்தயக் கிடத்துறத்துக்கு என்னத்துக்கு மேனே கூடை' தோளில கிடத்தலாம் தானே! கூடையோட வச்சிட்டு அங்கால பார்க்கேக்க, நாய் கீய் கொண்டு போனா என்ன செய்யியறது? சின்னம்மா பேத்தனமாக் கேக்கும் 'என்ன அன்ரி' நீங்கள் சரியான 'கன்றி புறூட்டா' இருக்கிறீங்க. பேபியைத் தோளில் போட்டா, அது 'சூ' செய்து, 'டிரெஸ்ச' எல்லாம் பழுதாக்கியெல்லே போடும். உங்கள் மனைவி பெருமையாய்ச் சொல்லுவா. அவா குழந்தையா இருக்கேக்க, தன்ட தோளில கிடந்து, பெஞ்ச 'சூ'வை 'என்ட சின்னக் குஞ்சு தேன்மாரி பொழியுது' எனச் சொல்லி, தன்ட சீலைத் தலைப்பால துடைச்சு விட்டத, சின்னம்மா பெருமையாச் சொல்லும். 'யூறினை சீலையால துடைக்கிறனீங்களோ? 'டேட்டி ஹபிற்' 'லண்டனில 'டெற்றோல்' போட்டுத் துடைக்காமல், நாங்கள் பிள்ளயத் தொடமாட்டம். உங்கட மனைவி பெருமையாய்ச் சொல்ல, சின்னம்மா பாவம் வாய மூடிக் கொள்ளும். இவையெல்லாவற்றுக்குமாகத்தான் அந்தக் கூடையையும் எடுத்து வைக்கச் சொல்கிறேன். சரி, இனி 'சூட்கேசை' மூடலாம். கொஞ்சம் பொறுங்கோ! பிறகும் உந்த விடீயோக் கமராவை விட்டிட்டீங்களே! என்னது, அதைத் தோளில மாட்டப் போறீங்களோ? அதுவுஞ் சரிதான். அப்பதான் நீங்கள்வெளிநாட்டில இருந்து வர்றது, மற்றவையளுக்குத் தெளிவாய்த் தெரியும். சரி, பின்னை 'சூட்கேஸை' மூடவேண்டியதுதான். நீங்கள் முக்கால் காற்சட்டை போட்டுவிட்டீங்களா? உங்கள் மனைவி, தன் உறுப்புகளின் முழுப் பரிமானத்தையும் வெளிப்படுத்தும், 'ரீசேட்டும், ஜீன்சும்' போட்டுவிட்டாரா? பதின்மூன்று வயதான, பருவ எல்லையில் நிற்கும் பாலகியின், 'பட்டராலும், சீஸ்சாலும்' கொழுத்துக் கிடக்கும் தொடையின், முக்கால் பாகம் தெரியும் காற்சட்டை போட்டாகிவிட்டதா? கூடையுடன் குழந்தையை எடுத்துவிட்டீர்களா? தூக்குங்கள் 'சூட்கேஸை' இனி 'ரமில் ஈலம்' போகவேண்டியதுதான். கட்டுநாயக்க விமான நிலையம். கொண்டுவந்த பெரிய சூட்கேசுகளை நீங்கள் ஏற்ற, அங்குள்ள பழைய தள்ளுவண்டிகள், தள்ளாத வண்டிகளாய்த் தடுமாறும். உங்கள் மனைவி, 'வேறு பலவற்றோடு' அதையும் தள்ளிக்கொண்டு வெளியே வர, 'பெரியண்ண! குஞ்சக்கா! எடி பேபி! பெரியவன்!' இப்படிப் பலகுரல்கள் ஒருமித்து வரவேற்கும். உங்களை வரவேற்கவென யாழ்ப்பாணத்திலிருந்து, 'வான்' பிடித்து வந்த உங்கள் உறவுக் கூட்டத்தின் கூக்குரல் அது. பதினைந்து வருஷத்துக்கு முன் பழகிய பழைய உறவாய் நினைந்து, உங்களைக் கண்டு அதுகள் பரவசப்படும். உங்கள் பாடு கொஞ்சம் சங்கடம் தான். "இதுகள் என்ன 'டீசன்ற்' இல்லாமல்

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

LINGA & CO Legal Advisors and Commissioners for Oaths

தற்போது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள சட்ட திட்டங்களில் நீங்கள் சிக்கி தவிக்கிறீர்களா?

உங்களுடைய பிரச்சனைகளை கருத்தில் கொண்டு உங்களுக்காக செயல்படும் தகுதியும் திறமையும் வாய்ந்த சட்ட நிபுணர்களை தேடுகிறீர்களா?'

WE SPECIALISE IN:

ALL ASPECTS OF IMMIGRATION AND NATIONALITY MATTERS
WORK PERMITS APPLICATIONS - ALL CATEGORIES
HIGHLY SKILLED MIGRATION PROGRAMME,
FAMILY REUNION VISAS FOR SPOUSES AND DEPENDANT RELATIVES,
ASYLUM APPLICATIONS AND HUMAN RIGHTS APPLICATIONS,
APPEALS AND BAIL APPLICATIONS, EEC RESIDENCE PERMITS,
TOURIST VISA EXTENSION, PERSONAL INJURY, EMPLOYMENT LAW

10 ஆண்டுகால அனுபவம் உள்ள, பல சட்ட நிபுணர்களைக் கொண்ட சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

மேலும் பல தமிழ் பேசும் சட்டதுணைகளும் இணைந்து செயற்படுகின்றனர்.

46 HIGH STREET, COLLIERS WOOD, LONDON SW19 2BY

GENERAL LINE: 020 8544 9285 (4 LINES)

EMERGENCY LINE: 07771 646 441 / FAX: 020 8542 9530

உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட்டு உங்கள் வழக்கின் மேன்மைக்காக பயன்படுத்தப்படும்

ESTABLISHED IN 1994

# கடந்தது... நடந்தது...

**கே. எஸ். பாலச்சந்திரன்**
*( கனடாவிலிருந்து)*



விடலைப் பருவம் நடுத்தரப் பள்ளியி லேயே நாடகம் போட்ட அனுபவம் ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையில் எனது தமிழ் ஆசிரியர் என்னை இராமாயணத்தை நாடகமாக மேடை ஏற்றச் சொல்லிப் பணித்தார். இயக்குனர் என்ற வார்த்தை பிரயோகங்களெல்லாம் அவ்வளவு தெரியாத காலம்.

நடிகர்கள் எல்லோரும் (இராமன் இலக்குமணனை தவிர) ஆசை தீர மீசை வைத்துக் கொண்டோம் சீதை, சுமித்திரை, கோசுலை, கைகேயகி, உட்பட அனைத்து அந்தப்புரத்து மனிதர்களும் தாங்கள் பொலிஸ் குறொப் தலைகளை மறைக்க தங்கள் அக்காமாரின் மேல் தாவணிகளைப் பாவித்தனர்.

மேடை அமைப்பு நீண்ட வாங்கில்களை நெருக்கமாக அடுக்கி அமைக்கப்பட்டது. இதோ வாங்கில்களில் பாடம் நடக்கும் போது அடிக்கடி ஆசிரியரின் பணிப்புரையினால் ஏறி நின்ற அனுபவங்கள் எமக்கு உதவியாக இருந்தன. உசாராக குறுக்கும், மறுக்கும் நடந்து பார்த்தோம்.

இராமன், இலக்குமணன், இராவணன் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் வில், அம்பு செய்வதாக அயலில் உள்ள வேலிகளில் பூவரசம் மரங்களின் கொப்புகளை வெட்டி மும்முரமாக பேச்சும், ஏச்சும் வேண்டினார் சக மாணவர் ஒருவர். வளமாக அகப்பட்டு அடியும் வேண்டினார் என்ற செய்தியும் அடிபட்டது. அனால் அது ஊர்ஜிதப் படுத்தப்படவில்லை.

எல்லாமே நன்றாக நடந்தன. ஒன்றே ஒன்றைத்தவிர. அது ஒத்திகை. ஒழுங்காக வந்தவர்களும் வராமல் நின்றவர்களும், நின்று பிறகு வந்தவர்களுமாக ஒரு கலப்பு கூட்டணி மேடையேற ஆயத்தமாகியது. எழுதப்பட்ட வசனங்கள் யாவும் எனக்கு மட்டும் மனப்பாடமாக இருந்ததினால் எனக்கு இராமன் வேடம் வழங்கப்பட்டது.

திரை விலகியது. விலகியதென்றா சொன்னேன்? விலக முயற்சித்தது, இடையில் நின்று விரிவதும், மூடுவதுமாக விளையாட்டு காட்டி, இரண்டு பக்கங்களிலும் நின்ற வர்களின் உதவியால் வலுக்கட்டாயமாக கரை சேர்ந்தது. பின்னால் வரப்போகின்றவைக்கு இது அறிகுறியாக அமைந்திருக்கலாம் என்று பிறகு கதைத்துக்கொண்டோம்.

மேலதிகமாக விற்கள் இல்லாத காரணத்தினால், சீதையை கைப்பிடிக்க, வில்லை முறிக்கவேண்டும் என்ற நிபந்தனை களை ஜனகமாராஜா வைக்கவில்லை ஜனகமகாராஜாவே இல்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். கல்லாக மாறிய அகலியை இல்லை இராமனான நான் கால் பதிக்க கல்லுமில்லை.

> *மேலதிகமாக விற்கள் இல்லாத காரணத்தினால் சீதையைக் கைப்பிடிக்க, வில்லை முறிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை ஜனக மகாராஜா வைக்கவில்லை. ஜனக மகாராஜாவே இல்லை என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.*

நாடகம் நேரடியாக முடிசூட்டும்படலத்தில் ஆரம்பித்தது. கூனி ஆலோசனை சொல்லி, கைகேகி தன் முடிமயிரைப் பரப்பிவிட்டு, அது கழன்று விடாமல் தன்கையினால் இறுகப் பிடித்து படுத்திருந்தார். தசரதன் அந்தப்புரத்துக்கு அந்தரமாக வந்தார். கைகேகியுடன் வாக்குவாதம் ஆரம்பமாகியது. கைகேயி மறக்காமல் இரண்டு வரங்கள் கேட்டார். பரதன் நாடாளவும், இராமன் காடு போகவும். வரங்கள் கேட்க தசரதன் தாங்க முடியாத கவலையினால் மிகுதி வசனங்களைக் கூட சொல்ல மறந்து மேடையில் படார் என்று விழுந்தார். வீழ்ச்சியென்றால் அதுவன்றோ வீழ்ச்சி. அவர் வாட்டசாட்டமான உடம்புக்காரர். நெருங்கியிருந்த வாக்குகள் விலக மேலே போகக்கூடியவர் நேரே கீழே போய்விட்டார். ஏதோ தந்திரக் காட்சி போல தசரதர் மறைந்து விட்டார் என்று, பலரும் நினைத்திருக்க, தரையில் இருந்த இளசுகள் அவரைக் காட்டி கொடுத்துவிட்டார்கள். அவர்கள் போட்ட காட்டு கூச்சலில் தசரதர் எழும்பி வரவும் வெட்கப்பட்டவராய் படுத்திருக்க. திரையை அவசரமாக இழுத்து மூடி, அவரை இரண்டு மூன்று பேராய் கை கொடுத்து தூக்கி விட்டு ஒருவாறு நாடகம் தொடர்ந்தது.

இனியென்ன இராமனும் சீதையும் காட்டுக்கு போவதற்க்கு தடையொன்றுமில்லை. நானும் தம்பி இலக்குமணனும் (முடி மயிர் கிடைக்கா ததினால்) முக்காடு இட்டிருந்த சீதையும் காட்டுக்குப்புறப்பட்டோம். பன்னை, பாவட்டை, கொற்றை, நுணா போன்ற மரக்கொப்புகள் கட்டிச் செய்த காட்டுக்கு ஊடாக நடந்தோம். நடந்தோம் நீண்டநேரமாக நடந்தோம்.

பஞ்வடியில் இலக்குமணன் அமைத்துத்தந்த பர்ணசாலையில் இராமனாகிய நானும் சீதாபிராட்டியாகிவரும் தங்கி ஓய்வெடுக்க அவகாசம் கொடுக்காமல், மாரீசன் மாய மானாக வந்து முன்னால் நின்றான். அதைப் பிடித்து தாருங்கள். பிராணநாதஎன்று சீதையும் சொல்லியாகிவிட்டது.



*கே.எஸ் பாலச்சந்திரன் ஈழத்தமிழ்த் திரைப்படத் துறையின் அடையாளங்களில் முக்கியமானவர். திரைப்படங்களை இயக்கியும், நடித்தும் இருக்கிறார். பல மேடை நாடகங்களை இயக்குகின்றார். இலங்கைத் தொலைக்காட்சி, வானொலியின் நிகழ்ச்சித் தயாரிப்பாளர். வெளியீட்டாளர்.*

மாயமான் மரக்கொப்புகளுக்கு இடையில் நின்று விளையாட்டுக் காட்டியது. இராமனாகிய நான் இதற்கு மேல் பொறுக்க முடியாமல் பூவரசந்தடியை வளைத்து 'டொய்ங்' என்று ஒலியெழுப்பும் வகையில் நாண் கட்டியிருந்த வில்லை எடுத்து கூராக நுனி தீட்டியிருந்த அம்புகளை (பூவரசம் தடிகள்) மாயமான் மீது ஒன்றன்பின் ஒன்றாக தொடுத்தேன்.

பாவம் மாயமானாக வந்தவர் முதுகில் மேல் மான்தோலைக் கட்டிக்கொண்டு இராமன் எய்வது போல பாவனை செய்ய, தான் அடிபடுபவர் போல பாவனை செய்யலாம் என்ற நினைப்பில் வந்தவர், உண்மையாகவே அம்புகள் பாய்ந்து வந்து மான் தோல் மூடாத அவரது ஆசனப் பகுதியில் படவும், மேடையை விட்டு குதித்தோடி ஆசிரியர்களின் பின்னால் சரண் புகுந்தார் . . .

இராவணன் அதிரடியாக வந்து, சீதையை தூக்கிக்கொண்டுபோய்விட்டான். அவசரத்தில் சீதையின் முக்காடு விழுவதைக் கூட காணவில்லை. மீண்டும் முன்வரிசையினரின் கூச்சல் கூக்குரல் . . .

சீதையைத் தேடி இராமனும், இலக்கு மணனும் புறப்பட்டோம். வழியிலே ஜடாயு என்ற கழுகு இறகுகள் வெட்டுண்டு படுத்திருக்கிறான். ஓடிச் சென்று அவர் அருகில் குனிந்து என்ன நடந்தது என்று மாறி, மாறி கேட்டாகிவிட்டது.

"இராமா. . சீதையை தென்திசை வேந்தன் இராவணன் கவர்ந்து சென்றான். தடுக்க முயன்ற என்னை வாளால் வெட்டிச்சென்றான்." என ஜடாயு சொல்ல வேண்டும். ஒரு வார்த்தை. ஒருநாள் கூட ஒத்திகைக்கு வராத அவருக்கு வசனம் எங்கிருந்து வரப்போகிறது. நிலமையைப் புரிந்துகொண்டு நானே அவர் பேச வேண்டிய வசனங்களை, இலக்குமணனக்கு சொல்வது போல சொல்லி சமாளித்தேன்.

அடுத்தது. ஜடாயு இறக்க நாங்கள் அவருக்கு இறுதி கடன்கள் செய்து அப்பால் செல்ல வேண்டும். எது செய்வதென்றாலும் ஜடாயு இறக்கவேண்டுமே!

வைத்த கண் வாங்காமல் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார் ஜடாயு. இறந்த பாடில்லை அது கூட அவருக்கு தெரியாது என்று நான் உணர்ந்து கொண்டு, சற்று அருகில் குனிந்து 'செத்துப் போடா' என்றேன். மூழ்கிப் போறவனுக்கு கயிறு கிடைத்ததைப் போல, தான் பேச வேண்டிய வசனத்தை நான் சொல்லித் தருகிறேன் என்று ஜடாயு நினைத்துவிட்டார்.

ஒருக்களித்து சாய்ந்து படுத்திருந்தவர் பட்டென நிமிர்ந்து பலத்த குரலில் . . "செத்துப் போடா" என்றாரே . . சபையில் கூக்குரல் அடங்க வெகுநேரமாகியது.

இத்தோடு எங்கள் சோதனை முடியவில்லை. அது இறுதிக்காட்சி வரை நீடித்தது. இராம-இராவண யுத்தம். இராமன் இராவணன், சேனைகள் என்று எல்லோரும் தயார் நிலையில் நின்றோம். கைகளில் வில்லும், அம்பும் ரெடி. யுத்த பூமி நிசப்தமாக இருந்தது.

திடீரென்று எனக்கு பின்னால் ஒரு சலசலப்பு நான் திரும்பிப் பார்ப்பதற்கிடையில், எனது சேனை என்னை தாண்டிக் கொண்டு ஆரவாரத்துடன் இராவணனை நோக்கி ஓடி, அவனை விழுத்தி அடிக்கத் தொடங்கியது. வில் அம்புகளை கைவிட்டு, கைவரிசை காட்டினார்கள்.

சிறிது நேரத்தில் இராவணனது சேனையும் இராமனது சேனையோடு சேர்ந்து கொண்டது. பரிதாபமாக... இராவணன். இராமன் போய் காப்பாற்றி வைக்க வேண்டியதாகி விட்டது.

கோபத்திற்கு காரணம் இதுதான். இராவணன் எங்கள் வகுப்பின் மொனிற்றர். பலநாள் கோபம் வைத்திருந்தவர்கள் மேடையில் வைத்துத்தீர்த்துக்கட்டிவிட்டார்கள். இராமாயண நாடகம் முழு நீள சிரிப்பு நாடகமாகிய கதை இதுதான். இப்போதைக்கு இது போதுமே!

**Westminster College**
City & Guilds, Oxford Cambridge RSA, MCSE, MCSD, ECDL, Oracle & Java Certification
Full time Diplomas in IT & Part time evening and weekend classes.
London & Thames Newspaper Group has awarded WCC for "BUSINESS ACHIVEMENT IN COMPUTER EDUCATION 2002"

**Oracle 8i**
DBA, Developer 2000, Financials, Web Commerce,
**Java**
Servlets/JSP, Enterprise Development, EJB
**Net:**
ASP.NET, VB.NET, C, VS.NET, XML
**Unix**
Networking, Sun Solaris, AIX, Linux
**Programming**
Client/Server with C++, VB, Oracle, Forms 6i, SQL Server, Software Testing

**Web Design/WAP**
HTML, WML, Coldfusion, Ultra Dev, Dream Weaver, Flash
**E-Commerce**
Corporate/Enterprise development with ASP, JSP, PHP
Server side Java Script
**Applications**
Autocad, Sage Line 50, Microsoft Office
**Networking**
Windows NT/2000/XP, System Engineering, PC Assembly & Support

BCS OCR Master CIW DESIGNER
web: www.wcc.co.uk

City: 020 7608 7010
Warwick House
64-65 Cowcross Street
Farringdon, EC1M6BP

Wembley: 020 8795 3678
513A-515A High Road,
Wembley,
Middlesex HA0 2DH

# The Print

அச்சுக்கலையின் அனைத்துத் துறையிலும் இமயம்

45c Crusoe Road,
Mitcham,
Surrey CR4 3LG
tel: 020 8646 2885
fax: 020 8401 8612

நேர்த்தியான அச்சமைப்பில்
நிகரில்லா கலையம்சம் நிறைத்து
பூர்த்தியாகும் விளம்பரங்கள்
நிலைத்து நிற்கும் நெஞ்சமதில்

Professionally
Qualified
Graphic
Designers
Team
together
to
serve
you better




## வாசன் அச்சகம்

வாடிக்கையாளர்களின் விருப்பத்திற்கேற்ப தேவையான

**Size, Design & Amount இல்**



- Business cards
- Booklets
- Flyers
- Broucher
- Invitations
- Rubber Stamps & Labels

செய்து கொடுக்கப்படும்.

**Special Offer**
**A4 -2000 Colour Leaflets £150**
**A3 -1000 Colour Leaflets £150**

# [redacted]rprügelt

[redacted]

ஜீன்ஸ் வாங்கோணும்.

ஒரு நாள் 'இது தான் M25 மோட்டர்வே. லண்டனைச் சுத்தி ஓடுது.' எண்டு காட்டி அதின்ர பிரபலம் பற்றி யெல்லாம் விலாவாரியாச் சொன்னன். உடனே சொன்னான் 'இதென்னண்ணை மோட்டர்வே. ஜேர்மனியில இருக்குதண்ணன் ஓட்டோபான்...!

[redacted] ஜேர்மனியில அடிப்பாங்கள் அண்ண அடி...' எண்டு அவன் சொன்னால் . . .

டொச் மொழியிலிருக்கும் தலைப்பைப் புரிந்து கொள்ளாத அறிவிலிகளுக்காக அதன் தமிழாக்கம் 'ஜேர்மனியால் அடி வாங்கினேன்'

*- கருணா*

# இல்லந்தோறும் இனிய வாழ்வு

## மன உளைச்சல்

**Dr. பாலேந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

வாழ்க்கை சீராக நடைபெற கணிசமான அளவு மனஉளைச்சல் அவசியம். இது எம் உடலையும் உள்ளத்தையும் தயார் நிலையில் வைத்திருப்பதுடன் நாம் நன்கு தொழிற்படவும் அவசியமாகும். உதாரணமாக ஒரு மருத்துவ மனையை எடுத்துக்கொண்டால் மருத்துவர்களும், தாதிகளும் உதவியாளர்களும் சுறுசுறுப்புடனும் விரைவாகவும் தம் பணிகளைச் செய்வார்கள். இது ஆரோக்கியமான மனஉளைச்சல் ஆகும். ஒரு வேலையற்று இருக்கும் ஒருவர் அல்லது முதியவர் இவ்வாறான ஒரு சுறுசுறுப்பான நிலமை இல்லாது இருப்பதனால் எந்த மனஉளைச்சலும் இல்லாது இருப்பார்கள். இந்நிலமை நாளடைவில் மனச்சோர்வை உண்டாக்கும். எனவே வாழ்க்கையில், கணிசமான அளவு மனஉளைச்சல் நல்லது. ஆனால் இதன் அளவு அதிகரித்து அதனால் ஒருவர் தனது கடமைகளை நிம்மதியுடனும் மகிழ்ச்சியுடனும் செய்ய முடியாத நிலமை ஏற்பட்டால் அது உடல் மன ஆரோக்கியத்தை கெடுக்கும் மனஉளைச்சலாகும்.

நன்மையான மனஉளைச்சலானது வேலையில் ஆர்வத்துடனும் போட்டி மனப்பான்மையுடனும் தொழிற்பட உதவும். மாணவர்கள் பரீட்சைகளில் வெற்றி பெறவும், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறவும் இது உதவும்.

வாழ்க்கையில் வெற்றியைத் தொடர்ச்சியாக சந்திக்கும் பல பணக்காரர்கள் அதிக அளவு மனஉளைச்சலில் இருந்தாலும் அதனால் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படுவதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் வாழ்க்கையை நிச்சயமான குறிக்கோளுடன் நடாத்துவது, வாழ்க்கையை அனுபவித்து ரசனையுடன் வாழ்வது, வாழ்கையை வெற்றிபெறும் ஒரு விளையாட்டாக நோக்குவதுமாகும்.

எப்போது ஒருவருடைய மனஉளைச்சலின் அளவு அவரின் கட்டுப்பாட்டுக்கு அதிகமாக போகின்றதோ அப்போது அவரின் உடல், மன சுகம் பாதிப்படையும். தொடர்ச்சியாக மனவுளைச்சல் நீடித்தால் உடல் வலி, பிடிப்பு ஆகியன ஏற்படும், உணவு உண்ண முடியாது போகும், குருதி அழுத்தம் அதிகரிக்கும், இலகுவில் களைப்பு அடைவார்கள், அடிக்கடி சலம் கழிப்பது, வயிற்றுப்போக்கு, மூச்சுத்திணறல் போன்றவை ஏற்படும். இவை தவிர உடலின் நோய்க்கிருமி எதிர்க்கும் தன்மை குறைவதால் இலகுவில் தொற்று நோய்களுக்கு ஆளாகுவார்கள். இளவயதினர் பாலியல் நாட்டம் குறைவடையும். மேலும் தம்பதியினர் தமது தாம்பத்ய உறவினை குறைத்துக் கொள்ளுவார்கள்.

பெருமளவில் தமிழ் உளவாளிகள் அல்லது தமிழ் பேசத்தெரிந்த உளவாளிகள் இறந்து போனது.

அதைவிட அண்மையில் நடைபெற்ற கொலைச் சம்பவங்களில் தலைக்குனிவும் ஏற்பட்டுள்ளது.

தாக்குதலை நடத்தியவர்கள் தாக்குதல் செய்யும் முறையில் ஒரு pattern இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். நீங்கள் கவனித்தீர்களோ இல்லையோ, அரசு புலனாய்வுத்துறை நிச்சயம் கவனித்திருக்கும்.

என்ன pattern அது?

- ஒரே பாணியிலான தாக்குதல்.
- தாக்குதல் நடக்கும் பகுதிகள் அநேகமாக அரசு கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள்.
- தாக்கியவர்கள் வேலை முடிந்தவுடன் கையை வீசிக்கொண்டு ராஜாமாதிரி அந்த இடத்தை விட்டுச் சென்று விடுகிறார்கள். எங்கிருந்து வருகிறார்கள், எங்கே போகிறார்கள் என்பதெல்லாம் ஒரே மர்மமாக இருக்கிறது.
- தொடர்ந்தும் ஒரே ராங்க்கில் இருப்பவர்கள் தாக்கப்படுவதில்லை. பெரியகை, உயரதிகாரி, சாதாரண உளவாளி, இன்போர்மர் என்று இலக்கு மாறி மாறி எல்லாத் திக்கிலும் பாய்கிறது.

இது சமாளிப்பது கொஞ்சம் கஷ்டமான, மனோதத்துவ ரீதியில் குழப்பி விடக் கூடிய ஒருவகை pattern.

இப்போது அரச தரப்புக்கு இருக்கும் முக்கியமான அவசர பிரச்சனைகள் இரண்டு.

1. இவ்வாறான தாக்குதல்களைச் செய்தவர்களைப் பழி வாங்குவது.

2. இழந்து போன கட்டமைப்பை மீள நிரப்புவது.

இதில் முதலாவது விடயம் பற்றி சொல்வதானால் தமது தரப்பில் ஒரு உயிர் போனால் மறுதரப்பில் ஒரு உயிரை எடுக்கவேண்டும். ஆனால், அது சரியாக மறுதரப்புதானா என விசாரித்து செய்வதில்லை. ஏதோ வட-கிழக்கு பகுதி தமிழன் ஒருவரின் உயிர் போனால் சரி என்று இருந்தது ஒரு காலம்.

இப்போது ஒரு தமிழனை மாத்திரம் கொல்வதில் பலனில்லை-எதிர்த்தரப்பின் சரியான நபரைப் பிடிக்க அல்லது அழிக்க நினைக்கின்றது இராணுவம்.




அதற்குத் தேவை மேலே சொல்லப்பட்ட இரண்டாவது விடயம்.

அதாவது இழந்து போன புலனாய்வு துறையை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக மிகவும் துரித கதியில் வேலைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று சொல்லப்படுகிறது.

இவர்களுக்குள்ள முக்கிய பிரச்சனை என்னவென்றால், கொழும்பில் இலக்கு தவறாமல் தாக்கிவிட்டு தப்பிச்செல்வது போல எதிர்த் தரப்பினர் பலமாக இருக்கும் பகுதியிலும் செய்ய மிகவும் ஆசை. சில தடவைகள் சில முக்கியஸ்தர்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டாலும், அதில் அரச சார்பில் பங்குகொண்ட யாரும் இப்போது உயிருடன் இல்லை என்ற நிஜம் பலருக்குத் தெரியாது! ஆனால், அரசுக்கு நன்றாகவே தெரியும்.

இவ்வாறன தாக்குதல்களை எதிரணி முகாமுக்குள்ளேயே நடாத்த வேண்டுமாக இருந்தால், நிச்சயமாக அதற்குத் தேவை-தமிழர்கள்! ஓரளவுக்காவது விஷயம் தெரிந்த தமிழர்கள்.

சரி. அதற்காக இவர்களிடம் ஆட்கள் இல்லையா? ஓரளவுக்காவது எதிரணியினருடன் பழகிய யாரும் இவர்களது பராமரிப்பில் இல்லையா?

இருக்கிறார்கள்.

ஆனால் அங்கேயும் ஒரு சிக்கல் இருக்கிறது. இவர்களது பராமரிப்பில் இருப்பதாகக் கூறப்படும் ஆட்கள் இதுவரை செய்ததாக கூறப்படும் சம்பவங்கள் அனைத்துமே கிழக்கில் நடாத்தப் பட்டிருக்கின்றன.

இவர்கள் தாக்க விரும்பும் பகுதியில் அல்ல! அந்தப் பிராந்தியத்துக்குள் இன்னமும் நுளைய முடியவில்லை.

கொழும்பில் தாக்குதல் நடாத்துவது போல எதிரணியின் பலமான பகுதிக்குள்ளும் சென்று தாக்குதல் நடாத்த நிச்சயம் ஆசை இருக்கும்.

அப்படி ஒரு ஆசையிருந்தால் உயிரைப் பணயம் வைத்து உள்ளே அனுப்பப் படவேண்டியவர் ஒரு தமிழராகவே இருக்க வேண்டும்.

இதற்கு இலங்கையில் இருக்கும் எந்த தமிழ் இளைஞன் முன்வருவான்?

ராணுவத்திலிருக்கும் சிங்கள இளைஞர்கள் கூட அரசையும் இராணுவ தலைமையையும் நம்பாமல் ஓட்டம் பிடிக்கிறார்கள் என்று செய்திகள் வருகின்றன. இப்படியிருக்க இராணுவ புலனாய்வுதுறை தமது தரப்பில் ஆட்களைப் பயிற்சி கொடுத்து வடக்கே அனுப்ப வேண்டும்.

அப்படி வடக்கே உளவு நடவடிக்கைக்காக போகிறவர் சுதந்திரமாக திரியக் கூடியவராகவும், இருக்கவேண்டும். அங்குள்ள மக்களோடு இலகுவில் கலந்து விடக்கூடிய ஆளாகவும் இருக்க வேண்டும்.

அதற்குத் தேவை typical தமிழ் ஆட்கள்.

இப்போது தெற்கிலிருந்து வடக்கே போகும்போது உள்ளே நுழையும் பகுதி எப்படியிருக்கிறது?

மிகவும் உன்னிப்பாக கவனிக்கப்படுகிறது என்று கூறப்படுகிறது.

ஆட்பபகுதி (Immigration & Emigration) புலனாய்வு துறையால் இறுக்கமாகக் கண்காணிக்கப்படுவதாக நம்பப்படுகிறது.

இப்பொழுதை பகுதிக்குள் உளவாளிகளை உட்புகுத்தி வேலைசெய்வது முடியாத காரியம். இதை உணர்ந்த இராணுவம் இன்னொரு நடவடிக்கை செய்து அதில் தோல்வி கண்டது. அது என்ன என்பதை இன்னொரு சந்தர்ப்பத்தில் பார்க்கலாம்.

ஏற்கனவே ஒரு நடவடிக்கை தோல்வியடைந்தது என்பதுதான் இந்தக் கட்டுரையில் முக்கியம்

அந்த நடவடிக்கையும் தோல்வியடைய இப்போது அடுத்த வழியைப் பார்ப்பது அவசியமாகின்றது.

அதற்கான முதற்படி என்ன?

*(தொடர்ச்சி 30ம் பக்கம்)*

CEYCO

CEYCO SHIPPING
& Engineering Logistics ltd.
Tel: 020 8786 2266 Home: www.ceyco.co.uk

204-208 Upper Tooting Road
Tooting
London. SW17 7EJ
020 8786 2266

அம்மன் ஆலய
car park வளாகத்தில்
பாரிய Warehouse &
Office.
8.00 to 8.00 daily

CEYCO Shipping

CSEL

தனிப்பட்ட பாவனைப்பொருட்கள்
வியாபாரப் பொருட்கள்
TV VCR DVD players
Home cinemas Hi-Fi systems
Fridge-Freezers Washing Machines
மற்றும் அனைத்து வகையான பொருட்களையும்
உடனுக்குடன் பாதுகாப்பான முறையில்
அனுப்பும் தமிழர் நிறுவனம்!

* வாராந்த சேவை!
* யாழ்ப்பாணம் கொழும்பு முகவர்கள்!
* Easy to clear - Customs at warehouse
* Door to Door delivery service!
Unaccompanied Baggage Service
To & From Jaffna - Colombo - UK.
Special Service to Madras & Thrichi



# Buddhist remains in Jaffna

By Dr. S. Thiagarajah

*(continued from previous issues)*



*The Anaikoddai Royal seal*

*The above Royal seal discovered by the Archaeology Team from the University of Jaffna in 1980 at Anaikoddai had two lines of Tamil Brahmi writing datable to 300 B.C. The first line shows Twin Tridents, symbols of Royality and the line below reads 'Kovethan', the name of the King. (Dr.P.Ragupathy, 1987.)*

## PART 1

For over a thousand years a good proportion of the Tamils of Jaffna practiced Buddhism. It was from this background Manimekalai emerged as a Buddhist Classic of all time. Pungudutivu (Piyangudipa in Mahavamsa; Puvangudipa in Nampottha) was an important Buddhist centre of this period. The presence of Buddhist Monks at Pungudutivu does not make them Sinhalese!

Several place names of Ancient Jaffna like Jambu Kovalam (Jambukola), Kanthamathanam (Kannavaddhamana), Pungudutivu (Piyangudipa), Urkavatturai (Uratota), Pallavaturai (Bhallatittha) are mentioned in Mahavamsa in relation to Buddhist religious activities. How could the mere mention of a name, that too ina Pali chronicle make it a place of Sinhalese occupation.

No Epigraphic evidence of Sinhalese writing has ever come to light in the Jaffna Peninsula before the 13th Century. The Vallipuram Gold Plate is written in Pali, the language of Buddhist cultural activity.

## Valikamam

At Sigiriya there is an inscription 'Valigam' belonging to the 7th_ 8th Century A.D. Nicholas identified this as 'Valikamam' in Jaffna *(Nicholas, C.W.: Historical Topography of Ancient and Medieval Ceylon in JCBRAS, Vol VI, Colombo 1962, pp 84 - 85).*

Valikamam is mentioned as 'Vallikamam' in the 'Chola' inscriptions of 12th century; and as 'Valigomu' in 13th century Sinhalese literature *(Vide Nicholas above).* The Portuguese and Dutch documents refer to this place as 'Valigamam'.

Samuel Livingstone (The Sinhalese of Ceylon and the Aryan Theory; ch.6) argued that 'Kam' and 'Kamam' are original Tamil Words derived from 'Kamam' (Tolkappiyam - Sollathikaram 355); While Kannangara (Jaffna and the Sinhala Heritage) claimed they were adapted from the Sinhala words 'gama', 'gamuva'.

Certainly these words appear in Sri Lankan inscriptions long before the appearance of Sinhalese language. An inscription 'Velkama' datable to First Century A.D written in Tamil Brahmi was found at Trincomalee.

The author of this inscription was identified as a Tamil by Paranavitana himself. *(Paranavitana, S. : Inscriptions of Ceylon : Late Brahmi Inscriptions; Dept. of Arch. Sri Lanka, Moratuwa 1983 Inscriptions 112 – 113).*

The words 'Kam' and 'Kamam' in Tamil and 'Gama', 'Gamuva' in Sinhalese seem to have a common origin perhaps from Elu, The Proto – Dravidian Language of Ancient India. The Sanskrit word 'Grama' is believed to be adapted from Tamil 'Kiramam' (meaning village).

Place names like Pittugamam, Ponnagamam, Nandigam occur in Andhra *(Ramachandramurthy, S.S.: A study of Telugu Place Names; Delhi 1985);* and names like Kodambakkam, Nungambakkam, Cheppakkam occur in Tamil Nadu.

Chunnakam, Mallakam, Pannakam, Panankamam, Kodikamam, Veemankamam and Valikamam are place names found in Jaffna.



*Tamil Potsherds from Poonakari 300B.C.*

*These potsherds discoverd at Poonakari in Jaffna by Dr.P.Pushparatnam during his Archaeological Survey during 1989-92 are datable to 300 B.C. The writing in Tamil Brahmi reads from left to right: 'Velan', "Loma' and 'La'.*

## The early history of Jaffna

It is not my intention to provide the entire early history of Jaffna in this short work. However the salient features are given in outline.

The earliest extant history books relating to the Tamil homeland in Sri Lanka as a separate entity are the 'Vaiya Padal' and 'Kailaya Malai', which were written soon after the formation of the Jaffna Kingdom based at Nallur in the 13th Century.

The 'Yalpana Vaipava Malai (YPM)' the most significant historical tract of this period was compiled from the above two as well as two other earlier works 'Rasa Murai' and 'Pararajasekaran Ula', both of which are now extinct. The YPM mentions three separate Kingdoms in the North based at three different capitals.

1. The Kingdom of Kathiramalai
2. The Kingdom of Cengada Nagar (Cingai Nagar)
3. The Kingdom of Nallur.

The earliest reliable information we could gather from this work is about 'King Ukkira Cingan ' (795 A.D) who after ruling from Kadiramalai for a period, creates a new capital called Cingai Nagar. The Cingai Nagar realm is corroborated by the 'Kotagama Inscription' now at Colombo Museum.

To learn about the early Tamils of Jaffna before this period we have to turn towards tools like Archaeology, Cultural Anthropology, Numismatics and Historical Linguistics.

For long the Tamils living in the ancient villages of Jaffna had in their race memories that Kanterodai was the ancient capital of their homeland. Mudaliyar Rasanayagam during the early part of twentieth century identified Kathiramalai as the present Kanterodai, the ancient capital of the Nagas. Historian C.S. Navaratnam believed that Kanterodai is the Kandavadanama (A prakritised form of Kanda Madanam: கந்த மாதனம்) mentioned as one of the Naga Capitals in Mahavamsa.

Sir Paul E. Peiris the eminent Sinhala archaeologist and historian began archaeological excavations at Kanterodai and Vallipuram between 1917 and 1919.

He wrote a piece in the Ceylon Daily News dated 22-02-1919: " I hope the Tamil people will realise that in truth there lies buried in their sands, the story of much more fascinating developments than they had hither to dreamed."

In his article published in the Journal of the Royal Asiatic Society (Ceylon Branch) the great academic wrote: "It stands to reason that a country which is only thirty miles from India and which would have been seen by the Indian fishermen every morning as they sailed out to catch their fish would have been occupied as soon as the continent was peopled by men who understood how to sail. I suggest that the North of Ceylon was a flourishing settlement centuries before Vijaya was born" *(J.R.A.S, C.B. Vol. XXVIII; No.72, p.65.)*

Sir Paul Peiris's prophetic statement was proved right when the Archaelogical Team from the Pennsylvania University, U.S.A under Vimala Begley began initial excavations at Kanterodai in 1967 followed by further excavations by Bennett Bronson in 1970.

RADIOCARBON DATES FROM KANTARODAI, SRI LANKA (CEYLON) 1977

| P. No. | Sample No. | Trench | Stratum | Pretreatment | 5568 Half-life B.P. 1950 | A.D/B.C. | 5730 Half-life A.D./B.C. | MASCA Corr[1] A.D./B.C. |
|---|---|---|---|---|---|---|---|---|
| P-2521 | 4 | A | IV | — | 2020 ± 50 | 70 B.C. | 140 ± 50 B.C. | 10- 100 ± 50 B.C. |
| P-2518 | 5 | A | IV | NaOH | 2290 ± 50 | 340 B.C. | 410 ± 50 B.C. | 420 ± 50 B.C. |
| P-2520 | 8 | A | V | — | 2180 ± 60 | 230 B.C. | 290 ± 60 B.C. | 270- 390 ± 60 B.C. |
| P-2524 | 9 | A | VI | — | 2340 ± 50 | 390 B.C. | 460 ± 30 B.C. | 440 ± 50 B.C. |
| P-2514 | 1 | B | V | — | 2250 ± 60 | 300 B.C. | 370 ± 60 B.C. | 410 ± 60 B.C. |
| P-2515 | 2 | B | VI | — | 2990 ± 60 | 1040 B.C. | 1130 ± 60 B.C. | 1290 ± 60 B.C. |
| P-2516 | 3 | B | VI | NaOH | 2070 ± 60 | 120 B.C. | 180 ± 60 B.C. | 130 ± 60 B.C. |
| P-2522 | 7 | B | VII | — | 2110 ± 60 | 150 B.C. | 220 ± 60 B.C. | 170- 200 ± 60 B.C. |
| P-2523 | 15 | B | VIII | — | 2060 ± 50 | 110 B.C. | 170 ± 60 B.C. | 120- 140 ± 60 B.C. |
| P-2525 | 16 | B | VIII | — | 2730 ± 220* | 780 B.C. | 870 ± 220 B.C. | 940- 980 ± 220 B.C. |
| P-2519 | 17 | B | IX | NaOH | 2290 ± 60 | 340 B.C. | 410 ± 60 B.C. | 420 ± 60 B.C. |
| P-2528 | 19 | B | XI | — | 2370 ± 60 | 420 B.C. | 500 ± 60 B.C. | 480 ± 60 B.C. |
| P-2526 | 18 | B | X | — | 2090 ± 50 | 140 B.C. | 200 ± 60 B.C. | 140- 190 ± 50 B.C. |
| P-2529 | 6 | X | III | — | 2350 ± 200* | 400 B.C. | 470 ± 210 B.C. | 440- 460 ± 210 B.C. |
| P-2517 | 12 | X | IV or V | NaOH | 2250 ± 50 | 300 B.C. | 370 ± 50 B.C. | 410 ± 50 B.C. |
| P-2527 | 11 | X | IV or V | Too Small | | | | |

* Large tolerance due to small sample size necessitating counting in small counter.
1 For explanation of MASCA corrections see *MASCA Newsletter*, 1973, Vol.9, No.1, p.1-20.

*Reported by Pennsylvania University Museum U.S.A.*

The Radio Carbon datings of the Kanterodai findings were released by the Archaeological Dept. of Sri Lanka and appeared in the 'Week-end ' paper on 8-2-1982 (see table).

*(to be continued)*

**Student Visa from Sri Lanka and India**

**Education Advisor for University and Private College in the UK for the last 20 Years and obtained visas for more than 400 students with the expert advice and guidance**

**Expert advice and guidance will be given to obtain the visa**

**Full-time Courses for Overseas Students at:**

**LACE( London Academy of Computing & Electronics)**

**58a, Upper Tooting Road, London SW17 7PB**

**Accountancy CAT(ACCA), Computer and Business Studies**

Any one Enrol before end of July will be given a discount their First Year Fee

**Call R Mahalingam on 020 8767 4698 or 07956 309 426**

# அன்பின் றெபேக்காவிற்கு . . . !

### காலத்தை பதிவு செய்து வரையும் விமர்சன மடலிது

**றஞ்சன்**
***(லண்டனின் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒரு பேப்பருக்காக)***

முதலில் என் சிந்தனையை புலம் பெயர் வாழ் இளைய தலைமுறை மீது (என்மீதும்) செலுத்த வழி செய்த ஒரு பேப்பர்காரன்களுக்கும் (இருபாலரும் வேலை செய்யும் இடத்தில் என்ன ஆணாதிக்கமோ) என் சிந்தனையை துயில் எழுப்பிய சிந்துவிற்கும் றெபேக்காவிற்கும் முதலில் என் 'தமிங்கிலிஷ்' நன்றிகள். (சோற்றை மறக்க மாட்டார்கள். சோறு போடும் பெற்றோரை மறந்து விடுவார்கள் அதனால் தான் தமிங்கிலிஷ் போட்டேன்)'

முதலில் றெபேக்காவின் கருத்து சம்பந்தமான எனது ஆதங்கம். ஒரு பெண்ணோ அல்லது ஆணோ தாம் எப்படி வாழ வேண்டும், எவ்வாறு வாழ வேண்டும் என்பதெல்லாம் அவரவர் சொந்த விருப்பத்திற்குரியது. அதில் நான் மட்டும் அல்ல எவருமே தலையிட முடியாது. ஆனால் முடிவெடுப்பது என்ற சொல்லில் அறியாமை புகுந்து விளையாடும் போது, அறியாமை என்னும் இருளை அகற்றுவது அறிந்தோர் அனைவரினதும் தலையாய கடமை. முதலில் றெபேக்கா தான் ஒரு தமிழ் இளைஞனை மணவாளனாக ஏற்று கொள்ளாமைக்கு தான் கண்டுகளித்து அனுபவித்தவற்றில் இருந்து பல காரணங்களை கூறி இருந்தார். அது இளைய தலைமுறையிடம் குறிப்பாக பிரித்தானியா இளம் யுவதிகளிடம் பல்வேறுபட்ட தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கும். அது ஆரோக்கியமான சிந்தனையாகவோ அல்லது அதற்கு நேர் எதிர்மாறானதாகவோ இருக்கலாம்.

என்னை பொறுத்த மட்டில் வாழ்க்கை என்பது நான் மட்டும் வாழ்வதற்கானது அல்ல. நாங்கள் எல்லோரும் வாழ வேண்டும் என்ற பொது நியதிக்கு உட்பட்டதாக அமைய வேண்டும். றெபேக்கா நினைப்பது போல அவர் தன்னுடைய வாழ்க்கையை அமைத்து கொண்டால், அவரின் வாழ்க்கை மட்டும் அல்ல, அவரின் சந்ததியின் வாழ்க்கை கூட ஆரோக்கியமானதாக அமையாது.

அவர் தன்னுடைய வாழ்க்கையை அனுபவித்து வாழ வேண்டும் என்பதற்காகவும் (பேருந்துகளிலும், தொடருந்துகளிலும் பொழுது போக்கிற்காக முத்தமிட்டும், காரிருளில் கரு ஒன்று உருவாக நடைபெறும் அந்தரங்கத்தை பட்ட பகலில் பாலகர் முன் அரங்கேற்றும் வாழ்க்கை தான் வாழ்க்கையில் ரசிக்க கூடிய ருசிகரமான செயல் என்று நினைக்கிறார் போல). ஆடம்பரமாக வாழ வேண்டும் என்பதற்காகவும் தமிழ் இளைஞர்களை முற்றாக வெறுக்கிறார்?

கட்டிளம் காளை பருவத்தில் காமத்தின் வீச்சு காட்டுத்தீப்பொறி போல தான் இருக்கும் அதற்கு நீரை பாய்ச்ச அவர் யாரையும் நாடலாம். கறுப்பனையும் நாடலாம். வெள்ளையனையும் நாடலாம். அதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் தமிழனை அவர் நிராகரித்தமைக்கு, வேறு பல அந்தரங்க விஷயங்கள் கூட இருக்கலாம். அது அவரின் சிந்தனையை பொறுத்தது.

அதற்காக மீசை வைத்து இருக்கிற படியாலும், வெள்ளை சொக்ஸ் போடுறதாலையும், பட்டை தலையாலையும் தான் தமிழ் இளைஞனை நிராகரிக்கின்றேன். என்று உப்பு சப்பில்லாத காரணங்களை கூறி இருக்கிறார். அது எந்த விதத்திலும் ஏற்று கொள்ள முடியாத ஒன்று. ஏன், என்றால் தான் கட்டிய ஒரு இளைஞனை தன் அன்பால் அரவணைத்து தாயிடம் இருந்து கூட பிரித்து விடுகின்ற பெண்களால், ஏன் தன் மணவாளனை தனக்கு ஏற்ற மாதிரி தான் வாழும் சமூகத்திற்கு ஏற்ற மாதிரி மாற்ற முடியாமல் போகிறது. நிச்சயமாக எல்லா பெண்களாலும் முடியும். அது முடியாவிடில் அந்த பெண்களால் குடும்பம் என்ற பாரிய சுமையை சுமக்க முடியாது.

அந்த வகையில் நோக்குவோமாயின் றெபேக்காவின் காரணங்கள் ஏற்று கொள்ள முடியாதவை என்பதில் ஐயம் இல்லை. காதலையும் வீரத்தையும் முறையே வீச்சாகவும், மூச்சாகவும் கொண்ட தமிழ் இளைஞர்களை அற்ப சொற்ப காரணத்தை கூறி நிராகரித்தமை அவரின் அறிவிலி தன்மை என்றே நான் கூறுவேன்.

அடுத்து அவர் தன் இளமையின் எண்ணங்களுக்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக வேற்று நாட்டவனை மணந்தால், அவர் தன் எதிர் காலத்தின் மீது தன் கையாலேயே கரி பூசும் ஓர் செயலாகவே அமையும். இளமை இருக்கும் போது நிச்சயமாக ஒன்றும் தெரியாது. காமம் என்ற வீதியிலே சென்ற வாழ்க்கை அன்பு என்னும் பாதையில் இறங்கும் போது தான் பிரச்சினை தொடங்குகிறது. அவர் எதிர் பார்த்த அன்பு பாசம் புரிந்துணர்வு எல்லாம் கிடைக்குமா? அதனை கறுப்பனிடமோ அல்லது வெள்ளையனிடமோ எதிர்பார்ப்பது சரியா? தன் மகளையே கற்பழிக்கும் கறுப்பனிடமோ, குறட்டைக்கு கூட விவகாரத்து கேட்கின்ற வெள்ளையனிடமோ அதனை எதிர்பார்க்கலாமா?

றெபேக்கா சிந்திக்க வேண்டிய நேரம் இது. இந்த நேரத்தில் றெபேக்கா சிந்திக்க தவறுவாரேயாயின் அவருடைய வாழ்க்கை அருட்பிரகாசத்தால் என்ன ஆண்டவனாலும் செப்பனிட முடியாது.

அடுத்தாக தமிழ் இளைஞர்கள் வன்முறையாளர்கள் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். சிந்து தானும் றெபேக்காவின் வழியை ஏற்று கொள்வதாக குறிப்பிட்டு இருந்தார். தமிழ் இளைஞர்கள் வன்முறையாளர்கள் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. நான் இங்கே சொல்ல வருவது, விகிதாசாரப்படி மற்றைய இனத்தினரை விட தமிழரிடம் வன்முறை மிகவும் குறைவாகவே காணப்படுகிறது என்பதைத் தான். தாயகத்தில் மிகவும் கட்டுக்கோப்புடன் இருந்தவர்கள் திடீரென மடை திறந்த வெள்ளம் போல் புலம் பெயர்ந்தார்கள். (இன்றைய நிலையில் தாயகத்திலும் குழு மோதல்களும் வன்முறையும் இடம் பெறுவதை சுட்டி காட்டலாம் இன்றைய அக புற சூழ்நிலைகள் கருத்தில் கொள்ள படவேண்டும். 90-95 காலப்பகுதியில் யாழ் குடாநாட்டை மனு நீதிக்கே சவால் விடும் வகையில் புலிகள் ஆட்சி செய்ததனை நினைவில் கொள்க).

அவ்வாறு புலம் பெயர்ந்தவர்களில் சிலபேர் நாங்கள் புதிய உலகத்தில் புதிய பிறவி எடுத்து இருக்கின்றோம். (நானும் சில காலம் அப்படித்தான் நினைத்தேன்) என்ற நினைப்பால் சுதந்திரம் எது என்று தெரியாமல் அதனை அநுபவிக்க முற்படுகிறார்கள். அதனால் சிற்சில சமயங்களில் வன்முறை வெடிக்கிறது.

ஆனால் கறுப்பின மக்கள் அப்படி இல்லை தலைமுறை தலைமுறையாக நாகரீகம் வளர்ச்சியடைந்த சமூகத்தில் வாழ்ந்தாலும் அவர்களிடத்தில் இன்னும் கொடிய வன்முறை தலை விரித்தாடுகிறது. ஆனால் இங்கு பிறந்த, எமது இளைய தலைமுறையிடம் வன்முறை என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. எனவே தான் கூறுகிறேன் ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்தில் வன்முறை என்பது எமது, சமூகத்திலும் விரைவில் களையப்பட்டுவிடும். அதன்பிறகு எமது தமிழ் சமூகம் ஆரோக்கியமான உள்ள ஒரு மக்கள் கூட்டமாக புலம் பெயர் நாடுகளில் திகழும்.

# இலங்கையில் முஸ்லிம்கள் செய்ய வேண்டியதென்ன



இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிவாரணப்பணியையும் மீள் கட்டுமானப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்வதற்காக பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து உலக நாடுகள் அரசாங்கத்தை வற்புறுத்தியதும் அரசாங்கம் பொதுக்கட்டமைப்பில் யார் யார் அங்கம் வகிக்கவேண்டும், அதன் செயற்பாடுகள், அதன் வலு என்பன அடங்கிய உத்தேச வரைவு ஒன்றைத் தயாரித்து புலிகளின் பார்வைக்கு அனுப்பி அவர்களின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்தத் தயாராகியுள்ளது.

வடக்கு கிழக்கின் குறிப்பிடத்தக்க அளவு பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதனாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் பெரும்பாலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருப்பதனாலும் இந்தக் கூட்டமைப்பில் தமிழர் தரப்பாக புலிகளை இணைக்க வேண்டிய அவசியம் குறித்து ஜப்பானும் அமெரிக்காவும் வலியுறுத்தியதுடன் கண்காணிப்பாளராக இருக்கும் நோர்வேயை ஆவன செய்யும்படி கேட்டுக்கொண்டன.

பல்வேறு இழுபறிகள் மத்தியில் உத்தேச வரைவானது கைச்சாத்திடப்பட்டு நடைமுறைக்கு வரும் நாள் நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில் புதிய பூதம் கிளம்பியுள்ளது. பொதுக்கட்டமைப்பில் அங்கத்தினராக முஸ்லிம்கள் எவரும் இல்லை என்ற போர்க் குரல் முஸ்லிம் பிரதிநிதிகளால் எழுப்பப்பட்டுள்ளது.

இதனை எழுதும்போது கடைசியாக விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடந்த பேச்சுவார்த்தை கூட முஸ்லிம்களின் பிரதி நிதித்துவம் சம்பந்தமான கேள்விகளாலே இடை நிறுத்தப்பட்டது ஞாபகம் வருகிறது.

இப்போ பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் தரப்பினர் இடம்பெறும் பட்சத்தில் தமக்கு ஆட்சேபனை எதுவும் இல்லையென்றும் புலிகள் தெரிவித்து விட்டார்கள். புலிகளைப் பொறுத்தளவிலும் முஸ்லிம்களின் அரசியல் விருப்பங்களைப் பொறுத்தளவிலும் இது பெரிய மாற்றம் என்றுதான் சொல்லவேண்டும். கடந்தகாலத்தைப்போலில்லாமல் விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை அரவணைத்துச் செல்ல விரும்புவதையே இது காட்டுகிறது இம்முறை பிரச்சனை அரசாங்கத்தின் பக்கமிருந்து கிளம்பியுள்ளது.

முஸ்லிம்களைப் பிரதிநிதிக்கும் கட்சிகளில் ரவூப் ஹக்கீம் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறார். அவர் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து எதிர் வரிசையில் இருக்கிறது. பேரியல் அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணி சந்திரிக்காவின் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியில் இருக்கிறது. இவை தவிர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியிலும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குப் பலம் சிதறிப் போய்விட்டது. அவர்கள் பிற கட்சிகளுக்கு வாக்களித்து பாராளுமன்றப் பலத்தைச் சிதற வைத்துவிட்டார்கள். இதனை முஸ்லிம்களின் பேரம் பேசும் அரசியல் என்று பத்திரிகைகள் எழுதின ஒவ்வொரு தேர்தலின் பின்னும் அமைச்சுப் பதவிகளுக்காகவும் அதிகாரங்களுக்காகவும் ஆட்சியிலிருக்கும் கட்சிக்கு ஆதரவு கொடுப்பதையே முஸ்லிம் கட்சிகள் இன்றுவரை செய்கின்றன.

ஆக முஸ்லிம்களை அரசியல் ரீதியாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு தனியான ஒரு அமைப்போ கட்சியோ இல்லாத நிலை பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தை அளிப்பதில் சிக்கலைத் தோற்றுவித்திருக்கிறது. இதே நிலைதான் கடந்த தடவை பேச்சுவார்த்தையின் போதும் ஏற்பட்டது.

பேச்சு வார்த்தையில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்காக யாரை அழைப்பது. ரவூப்பையா, பேரியலையா, அல்லது உதிரிப் பாராளுமன்ற உறுப்பினர்களையா என்ற கேள்வி எழுந்தது. அதே கேள்விகள்தான் இப்போதும் எழுகின்றன. பொதுக் கட்டமைப்பில் முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப் படுத்த யாரை அழைப்பது? இங்கேதான் முஸ்லிம்கள் தமக்கான அரசியல் வெற்றிடத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். சலுகைகளுக்காக விலைபோகும் தலைமைகளை நம்பி முஸ்லிம் சமூகம் பிரிந்துபோய்க் கிடக்கிறது.

தமிழ்க்கூட்டமைப்பு போன்று பல்வேறு கட்சிகள் இணைந்த ஒரே கோட்பாடுடைய கூட்டமைப்பு முஸ்லிம் மக்களுக்கு இல்லாத பட்சத்தில் இனிவரும் காலங்களில் இனப் பிரச்சனைக்கான தீர்வுகளும் முஸ்லிம்களுக்கு எட்டாமலே போய்க் கொண்டிருக்கும்.

கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் தம்மைத் தனியொரு தேசிய இனமாக அடையாளப்படுத்தி வருகிறார்கள். ஆக தனித்தேசிய இனமென்னும் கொள்கை வலுப்பெறும் காலத்தின் இனப்பிரச்சனை மேலும் சிக்கலாகலாம் என்ற காரணத்தினால் புலிகள் அரசு இருவருமே முஸ்லிம்களுடன் அனுசரணையாகப் போக விரும்பினாலும் அரசியற் சட்டமூலம் என்று வரும்போது அது எவ்வளவு சாத்தியம் என்று பார்க்கவேண்டும்

இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்று வரும் பட்சத்தில் முஸ்லிம் மக்கள் தனித்தேசிய இனமாகச் செயற்படுவதா இல்லை தமிழர் சிங்களவர் தரப்புகளுடன் இணைந்திருப்பதா என்பதை அபிப்பிராய வாக்கெடுப்பு மூலமே தீர்மானிக்க வேண்டியிருக்கும்.

அப்படியொரு சந்தர்ப்பம் வரும் பட்சத்தில் தங்களுக்கென்று தலைவரோ அரசியற் சக்தியோ இல்லாமையை முஸ்லிம்கள் உணரவேண்டி வரும். சுனாமியால் பெருமளவு முஸ்லிம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் மூலமும் புலிகளின் புனர்வாழ்வுக்கழகம் மூலமும் அவர்கள் உதவிகளைப் பெற்றிருந்தாலும் உலக நாடுகள் வழங்கிய நிதியுதவிகள் முஸ்லிம் மக்களைப் போய்ச்சேருவதைக் கண்காணிப்பதற்கு பொதுக்கட்டமைப்பில் அவர்களும் இடம்பெறவேண்டியது கட்டாயம். இது அரசியலை விட மனிதாபிமானம் நிறைந்த பணி. முஸ்லிம் மக்களும் இனிவரும் தேர்தலிலாவது ஒன்றுபட்ட பிரதிநிதித்துவத்தை வலியுறுத்த வேண்டும்.

- சுழநாதன்




பொன். காந்தன்
(வன்னியிலிருந்த ஒரு பேப்பருக்காக)

கொண்டுவா வயலின்
வயற்கரையில் போய் இருந்து
வானுயர குழற வேண்டும் போல்
இருக்கிறது
பின்னயென்ன!
பேந்தும் பேந்தும்
இழுபறி தானே
இன்றைய நேற்றைய
அரசியலாப்போச்சு
ஆண்டு மூன்று கடந்து
சமாதானச் சங்கதி
அறுவடை தான் என்ன?

அற்புத உயிர்கள் பலதை
அறுவார் வேடம் போட்டு
விழுங்கினது தானே மிச்சம்.
என்ன நினைக்கின்றாங்கள்
கோதாரில விழுந்த
உந்தக்கொடுமைக்காரர்
தமிழரை பாதாளத்துக்கை
விழுத்துறதுக்கு
உற்ற துணை
சமாதான காலமெண்டோ
என்ன கனவு இட்டிவிழுவாருக்கு!

நொந்து நூலாகி
வெந்து விழிபிதுங்கி
அண்ட சராசரமே
அடுப்படிவரை வந்து
அத்தனையையும்
முடிக்கப்போகுதெண்டு
ஆணையிறவைப் பறிகொடுத்து
தீச்சுவாலை தீர்ந்து போக
திணறினவங்கள்
கடந்ததை மறந்து
காத்தடிச்ச பலூன் மாதிரி எழும்பி
கழிவிலும் கழிவான
இயம வேலைகள் செய்ய
ராப் பகலா முனையிறாங்கள்!

அப்பக்கடையில இருந்து
அங்கங்க காவலரண்களை
மக்கள் கெம்பி
கிளப்பி எறிஞ்ச பிறகும்
வெட்கம் இல்லாமல்
ஊரான் காணியில
உலாவித்திரியிறாங்கள்
கண்காணிப்புக்குழு இருந்தென்ன
கண்டறாவியள்
பாசக்கயிறுகளை
பதுக்கி வைச்சு
எறியிறத எங்க நிற்பாட்டினது
மூண்டு வருசத்தில
முகடு வரை
பொறுமை போச்சுது தமிழருக்கு
ஆக மொத்தம்
அடுத்தது இனி

போர் என்பது
புலரத்தான் போகிறது
இடைத்தரகர் வேலைக்கு
இழுபடுகிறவையே

ஒரு கட்டத்தில
போர் தான் பொருத்தம்
புறப்படட்டும் தமிழர் படைகள்
என்று
சொல்லி அவை புறப்பட்டாலும்
புதினம் இல்லை
பின்னயென்ன!

வைக்கல் பட்டறை நாய்போல
நாட்டுக்கு நரகமாய்
அரசியலுக்கு அசிங்கமாய்
வாய்ச்சிருக்கு ஜே.வி.பி
போதாக்குறைக்கு
காவி ஸ்ரைல் வேண்டாம்
பாவி ஸ்ரைல் வேணுமெண்டு
சிகல உறுமய!

போதும் ரத்த ஆறு
ரணகளம்
செத்த வீடுகள்
இனி முத்தாக
முன்னுக்கு வந்திருக்கிற
சமாதான வாய்ப்பில
தமிழன்ர சொத்து சுகங்களை
நல்ல மனசோட
ஆரத்தழுவிக்கொடுத்து
இந்து சமுத்திர நடுவில
இதமாய் இருப்பம் எண்டு
எங்க சிந்திக்கினம்
எடுத்ததுக்கும் நான் மாட்டன்
அறிக்கை
நாண்டு கொண்டு நிக்கினம்

நாளைக்கு கஸ்ரப்படப்போறதுக்கு
கட்டியம் போல
இந்தப்பெரிய இனப்பிரச்சினையை
தீர்க்க
இப்பவாவது சிந்திப்பம் எண்டுறதை
விட்டுட்டு
இன்னுமொருக்கா சனாதிபதி
ஆகினா
என்னே சுகம் எண்டு
அம்மணிக்கு ஆதங்கம்!

ஏதோ அம்மணிக்கு ஞானம் பிறந்த
மாதிரி க்கிடக்கு
உந்த ஜே.வி.பி தான்
குறுக்க நிண்டு குழறுபடி செய்யுது
இல்லாட்டி அம்மணி
தமிழன்ர அத்தனையையும்
தாம்பாளத்தில வைச்சு
தாரை வார்த்திடுவா எண்டு
ஒரு மாயத்தோற்றம் சிலருக்கு
அவா என்ன இலேசுப்பட்ட சீவனே
இழுத்து இழுத்து
எத்தின பேற்ற வாழ்க்கையில
மண்ணள்ளிப்போட்ட
மாய அரசியல்லோ!

பதவிக்காலம் முடியும் வரை
படம் காட்ட வேணுமல்லோ
அவர் திறம் இவர் திறம் எண்டு

தென்னிலங்கை அரசியலில
ஆரும் தளம்பிறது
அறிவுள்ளாருக்கு சத்தியமா
அழகில்ல!
சாணக்கிய அரசியலில
தமிழருக்கு இப்ப வெற்றி தான்
சறுக்குப்பட்டு விழந்தெழும்பிறது
அம்மணி பக்கம் தான்
கணக்கை பிழையாய்
கூட்டுறதிலேயே
இப்பவும் அவயின்ரை சிந்தனை
போகுது
முன்னால சிரிச்சிக்கொண்டு
பின்னால குத்துறதுக்கு
வளம் பார்க்கிறதே அவயின்ர
வழமையாப்போச்சு
இரணைமடுவில
தமிழர் ஆகாயவிமானம் அடுக்கி
வைச்சிருக்கினமாம் எண்டு
பெருவிரல்ல நிண்டு பேசுகினம்
என்ன புதினமடா!

அட்ட திக்கிலையும்
கப்பல் விட்ட பரம்பரை
இப்ப பிளேன் வேண்டினா
என்ன புதினமே
வரலாறு திரும்பியிருக்கு
அவ்வளவு தான்
இரணைமடுவில என்ன
நிலாவரையிலயும்
வாகரையிலயும்
பண்டிவிரிச்சானிலையும்
வற்றாப்பளையிலயும்
கோணமலையிலயும்
எங்கட விமானம்
ஏறி இறங்கினாத்தான் என்ன!

ஏன் அவை இவைக்கு அங்க இஞ்ச
எரியுது
நாடு கேட்டுப்போராடுற ஆக்களுட்ட
நாட்டுக்குத் தேவையான
அத்தனையும்
இருக்க வேண்டியது
சத்தியமாய் நியாயமல்லோ!

பாரதத்துக்கு வேற எங்கட பிளேன்
கவலை
நாங்கள் என்ன புதுடில்லியிலையோ
பிளேனுக்கு பெற்றோல்
அடிக்கப்போகிறம்
அல்லது கல்கத்தாவில கவிண்டு
நிமிர்ந்து
சாகசம் செய்யப்போகிறம் எண்டு
எப்பாவது சொன்னாங்களே!

ஏனாப்பா அவை அவைக்கு
வீண்கவலை
பாரதத்தின்ற கவலையை
நினைச்சா
எங்களுக்கு கவலையா இருக்கு
என்ன தான் இருந்தாலும்
அண்டை நாடல்லோ
எங்கட வளர்ச்சிக்கு
தட்டிக்கொடுக்கிறதல்லோ
அயலட்டையின்ற பண்பாடு
இதென்னடா என்றால்
எதிர்மாறக்கிடக்கு

எத்திணை பிரச்சினைகள்
சமாதான காலத்தில முத்திக்கிடக்கு
எங்கேயோ முட்டி வெடிச்சாலும்
வெடிக்கும்
வெடிச்சால்
முழுப்பேய் டில்லி சூனியம்
எல்லாம்
விழுமட்டும்
வெடி சன்னதம் ஆடித்தான் தீரும்!

கடைசியில
கோணமலையில் தமிழர்
கொடியேத்தி
இந்தக்குவலயத்திற்கு
நாடு மீட்ட கதையை
தமிழர்கள் சொல்லிற நேரம் வரும்
பறிச்சால் எங்களுக்கு கௌரவம்
கொடுத்தால் எங்கட கௌரவம்
அவைக்கும்.

# Grace அக்கா வீட்டு Kitchen . . . . . . .

## புத்தகத்தில் காணாத புத்திமதிகள்

## கிறேஸ் அக்காவின் கிச்சன் அனுபவம்



- தேயிலை தூளில் ஏலக்காயை போட்டு வைத்தால் மணம் கமகமக்கும்.
- முட்டையில் எண்ணெய் தடவி வைத்தால் விரைவில் கெடாது.
- எலுமிச்சை சாதம் செய்யும் போது சிறிது வெந்தயத்தை வறுத்து பொடி செய்து தூவினால் நல்ல மணமாக இருக்கும்.
- மோர்க்குழம்பு செய்யும் போது சிறிது கடுகு அரைத்துச் சேர்த்தால் சுவை அற்புதமாக இருக்கும்
- வீட்டில் ஈ மொய்த்தால் கற்பூரத் தூளை தூவுங்கள் ஈ கிட்ட வராது.
- எறும்புத் தொல்லையானால் மஞ்சள் தூள் அல்லது சூடத்தூள் தூவ எறும்பு அகன்று விடும்.
- உப்புக் கலந்த நீரில் நனைத்த துணியில் பூக்களை வைத்தால் பூக்கள் அப்போது பூத்தது போல் இருக்கும்.
- அலுமினியப் பாத்திரத்தில் ஏற்படும் ஒருவித வாசனையைப் போக்க வெங்காயத்தை நீருடன் போட்டு கொதிக்க வைக்கவும்.

# Further Memories of Jaffna

*(Continued from page 8)*

The period between the LTTE withdrawing, and the SLA arriving, in Vadamarachchi, was a time of great instability. In the absence of either LTTE or government police, law and order began to break down and, as the supply of food became seriously disrupted, looting became widespread. There were reports that the LTTE sent troops back to the area to administer 'justice' in these situations. One morning, the cook's son, who had climbed up to the top of the water tower, discovered that two solar panels were missing from the roof of the house. These panels were used for powering the radio system that enabled us to keep in touch with both our Colombo HQ and one of our pick-ups. Not only did we lose the solar panels – we lost a 'watcher' too! The man who had been on night duty at the time the panels were stolen, was dismissed. Luckily, we had a back-up system that could be used to keep our communications system operative.

In these worrying times, most people remained in their homes during the hours of darkness and while Vadamarachchi was not being targeted by the Sri Lankan armed forces, explosions were heard from almost every direction around us. However, just after 6.00 pm one evening, I heard the report of a terrific explosion which seemed to come from the direction of the harbour. It was change-over time for the 'watchers' and so the night shift man, when he reported for duty, was quizzed about what he knew or had heard. His response, that the LTTE were destroying a submarine, was the most fanciful I had ever heard but, as it turned out, was nevertheless true! The Sea Tigers had built a mini-submarine which they had been testing out prior to the advance of the SLA and, as at that time, not being completely 'waterproof', had decided to destroy it rather than leave it for the SLN to gain intelligence information.

A work frightening experience came the day after the SLA had entered Point Pedro. It was a weekend and all local staff members, except the 'watcher', were resting in their respective lodgings. The 'watcher', who was stationed at the gate, was terrified in case SLA troops arrived and I instructed him to remain calm and be respectful if the military arrived.

I had installed an intercom between the gate and my room in order that the 'watchers' could summon me if there were any problems but, as everything seemed quiet, I decided to take a shower. The bathroom was located at the rear of the premises and when covered from head to toe in soap, was not pleased when the intercom buzzer interrupted my ablutions. The buzzer continued but when I heard a knock on the bathroom door – freezing at the sight I beheld – ten or a dozen SLA troops, pointing their AK47's and RPG launchers at me, and accompanied by a policeman. Whether through anger or fear, I bawled at the policeman to get the troops out of our compound. We were an INGO and did not permit weapons on our premises; the LTTE had always observed this protocol and I didn't see why the SLA shouldn't. What the policeman and troops must have been thinking, I don't know, but a bawling, sarong-clad, soapy white man must have given them a few laughs in their barracks later that day! Eventually, they were convinced that we were not sheltering LTTE troops and left the compound. Another good excuse for a glass of arrack and cola!

## இலங்கை அரசின்
# “ஒப்பரேசன் பொடலங்கா”

*(26ம் பக்கத் தொடர்ச்சி)*

உள்ளே நுளைய வேண்டும். அதுவும் சந்தேகம் ஏற்படாதவகையில்.

இப்போதய நிலையில் யார் அந்தப் பகுதிக்குள் நுழைந்து இலகுவாக நெருங்குகிறார்கள் என்றால்,

அது புலம்பெயர்ந்த தமிழர்கள்.

தாயகத்தை விட்டு நீண்டகாலம் பிரிந்திருந்த கவலையை மறக்கப்போகும் உறவுகளுடன் அங்குள்ளவர்கள் அன்பாகவும் நெருக்கமாகவும் பழகுகிறார்கள். அதைவிட நமது உறவுகள் வெளிநாடுகளில் பல திறமைகளைப் பெற்றுள்ளனர். தொழில் தேர்ச்சி தொழில்நுட்பம் கணணிதுறை வர்த்தகம் என பல்வேறு துறைகளில் திறண்பெற்ற அவர்களில் சிலர் தமது திறமைகளை தாயகத்தில் பயன்படுத்த விரும்புகிறார்கள்?.

இதனால் வெளிநாடுகளில் இருந்து போகும் உற்வுகளுக்கும் அங்கு நிர்வாகத்தில் இருப்பவர்களுக்கும் நெருக்கம் அதிகம்.

இப்போது புலனாய்வுதுறையின் கண்களில் தெரியும் அருமையான சந்தர்ப்பம் இவர்கள்தான்!

சரி. வெளிநாட்டிலிருந்து வருபவர் என்ற போர்வையில் உள்ளூர் ஆள் ஒருவரை அனுப்ப முடியாதா? அங்குதான் சிக்கல். கொழும்பில் இருக்கும் இளைஞனின் நடையுடை பாவனைக்கும், வெளிநாட்டிலிருந்து வரும் ஒருவரின் நடையுடை பாவனைக்கும் நிறையவே வித்தியாசமுண்டு.

தவிர, வேறு சில வழிமுறைகளாலும் ஆள் வெளிநாடு இல்லையென்பதைக் கண்டு பிடித்து விடலாம்.

சுலபமான வழி, நிஜமாகவே வெளிநாடுகளில் இருப்பவர்களைப் பிடிப்பதுதான்!

இந்த விடயத்தில் அரசும் புலனாய்வு துறையும் முக்கிய கவனம் செலுத்தி நிறைய நிதியும் ஒதுக்கி வேலையும் முடுக்கிவிடப் பட்டுள்ளதாக நம்பப்படுகிறது.

அரசு முக்கியஸ்தர் ஒருவரிடம் இந்த பொறுப்பு கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காகப் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் (சுனாமி நிதி) சொல்லுகிறார்கள்.

இதற்கான பிரதானதளம் வெளிநாடு ஒன்றில் அமைக்கப்பட்டு மிகவும் வேகமாக செயற்படத் தொடங்கியுள்ளதாகவும் சொல்லுகிறார்கள்.

### சரி. அந்த நாடு எது அண்ணா?

பயப்படாதீர்கள். அது கனடா இல்லை. லண்டனாம்!

லண்டனில் மிக தீவிரப்படுத்தப்பட்டுள்ள இந்த நடவடிக்கைக்காக மக்களுடன் நெருங்கிப் பழகி, தமது வலையில் வீழ்த்துவதற்காக வேலை எடுத்து கொடுப்பது. பணஉதவி செய்வது, வாகனஉதவி செய்வது போன்ற சேவைகளை செய்து மக்களை நெருங்குகிறார்களாம்.

அதைவிட, இவர்களின் இலக்கு முக்கியமான ஒரு இடத்தில் நன்றாகக் கைகொடுக்க நிறைய சந்தர்ப்பம் உண்டு.

கனடா போலல்லாது, லண்டனில் விசா நிராகரிக்கப்பட்ட பல இளைஞர்கள் இருக்கின்றார்கள். சரியான வேலையில்லை, Visa இல்லை, Bank account இல்லை. நாளை என்ன நடக்குமோ என்ற பயம் வேறு. எந்த நேரமும் ஏற்றப்படலாம் என்ற வதந்தி. இப்படியான கலந்து கட்டிய மனோ நிலையுடன் கணிசமான அளவில் இளைஞர்கள் இருக்கிறார்கள்.

இப்போது இந்த ஒப்பரேஷனின் இலக்கு இவர்கள்தானாம்.

இவர்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறி, பணம் கொடுத்து, தொழில் செய்யும் நோக்கில் ஊருக்கு அனுப்ப முயற்சிக்கலாம்.

அப்படிச் செய்தால் சந்தேகம் வருவதற்கும் சாத்தியங்கள் குறைவு.

இப்படியான ஒரு நடவடிக்கை நடந்தால் அது கொஞ்சம் அபாயமானதாகவே இருக்கும்.

லண்டனில் உள்ள இந்த அணியின் இலக்கு அடுத்தபடியாக கனடா நோக்கித் திரும்பியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

ஆனால் இது முற்றிலும் வேறு விதமான ஒப்பரேஷன்.

கனடாவில் இலக்கு வைக்கப்படுவது ஓரளவுக்கு வசதியாக, சமுதாயத்தில் செல்வாக்காக இருக்கும் நபர்களை என்று சொல்லப்படுகிறது.

இதுபோன்ற ஊடுருவல் ஒன்றைச் செய்வதென்றால், ஒரே மாதிரியான social statusல் இருக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பது உளவுத்துறையின் பாலபாடம். அதற்கமைய ஒன்றுக்கொன்று எதிர் statusல் இருக்கும் புலம்பெயர்ந்த தமிழர்களை இலக்கு வைப்பதென்றால், கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், இந்த வழிமுறையைவிட சிறந்த வழிமுறை எதுவுமில்லை.

சும்மா சொல்லக்கூடாது. திட்டத்தை யார் போட்டார்களோ தெரியாது, locational approach விஷயத்தில் மிகவும் நன்றாக study பண்ணிப் போடப்பட்டுள்ள திட்டம் இது.

ஒப்பரேஷனுக்கான தலைமைச் செயலகம் கொழும்பிலிருந்து இயங்குவதாகக் கூறுகிறார்கள். இயங்குதளங்கள் இருப்பது டொரண்டோவிலும் லண்டனிலும். பணவிநியோகம் நடைபெறுவது தூதரகம் ஒன்றினூடாகவாம்.

புதிய வியாபார முயற்சிகள் அல்லது முதலீடுகள், சமுதாய அங்கீகாரம் பெறுவதற்காக ஊடக ஆதரவு அல்லது ஊடகங்களை உரிமையாக்குதல் போன்ற செயற்பாடுகள்தான் இப்படியான ஒப்பரேஷன்களின் initial stageல் நடைபெறும் என்பதற்கு அருமையான உதாரணங்கள் இஸ்ரேலின் கடந்த காலத்தில் நிறையவே இருக்கின்றன.

இதிலும் அதே மாதிரியான பாணியையே எதிர்பார்க்கலாம். எந்தளவுவரை பணத்தை திறந்துவிடுவார்கள் என்பதைப் பொறுத்தே எவ்வளவு தூரம்வரை செல்வார்கள் என்று சொல்ல முடியும்.

அதைவிட, இனி சொல்லப் போகும் தகவல் கொஞ்சம் சங்கடமானது.

அண்மையில் கனடாவில் சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர். அத்துடன் கனடாவில் அவர்களது விஷயங்கள் முடிந்துபோய் விட்டன.

இப்போது அவர்களில் சிலர் லண்டன் போய் சேர்ந்துவிட்டனர்.

கனடாவில் எல்லாம் பறிக்கப்பட்ட நிலையில் நாடுகடத்தப்பட்டவர்கள் எப்படி குறுகிய காலத்தில் லண்டன்வரை போனார்கள்? அங்கே என்ன செய்கிறார்கள்?

அதற்கு சொல்லப்படும் பதில்தான் கிளாமாக்ஸ்.

அவர்களை லண்டனுக்கு அனுப்பியது ஒரு அரசியல் பிரமுகராம்.

சரி அவர்களுக்கு இவர்களுடன் எப்படி தொடர்பு வந்தது? இவர்கள் கனடாவில் சிறைக்குள் இருந்தபோது ஒருவர் சிறைக்கு சென்று தொடர்புகளை ஏற்படுத்தினார் என்று சொல்லப்படுகின்றது. அந்த நபர் கனடாவுக்கு வெளியேயும், இந்தியாவிலும் சில அரசியல் தொடர்புகளை வைத்திருப்பவர் என்று சொல்லப்படுகிறது.

இதை நம்புவதற்கு காரணம் இவர்கள் நாடுகடத்தப்பட்டபோது இலங்கையில் கைது செய்யப்படாமல் பாதுகாப்பாக வெளியில் வந்துவிட்டார்கள். இதுமாத்திரமல்ல, எந்த வழியூடாக இலங்கைக்குள் நுழைந்தார்களோ, அதே விமான நிலையம் வழியாக பத்திரமாக லண்டன்வரை வந்துவிட்டார்கள்.

ஏதோ ஒரு பெரிய கை பின்னணியில் இல்லாவிட்டால் இது இலகுவான காரியமல்ல.

பார்க்கலாம். விஷயம் எப்போதாவது வெளியே வரும்தானே!


போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்!

2 பங்கு இறைச்சி வாங்குபவர்களுக்கு 1 முட்டை பக்கர் இலவசம்

YOUR SHOP
உங்கள் கடை

020 8672 9110 / 07932 544 746
188 Mitcham Road, Tooting SW17 9NJ

Fresh Fish, Meat & Vegetables, Sri Lankan Groceries and Off Licence

திறந்திருக்கும் நேரம்:
9.00am - 11.00pm
ஞாயிறு 9.30am - 10.30pm

எங்கள் கடையில் விற்க்கும் உடன் பங்கு இறைச்சியை வேறு
எந்த கடைகளிலும் பெற முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.
சுத்தமான தரமான உடன் பங்கு இறைச்சிகளை ஒவ்வொரு
நாட்களிலும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்
வாரத்தின் ஏழு நாட்களும் மீன் வெட்டி சுத்தம் செய்து தரப்படும்
சனி, ஞாயிறு, திங்கள் கிழமைகளில் இலங்கையிலிருந்து
வரவிக்கப்பட்ட மீன்கள் கிடைக்கும். சுறா மீன் தோல் நீக்கித்
தரப்படும் குளிருட்டப்பட்ட மீன் வகைகளும் வெட்டி கொடுக்கப்படும்.



£50 மேல் எம்மிடம் கொள்வனவு செய்பவர்களுக்கு
free delivery within 2-3 miles
£40 மேல் எம்மிடம் கொள்வனவு செய்பவர்களுக்கு
Onion Bag அல்லது நெக்டோ இலவசம்

# பிரண்டல் பத்தைக்க கள்ளடிக்க. . .

**வசந்தன்**
*(அவுஸ்திரேலியாவிலிருந்து)*



வணக்கம்!

சின்ன வயசிலயே (ஒன்பது வயது) இது துவங்கீட்டுது. எங்கட வீட்டு அடிவளவு பெரிய பனங்காணிதான். அதுக்க அன்னமுனா பத்தையா வளந்திருக்கும். ரெண்டு பனையில கள்ளுச் சீவிறவை. அது சீவ விடுறதுக்குக் காசு வேண்டிறேல. பதிலா அரப் போத்தல் கள்ளுதான் ஒவ்வொரு நாளும் வேண்டுறது. எங்கட குறிச்சீக்க பெரும்பாலும் எல்லாரும் இப்பிடித்தான் செய்யிறவை. நிறைய வீட்டில குடிமக்கள் இருந்தீச்சினம். ஆனா எங்கட வீட்டில அப்பிடி ஒருத்தரும் இல்ல.

ஆனா அந்த அரப்போத்தல் கள்ளில ஒவ்வொருநாளும் ஒரு ரம்ளர் தருவார் என்ர அப்பா. அப்பதான் இறக்கின உடன் கள்ளு. நல்ல சுவையா இருக்கும். ஆரம்பத்தில கொஞ்சம் கூச்சப் பட்டனான் எண்டாலும் பிடிச்சிட்டன். ஒவ்வொரு நாளும் கள்ளுச் சீவிற வர் அரப்போத்தல் கள்ள எங்கட கிணத்தடி முருங்கையில வச்சிட்டுப் போடுவார். நான் ஒரு கப் என்ர பாட்டில எடுத்துக் குடிச்சிடுவன். ஆனா கள்ளு வைக்கக் கொஞ்சம் பிந்தினா குடிக்கேலாது. ஏனெண்டா குடிச்சு ஒரு கால் மணித்தியாலத்துக்கு வாயில அந்த வாசம் வரப் பாக்கும். அதால பள்ளிக்கூட நாக்களில கொஞ்சம் வெள்ளன குடிச்சா நல்லது.

இப்பிடி நான் கள்ளுக் குடிக்கிறது என்ர சக நண்பர்களிட்டயோ சொந்தக் காரரிட்டயோ சொல்லேல. சொல்ல ஏலாது. என்ன ஒரு மாதிரிப் பாப்பாங்கள். குடிகாரன் மாதிரியே பாப்பாங்கள் எண்ட பயம்தான். ஆனா உண்மை நிலையும் அப்பிடித்தான். ஒரு சந்தர்ப்பத்தில என்ர அப்பா கள்ளுக் குடிக்கிறவர் என்ர தகவலச் சொல்லேக்க, அவர் குடிகாரரோ? நான் நம்ப மாட்டன். நீ வேறயெதையோ பாத்திட்டுச் சொல்லிறாய் எண்டாங்கள். அதாவது கள்ளுக் குடிச்சா அட்டகாசம் போட வேணும்? தூசணங்கள் கதைக்க வேணும்? வெறியில தள்ளாடித்தள்ளாடிக் கதைக்க வேணும். எண்டதுதான் அவங்கட கணிப்பு. என்ர அப்பர் இப்பிடியொரு சோலியுமில்ல எண்ட உடன அவர் கள்ளே குடிக்கிறேல எண்டுதான் நினைச்சினம். வீட்டில நான் ஒரு ரம்ளர் குடிக்கிறதப் பற்றி எந்தப் பிரச்சினையு மில்ல. அப்பா சில வேள இன்னும் கொஞ்சம் ஊத்தித் தருவார்.

எங்கட ஊரில அப்பம் சுடுறதுக்கோ தோச சுடுறதுக்கோ மாவுக்கு அப்பச்சோடா பாவிக்கிறேல. எல்லாம் கள்ளுத்தான். அதுவும் இனியில்லயெண்டு புளிச்ச அடிமண்டிக் கள்ளுதான் வேணும். உடன் கள்ளு ஒருக்காலும் வெறிக்காது. புளிச்ச கள்ளுத்தான் வெறிக்கும் எண்டு அப்பர் சொல்லித்தந்திருந்தார். உண்மையில நான் குடிச்ச அந்தக் கள்ளு வெறிக்கிற சந்தர்ப்பம் அறவே இல்ல. தற்செயலா ஆரும் குடிக்காம விட்டா பத்து மணிக்கெல்லாம் அம்மா அத நிலத்தில ஊத்திப்போடுவா. ஆனா இப்பிடி வீட்டுக்காரரிண்ட அனுமதியோடயே கள்ளடிக்கிறதாலயோ என்னவோ இதெல்லாம் அப்பவே அலுத்துப் போச்சு. பிறகு வேறயொரு வடிவத்தில கள்ளடிக்க வெளிக்கிட்டன்.

எங்கட வீட்டுப்பக்கத்தில கூத்துப் பழகீச்சினம். இரவிலதான் கூத்துக்கான ஒத்திக பாப்பினம். அவயள் பாடத்துடங்கினாலே ஞாமான தூரத்துக்குக் கேக்கும். உடன நான் கூத்துப் பழகிறத பாக்கப் போயிடுவன். அங்க தான் சுவாரசியமே இருக்கு. பொம்பிளயள் கூத்தில ஆடுறேல. ஆம்பிளயளே தான் பொம்பிளப் பாத்திரத்தையும் செய்வினம். பொம்பிளயள் கூத்துப் பழகிறதப் பாக்கவும் வாறேல.

நாங்கள் கொஞ்சப் பொடிப்பிள்ளயள் போயிருப்பம். கூத்துப் பாடுற ஆக்கள் பெரும்பாலும் குடிமக்களாத்தான் இருப்பினம். அண்ணாவியார் குடிக்க மாட்டார். மற்றாக் கள் குடிக்கிறதத் தடுக்க பாப்பார். அதோட மரியாதைக்காக அண்ணாவியாருக்கு முன்னால குடிக்கிறேல எண்டொரு பழக்கம் இருந்திச்சு. வெளியில போயிட்டா அண்ணாவியார் காணாமப் போயிடுவார். சிலவேள சண்டையள்கூட வரும். ஆனா கூத்துப்பழகிற இடத்தில அவருக்கெண்டு மரியாதை இருக்கும்.

இப்பிடி பழகிற இடத்துக்கும் ஆக்கள் கள்ளோடதான் வருவினம். ஆனா அதுகள ஒழிச்சு வைச்சிட்டு பிறகு இடைவெளி கிடைக்கேக்க ஒழிச்சிருந்து அடிப்பினம். அந்தக் கூத்துப்பழகிற வீட்டு முத்தத்தோட சேந்து பிரண்டல் பத்தையள் கொஞ்சமிருக்கு. கூத்து ஆடவாற ஆக்கள் தாங்கள் கொண்டுவாற போத்தலுகள அந்தப் பிரண்டலுக்க தான் ஒழிச்சு வைப்பினை. பிறகு தங்கட கட்டம் முடிஞ்ச உடன நைசா வந்து ரெண்டு மிடக்கு அடிச்சிட்டுப் போவின.

இதைப் பாத்த நாங்கள் என்ன செய்யிற தெண்டா ஒருத்தருமில்லாட்டி நைசாப்போய் ரெண்டு மிடக்கு அடிச்சுப் பாப்பம். அதில கவனமாயிருக்கோணும். (முதல்முதல் நாங்கள் தான் போத்தலத் திறக்கிற ஆக்களா இருக்கக் கூடாது. ஏற்கெனவே பாவிக்கத் துவங்கின அரகுறையா இருக்கிறதுகளிலதான் கைவைக்கலாம். நானும் இன்னும் ரெண்டு மூண்டு பேரும் சேந்து துவங்கின இந்த விளையாட்டில பிறகு வேறயும் ஆக்கள் வந்து சேந்தாங்கள். அதில மற்றாக்களுக்கு அதுதான் முதல் தடவையா இருக்கும்போல. இருந்தாலும் பழக்கியாச்சு.

அஞ்சாறு நாள் பிடிபடாம குடிச்சம். அது நான் குடிக்கிற இனிப்புக் கள் இல்ல. புளிச்ச கள். கனக்கக் குடிக்க ஏலாது. அதோட வாயிலயிருந்து வாசமும் கொஞ்சம் தூக்கலா வரும். என்ன இருந்தாலும் களவாக் குடிக்கிறது நல்லாப் பிடிச்சிருந்துது. ஒருநாள் ரெண்டு மச்சான்காறனுகளுக்குள்ள சண்டை. இந்தக் கள்ளுப் பிரச்சினைதான். ரெண்டு பேரும் பக்கத்தில பக்கத்தில தங்கட கள்ளுப் பையள வைச்சிருக்கினம். எங்கட விளையாட்டும் நடந்திருக்கு. அப்ப கள்ளுக் குறைஞ் சிருக்கிறத தெரிஞ்சு கொண்ட ஒருத்தர் பக்கத்தல பை வைச்சிருந்தவர்தான் தன்ர கள்ளக் குடிச்சது எண்டு அவரோட சண்டை.

உப்பிடியே போனா பிசகப் போகுது எண்டு நான் இந்த ஆட்டத்திலயிருந்து நிண்டிட்டன். ஆனா நான் பழக்கினவங்கள் நிண்டபாடாக் காணேல. ஒருநாள் நான் கூத்துப் பாத்துக்கொண்டு நிக்கிறன். மற்றவங்களக் காணேல. பிரண்டலுக்க தான் போயிட்டாங்கள் எண்டிட்டு நான் கூத்தப் பாத்துக் கொண்டு நிண்டன். திடீரெண்டு அம்மா, ஐயே எண்டு சத்தமும் கூடவே ஆருக்கோ கும்முற சத்தமும் கேக்குது. பிரண்டலுக்க தான். எனக்கு விளங்கிட்டுது என்ன நடந்திருக்குமெண்டு. கூத்தையும் உடன நிப்பாட்டிப் போட்டு எல்லாரும் பெற்றோமக்ஸ் தூக்கிக் கொண்டு (அப்ப மின்சாரம் இல்லை) பத்தைக்க போனா என்ர ரெண்டு தோழர்கள் பிடிபட்டிருக்கினம். மற்றவங்கள் வறுகீட்டாங்கள் போல. பீற்றர் அண்ணையும் இன்னொராளும் ஒழிச்சிருந்து பிடிச்சுப் போட்டாங்கள்.

முசுப்பாத்தியென்னெண்டா பெற்றோமக்ஸ் வெளிச்சத்திலதான் பீற்றர் அண்ணனுக்கு தெரிஞ்சுது, தான் பிடிச்சிருக்கிறது தன்ர மகனெண்டு. அதிலயே வாதனாராணியப் புடுங்கி விளாசுதான். அண்ணாவியார் இல்லாட்டி அண்டைக்கு ரெண்டு பேரிண்ட கதியும் அதோ கெதிதான். அவ்வளவு அடி வேண்டியும் என்னயும் மற்றாக்களயும் அவங்கள் காட்டிக் குடுக்கேல. இல்லாட்டி அண்டைக்கு அப்பரிண்ட மானம் காத்தோட போயிருக்கும்.

இப்பிடிக் காய் பிடிக்கிற வயசில செய்த திருகுதாளங்கள் கனக்க. (காய் பிடிக்கிற வயசு விளங்காட்டி கடைசியாத் தந்திருக்கிற விளக்கத்தைப் பாருங்கோ). அண்டையோட மற்றவங்கள் கூத்துப் பாக்கப் வாறேல. என்னால பாக்கேலாம இருக்கேலாது. நான் தொடர்ச்சியாப் போனன். நல்ல பிள்ளயா இருந்திட்டு வந்திடுவன்.

1992 இல ஊரவிட்டு வந்தப் பிறகு இண்டை வரைக்கும் நான் கள்ளுக் குடிச்சதா ஞாபக மில்ல. (முல்லைத்தீவில இருக்கேக்க கருப்பணி மட்டும் இடைக்கிடை குடிச்சிருக்கிறன். உண்மையில கள்ளடிக்க வேண்டிய வயசில அத நான் சுவைக்கேல எண்டுதான் சொல்ல வேணும். எண்டாலும் நான் சொல்லக் கூடிய நீதியொண்டு இருக்கு. உடன் கள் குடிக்கிறதில எந்தப் பிரச்சினையுமில்ல. நல்லாயிருக்கும். இன்னுமொரு விசயம், என்ர அவதானிப்புப் படி வெறி வந்து தூசணங்களாள பேசுறதும் சண்டைக்குப் போறதும் முக்கால்வாசி நடிப்புத்தான்.

போன வருசம் யாழ்ப்பாணம் போகேக்க பீற்றர் அண்ணையின்ர மகனப் பாத்தன். என்ர வயதுதான். உடன ஆள மட்டுக்கட்டேல. அறிமுகத்துக்குப் பிறகு இரவு வீட்ட வா எண்டு சொல்லீற்றுப் போயிட்டான். ஆனா பின்னேரமே சந்தியில அவனுக்கும் இன்னொராளுக்கும் பிரச்சின. போய்ப் பாத்த அம்மான் நல்ல வெறியில நிக்கிறார். எனக்கு உண்மையில அதிர்ச்சிதான். தாய் தேப்பனையும் மதிக்கிறேலயாம். பெரிய சண்டியனாம் எண்டு சனம் சொல்லிச்சு. இரவு அவனிண்ட வீட்ட போகேல.

அடுத்த நாள் காலம என்னை றோட்டில மறிச்சுப் போட்டான். ஏன்ரா வரேல எண்டு சேட்டப் பிடிக்காத குறையாக் கேட்டான். அவன்ர முதல்நாளைக் கோலத்தச் சொல்லி எனக்கு அது பிடிக்கேலயெண்டதையும் சொன்னன். ஏன்ரா இப்பிடிக் குடிக்கிறாய் முந்தி ஒழுங்காத்தானே இருந்தனி. எப்ப குடிக்கத் துவங்கினனி? எண்டு கேட்டன். சிரிச்சான்.

நல்லாயிருக்கு கத. நீ தானே பிரண்டல் பத்தையுக்க எனக்கு கள்ளடிக்கப் பழக்கினனி. பிறகு நல்ல பிள்ள மாதிரி நடிக்கிறாய்? எண்டான்.

எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சு. நல்ல வேள இத ஒருத்தரும் கேக்கேல. இத வேற ஆருக்கும் சொன்னானோ தெரியேல. சொல்லியிருந்தா என்னப் பற்றி என்ன் நினைப்பினம் எண்ட நினைப்புவந்து துலைச்சுது.

*குறிப்பு:*

*காய் பிடிக்கிற வயசு: ஒரு வயசில பழங்கள விட காய்கள் பிடிக்கும். மாம்பழத்த விட மாங்காயும், விளாம்பழத்த விட விளாங்காயும், கொய்யாப்பழத்த விட கொய்யாக்காயும் பிடிக்கிற ஒரு பருவம் இருக்கே, அதுதான் காய்பிடிக்கிற வயசு. கிட்டத்தட்ட விடலை வயசு மாதிரி. ஹ்ஹ்ஹ்உ எனக்கு இப்பவும் பழங்களைவிடக் காய்கள்தான் பிடிக்கும்.*

**17th Annual Lunch of International Tamil Foundation**
will be held on Sunday 17th July 2005
at **Putney Leisure Centre** (Corner of Upper Richmond Road & Dryburgh Road).
Programme starts at **10.30 am** with Coffee and a presentation at 11.00 am by
**Mr. Neville Jayaweera**
*Former Sri Lankan Ambassador for Nordic Countries*
on
**Dilemma facing the Tamil People**
Lunch will be at 1.00 pm
Tickets at £12 per head
*Contacts for tickets:*
**0208 942 1901, 0208 689 4160**
**0208 685 9346, 0118 942 9467**

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

புலம்பெயர்ந்த சூழலில் தமிழர்கள் தகுந்த வாழ்க்கைத் துணையை தேர்ந்தெடுப்பதில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். வாழ்க்கைத் துணையைத் தேடும் தமிழர்கள் பயன்பெறும் பொருட்டு இவ் விடயம் சம்பந்தமான விளம்பரங்களை இலவசமாகப் பிரசுரிக்கின்றது ஒரு பேப்பர். உங்கள் தேவைகளை ஒரு பேப்பர் பணிமனைக்கு தொலைநகல் மூலம் அனுப்பி வையுங்கள்.

மதம், சாதி, நிறம் மற்றும் சோதிட, ஜாதகப் புரட்டுகள் இடம்பெறாது. என்பதை அறியத் தருகிறோம்.

தொலைபேசி (Tel): (020) 8286 9327, தொலைப்படி (Fax): (020) 8640 6972
மின் அஞ்சல்: info@orupaper.com



## மணமகள் தேவை

1. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 1976ம் ஆண்டில் பிறந்த 5'10" உள்ள பட்டதாரி மணமகனுக்கு U.K அல்லது மற்றைய EU வில் நிரந்தர வதிவிட உரிமையுள்ள மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 560

2. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட கனடாவில் PR உடைய 1961ம் ஆண்டு பிறந்த 5'6" உயரமுடைய மணமகனுக்கு 30-37 வயதிற்குட்பட்ட மணமகளை லண்டனில் உள்ள பெற்றோர் தேடுகின்றனர். Ref: 561

3. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது U.K பிரஜா உரிமைஉள்ள 41 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை ஜேர்மனியில் உள்ள சகோதரி தேடுகின்றார். தாரமிழந்தவர்களும் விண்ணபிக்கலாம். Ref: 562

4. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது லண்டனில் வசிக்கும் 29 வயது 5'10" உயர முடைய Computer Engineering படித்த மணமகனுக்கு U.K இல் அல்லது EUவில் வதிவிட உரிமை யுடைய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 563

5. Parents from Jaffna looking for a suitable bride for son 32 years old 5"6' tall educated presently working in Sri Lanka as IT engineer. Tamil from Sri Lanka living in U.K may apply. Ref: 559

6. Malaysian Tamil, 38 yrs. 5'11", has been in the UK for the last 15 years, well- employed and settled, seeks a suitable bride. REF 556

7. வடமராட்சியை சேர்ந்த 31 வயது 5'11" உடைய, தற்போது கொழும்பில் ITல் வேலை பார்க்கும், A/L படித்த மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி மணமகளை தேடுகிறார். REF 557

8. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட தற்போது லண்டனில் வசிக்கும் 32 வயது, 5'8"உயரம் உடைய A/L படித்த மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகளை தேடுகின்றார். REF 558

9. Jaffna parents seeking for their son, born in the UK, in 1974, 5'6" tall, M.Sc qualified, and employed as a Senior Analyst, a permanent civil servant, a suitable bride. REF 551

10. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொணடு தற்போது லண்டனில் வசித்துவரும் 5' 1" உயரமும் 1973ம் ஆண்டு பிறந்த B.Sc பட்டதாரிக்கு U.K அல்லது EU Visa உள்ள தகுதியான மணமகனை London இல் வசிக்கும் சகோதரன் தேடுகிறார். REF 552

11. Jaffna parents looking for a suitable bride with traditional values and EU residential status for their son, 33 years old, height 5'8", self-employed electrical technician, living in London for the last 6 years. REF 553

12. யாழ்ப்பாணத்தைப் பிறப் பிடமாகக் கொண்டு தற்போது லண்டனில் வசிக்கும் 29வயதுடைய 5'10" உயரமுடைய Canadian Passport Holder மணமகனுக்கு சகோதரி U.K PR உள்ள நல்ல பண்புள்ள மணமகளை தேடுகிறார். REF 554

13. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட 28 வயதுடைய 5' 8" உயரமுடையவரும் தற்போது Engineering படித்துக்கொண்டு Sainburys இல் customer service manager ஆக வேலை செய்யும் 8 வருடமாக U.K. இல் வசித்து வரும் மணமகனுக்கு பெற்றோர் தகுந்த விசா உள்ள மணமகளை தேடுகின்றார்கள். Ref: 547

14. யாழ்ப்பாணத்தைக் பிறப்பிடமாக கொண்ட 33 வயது 5' 7" உயரமுள்ள தற்போது லண்டனில் நல்ல தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்கு Sponsor செய்யக் கூடிய படித்த மணமகளை. லண்டனில் வசிக்கும் அண்ணா தேடுகிறார். Ref: 549

15. Jaffna parents seeking suitable educated groom in the UK or abroad for their daughter who is 38 years, 5"6" tall British citizen & educated. REF: 540

16. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொண்ட தற்போது அவுஸ் ரேலிய பிரஜா உரிமையுடன் வேலை புரியும் பட்டதாரி 5'5" உயரமுள்ள 32வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை லண்டனில் இருக்கும் சகோதரி தேடுகின்றார். REF: 541

17. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டு டென்மார்க்கில் வளர்ந்து பிரஜா உரிமை பெற்று தற்போது லண்டனில் படிக்கும் 27 வயதுடைய 5'11" உயரமுள்ள மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் பெற்றோர் தகுந்த மணமகளை தேடுகின்றனர். REF: 543

18. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொண்டு தற்போது UK பிரஜா உரிமையுள்ள 34 வயதுடைய மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர் Higher National Diploma Computer studies தேர்ச்சியடைந்து தொழில் புரிகின்றார் படித்த பண்புள்ள 27-32 வயதுக்கு இடைப்பட்ட UK அல்லது EU வசிக்கும் மணமகள் தேவை. REF 532

19. Jaffna born, 31 years 5'5" tall. 10 years in UK completed BEng (Hons) working for BT bridegroom, looking for suitable bride. *REF 531*

20. யாழ்ப்பாணத்தை சேர்ந்த தற்போது லண்டனில் பிரிட்டிஷ் பிரஜா வுரிமையுடன் வாழும் 37 வயதான மகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். *REF 526*

21. இலங்கையை பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா நாட்டுரிமை பெற்ற கணக்கியல் பட்டதாரியும், தற்போது UKயில் கணக்காளராக பணிபுரியும் 28 வயது மகனுக்கு பெற்றோர் மணமக ளைத் தேடுகிறார்கள். *REF 516*

## மணமகன் தேவை

1. Mother seeking for daughter, 32 years, born an brought- up in the U.K, system engineer, a suitable briged groom. Ref: 677

2. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது சென்னையில் பெற்றோருடன் வசித்து வரும் 5'2" உயரமும் 1977ம் ஆண்டு பிறந்த பணி B.Sc, Bio Chemistry பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை இலங்கையிலோ அல்லது வெளி நாட்டிலோ தேடுகின்றனர். Ref: 678

3. Singapore Tamil parent looking for his daughter 35 years, 5'6" height, professional, British citizen, a suitable groom. Ref: 679

4. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட தற்போது கொழும்பில் வேலை புரியும் 75ம் ஆண்டு பிறந்த மணமகளுக்கு லண்டனில் PR உள்ள மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். Ref: 680

5. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 33வயது 5'2" உயரமுடைய MBBS(Jaffna) படித்து தற்போது இலங்கையில் டாக்டராக வேலை புரியும் சகோதரிக்கு தகுதியுள்ள படித்த மணமகனை லண்டனில் வசிக்குும சகோதரர்கள் தேடுகின்றனர். Ref: 672

6. திருகோணமலையை வதிவிடமாக கொண்ட 25வயது 5'5" உயரமுடைய, தற்போது இலங்கையில் வேலை புரியும் IT பட்டதாரி மகளுக்கு லண்டனில் அல்லது மற்றைய EU நாடுகளில், Canadaவில் மணமகனை த்கப்பனார் தேடுகின்றார். Ref: 673

7. தென்மராட்சியை பிறப்பிடமாக கொண்ட வவுனியாவில் A/L படிக்கும் 21 வயது பெண்ணுக்கு லண்டனில் வசிக்கும் மாமா தகுந்த வரனை தேடுகின்றார். Ref: 674

8. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 36 வயது 5'7" உயர முள்ள தற்போது Jaffna University யில் lecturer உம் B.com பட்டதாரி மணமகளுக்கு பெற்றோர்கள் தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 675

9. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்ட 71ம் ஆண்டு பிறந்த 5'8" உயரமுள்ள Montessori qualified, தற்போது யாழ்ப்பாணத்தில் ஆசிரிய ராக வேலை பார்க்கும் மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 676

10. Parents from Jaffna, living in the UK, looking for a professional groom for their daughter born in this country, 32 years, 5'3" tall and an IT professional. REF 668

11. Jaffna parents looking for a suitable groom with traditional values, for their daughter, 29 yrs. old, 5' 6" tall, well educated and well employed. REF 669

12. Jaffna parents living in Germany, looking for a suitable groom in UK, USA, Canada, or other EU countries with PR, for their daughter, 26 yrs, 5' 5" tall, grew up in Colombo, a graduate. REF 670

13. யாழ்ப்பாணத்தை பிறப்பிட மாகக் கொண்ட தற்போது கனடாவில் வதியுரிமையுடன் வசிக்கும் 34 வயது 5' 6" உடைய விபத்தில் கணவரை இழந்த மணமகளுக்கு, கனடாவில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனை தேடுகிறார். REF 671

14. Jaffna parents residing in the UK seeking for their daughter, grew up in UK,33 years, 5'4" tall, employed in managerial post, a suitable groom. REF 663

15. Mother seeks suitable groom for her daughter born in 1976, 5'4"tall, LLB Qualified. Prospective groom to have minimum graduate level education, modern, kind and caring. REF 664

16. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொணடு தற்போது லண்டனில் வேலைபார்க்கும் 40வயது விஞ்ஞான (கணினி பட்டதாரி) மணமகளுக்கு திருமணமாகி 2 வருடங்களில் விபத்தில் கணவனை இழந்தவர். (பிள்ளைகள் இல்லை) தாயார் சைவ போசனத்தை உடைய மணமகனை தேடுகிறார். REF 665

17. Jaffna parents seeking, suitable groom for their daughter, born in the UK,30 years old, 5'6"tall, well educated and working as a senior scientist at a prestigious university. REF 666

18. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகக் கொணடு தற்போது கொழும்பில் வசிக்கும் பெற்றோர் இழந்த 36 வயது 5' 4" உயரமுடைய படித்த மணமகளுக்கு சகோதரி தகுந்த மணமகனை தேடுகிறார். REF 667

19. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்டு தற்போது கொழும்பில் ஆங்கில ஆசிரியையாக கடமை புரியும் 34 வயதுடைய 5' 2' அங்குல முடைய மணமகளுக்கு லண்டனில் இருக்கும் மாமனார் sponsor செய்யக்கூடிய மணமகனை UK யில் அல்லது கனடாவில் தேடுகிறார். Ref:- 659

20. Parents seeing Groom for their 28 years old Jaffna born daughter with British Nationality. She is a graduate in Computer science and empoyed in London. Correspondence are welcomed from Sri Lankan Tamils, living in UK or in Sri Lanka, who are academically or professionally qualified. Ref:- 660

21. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்டு 27 வயதுடைய 5' 4" அங்குல உயரமுடைய, இந்திய BSc பட்டதாரியும், தற்போது UK யில் தொழில் புரியும் மணமகளுக்கு, UK யில் வாழும் பெற்றோர் தகுந்த மணமகனை தேடுகிறார்கள். Ref:- 661

22. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாக கொண்டு 30 வயதுடைய 5' 5" அங்குல உயரமுடைய கொழும்பில் நல்ல நிலையில் உத்தியோகம் பார்க்கும் சகோதரிக்கு (BSc, IT in web design), லண்டனில் இருக்கும் சகோதரன் தகுந்த படித்த மணமகனை UK, Australia, Sri Lanka விலோ தேடுகிறார்கள். Ref:- 662

23. Parents seeking suitable Marriage partner for 30 years old, height 5' 8". daughter, Educated in Colombo living in London since 1999. working as an Accountant since 2003 on work permit. Ref: 654

24. கொழும்பில் வளர்ந்து தற்போது U.K. இல் பிரஜா உரிமையுடன் வசிக்கும் 39 வயது 5'3" உயர முள்ள படித்து நல்ல நிலையில் உத்தியோகம் பார்க்கும் மணமகளு க்கு அம்மா தகுந்த படித்த மண மகனை தேடுகிறார்.Ref: 653

25. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட 37 வயது 5' 3" உயரம் உடைய U.K.இல் பிரஜா உரிமையு டன் அரசாங்க சேவையில் தொழில் புரியும் மணமகளுக்குப் பெற்றோர்கள் படித்த நல்ல தொழில் புரியும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகனைத் தேடுகிறார்கள். Ref: 655

26. Jaffna Tamil parents residing Permantly in U.K. seek a professional marriage partner for there daughter, British Citizen, B.Sc (Hon), 24 years old 5' 4" tall well Employed in London. Ref: 658

27. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்டு தற்போது லண்டனில் பிரஜா உரிமையுடன் வசிக்கும் 38 வயது மணமகளுக்கு பெற்றோர்கள் படித்த நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகனைத் தேடுகிறார்கள். REF:652

28. யாழ்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட 1975ம் ஆண்டு பிறந்த 5'1" உயரமுள்ள படித்த லண்டனில் student visa வில் இருக்கும் மணமகளுக்கு தகுந்த வரனை லண்டனில் இருக்கும் சகோதரி தேடுகின்றார். REF: 648

29. Jaffna parents seeking suitable, educated bride for their son, 41 years, 5'11" tall, well qualified and well employed and a British citizen. REF: 649

30. லண்டனில் பிறந்து வளர்ந்த 32 வயதுடைய 5'8" உயரமுள்ள solicitor ஆக பணிபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனைத் பெற்றோர் தேடுகின்றனர். *REF 634*

31. Jaffna parents seek for their daughter, 27 years, Britsh Passport holder, engineering graduate, civil service managerial grade, suitable groom with traditional Tamil values. *REF 614*

30. யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யில் வசிக்கும் 36 வயது 5'2" படித்த மணமகளுக்கு கனடா, ஐரோப்பிய நாடுகளில் sponsor செய்யக் கூடிய மணமகன் தேவை. Ref:- 681

# கவிதை

## முடிந்துபோன மாலைப்பொழுது

பார்க்கிறோம்,
விழி கொள்ளாத் துயரம்
உதடுகள் துடிக்கின்றன
தடுமாறி உயிராகும்
வார்த்தைகளும்
காற்றள்ளப் போய்த்
தொலைகிறது...
நேற்று
சணற்காட்டில் மஞ்சள் மௌனம்,
இன்று
கண்களில் நீர்
போகிறாய்
மேற்கில்
வீழ்ந்தணைகிறது சூரியன்.

– பா.அகிலன்
பதுங்குகுழி நாட்கள்

## நினைவுள் மீள்தல்

எப்போதுமே வந்து கொண்டிருக்கிறது
உன்னைப் பற்றிய கனவு
யாருமே வந்து போகாத பெருவெளி
ஒன்றில் இருந்து

தூறல் நின்று போன
மழை இடைவெளி நேரம் ஒன்றில்
மீந்து வந்து கொண்டிருக்கும்
பாடல் ஓசையில்
எப்போதும் இல்லாதது போல்
உந்தன் நினைவு வரிகள்

நானும், நீயும் அடிக்கடி
சந்தித்துப் பேசிய
புளிய மரத்தடி வேர்களைப் பற்றியபடி
தொடர்ந்தும் என் இருத்தலை
நிலைப்படுத்திக் கொண்டிருக்கின்றேன்
என்னில் இருந்து மரணித்துப் போன
காலங்களை அசை போட்டுக்
கொண்டு
எதில் இருந்துமே பிரிக்க முடியாத
ஒரு பூச்சிய வளைவுள் அமிழ்ந்து
போகின்றேன்.

காரணங்கள் மறந்து போன
இந்த காயங்களுக்கு
குறைந்த பட்சம் ஒரு
காரணத்தினையேனும்
நினைவுபடுத்தும் முயற்சியோடு

– தானா.விஷ்ணு

## அலைகளற்றிருக்கும் உனது கடலும் மூழ்கி தெறிக்கும் எனது அலைகளும்

அலைகளற்றிருக்கும்
உனது கடல்.

காடும் நதியும் இல்லாத
அகன்ற வெறும் இரவில்
அலைகளால் வதைபடுகின்றேன்
நான்.

ஆயிரம் யுகங்களையும்
தாண்டிவிரியும் நம் காதலை
பிரளயத்தின் தத்தளிப்பில்
கடாசி வீசிவிட்டிருக்கிறது காலம்.

யுகமலையின் முகடுகளில்
மோதித்தெறித்த நம் பாடலை
ஏதேதோ பறவைகளெல்லாம்
தம் மொழியாக்கியதை
எம்மையன்றி யார் அறியக்கூடும்.

நீ போய்விட்டாய்
மலைகள் எரிந்து சாம்பலாகிய
அதிசயம் கண்டு
கண்டவர்கள் மலைத்தார்கள்

உருகியுறைந்த பனியில்
நான் விறைத்துக்கிடந்தேன்

என் மிகப்பெரிய சுவாசவீச்சு
வானில் படர்ந்து கரைந்ததாய்
எல்லோரும் புலம்பினார்கள்
என் அலைகள் சூனியவேரில்
பிணையுண்டு அழிந்துபோனதாய்
எல்லோரும் அழுதார்கள்

அலைகளற்று இருக்கிறதா
உனது கடல்?

இரவுப்பட்சி விழித்துப்பாடும் கணங்களில்
தகர்ந்து பொடியாயினவா உனது
மவுனம்

குரல் எழுப்பி அழுதுவிடாதே
உனது குரலில் தீப்பற்றி
எரிந்து சாம்பலாகக்கூடும் பிரபஞ்சம்.

– சித்தாந்தன்
மூன்றாம் மனிதன் இதழ் –10

## நீயா தமிழனின் பிள்ளை?

சூடு சொரணை கொஞ்சமும் இல்லை
சொல்லடா நீயா தமிழனின் பிள்ளை?

தோட்டத்தில் தன்னை அழித்தவன் வீட்டுக்கே
தோரணம் ஆனது வாழை! – நீயும்
நாட்டினில் உன்னை அழித்தவன் காலையே
நக்கினாய் நீ ஒரு கோழை!

கூப்பிட்டுப் பதவி கொடுத்த பகைவனை
கும்பிட்டு வாய்பொத்தி நின்றாய்! – அவன்
சாப்பிட்டு மிஞ்சி எறிந்ததை அன்றோ நீ
சாக்கடை நாய்போலத் தின்றாய்!

தீயவர் தலையை திருக மறந்தாய் உன்
தேசத்தைப் பாரடா! நெருப்பு! – அட
ஆயிரம் பெருமை படைத்த உன் அன்னை மண்
அழியநீ அல்லவா பொறுப்பு?

என்றென்றும் உன்தாய் நிலத்தில் தமிழ்வானில்
இன்னொருவன் கொடி பறக்கும்! – அட
நன்றடா நன்று! இருந்துபார் உன் மண்ணில்
நாளை அவன் பிள்ளை பிறக்கும்!

– காசிஆனந்தன்

## கல்லறைதான்

தாய்க்காக கோயில் கட்டாதவன்
காதலிக்காய்
தாஜ் மகால் கட்டியதால்
ஏற்பட்ட சாபமோ!
காதலித்தால்
கல்லறைதான் கடைசியென்று

- பு. முகுந்தன்

## விதி விலகும்

வயல் நிலங்களெல்லாம்
இயந்திரப் பறவை
எச்சம் குவித்தது
பூமிக்கு நோகுமென்று
வானம் கண்ணீர் வடித்தது
பூமி செழித்தது
வானம் சிரித்தது
அது உரைத்தது –
“அழிப்பவன் அழிப்பான்
செழிப்பவன் செழிப்பான்”

– மைக்கல்

## துயர்க்காலம்

அவசரமாய் அணிவகுத்து
போருக்குப் புறப்படும்போது
ஊரில் இருந்து
சதா என்னை நினைந்து
அழுதிருக்கும் உன் முகம்
இதயத்தில் மினுங்குது மங்கலாய்.

விண்ணில் இறைந்து கிடக்கும்
வெள்ளித்துகள்களில் ஒன்றாய்
எட்டாத் தொலைவில் நீ...

காற்றிடையே
அலைந்து கரையும்
தீச்சுவாலையாய்
இனம்புரியாத்துயர் மனசோடு...

என் மனசு
கல்லாகிப் போனதாய் உணராதே
பிரிவுத்துயர்க்கடலில்
அமுங்கி அமுங்கி நிமிருகிறேன்.

காலமிதன் கோலமிது.

வெடித்துச் சிதறும் களத்திலிருந்து
உயிர்கொண்டு திரும்ப நேர்ந்தால்
உனைக்காண வருவேன்
மனஞ்சிலிர்த்து.

– அமரதாஸ்
இயல்பினை அவாவுதல்

## பெண்

பெண்கள் புரியாத புதிரல்ல
புரிந்து கொள்ளக் கூடிய
புதுக் கவிதைதான்.

தேய்பிறையை சந்திக்கும் நிலவல்ல
நிலையாய் விண்ணில் மின்னும்
விண்மீன்கள்! அவர்கள்.

பெண்கள் அடிமைகள் தான்
அதிகாரத்திற்கல்ல
அன்பிற்கு மட்டும்.

பெண்கள் கண்ணாடி அல்ல
ஆனால், நாட்டின் கண்கள்.

பெண்கள் புரியாத புதிரல்ல
புரிந்த கொள்ளக் கூடிய
புதுக் கவிதைதான்.

– கிருஷ்ணவேனி

ஆதிபராசக்தி ஜோதிடாலயம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சித்தையா சாஸ்திரி அவர்கள் ஆதிபராசக்தி அருள்கொண்டு கைரேகை, முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களை கூறுவார்.



⋆கணவன் மனைவி ஒற்றுமையின்மை
⋆கைரேகை, திருமணயோகம், வாஸ்த்து சாஸ்திரம்
⋆நாட்டில் விசா மற்றும் பிரச்சனைகள்
⋆தொழில், வியாபார, லட்சுமிகரம்
⋆கண்திருஸ்டி – கோட் – வழக்குகள்
⋆வாகனப் பொருத்தம்
⋆பிறந்த பிள்ளைகளின் ஜாதகம்
கணித்து எழுதிக் கொடுக்கப்படும்.

Mob: 07957 455 371
NEW SHANKER SUPERSTORES
231 -233 Northolt Road
South Harrow HA2 8HN



# குடியும் குழந்தையும்



மனதில் ஒரு அமைதியின்மை இருக்கும் போது மனிதன் ஒரு செயற்கையான உலகில் இருக்க விரும்புகிறான். இதனாலேயே அதிக செயற்கை தனங்கள் நிறைந்த திரைப்படங்கள், போதை மருந்துகள் போன்றவை ஒருவித கற்பனை உலகில் தப்பிக்க பெருமளவில் உதவுகின்றன. பெரும்பாலானோர் இவற்றை ஒரு பொழுது போக்காக செய்வதும் உண்டு. அப்படியாக மது அருந்தும் பழக்கமும் தொடங்கி இருக்க வேண்டும். பொழுது போக்கிற்காக, ஒரு சமுதாய அங்கீகரிப்பிக்காக என்று தொடங்கி பலர் அதன் கட்டுடைப்பில் செல்வதும் சர்வ சாதாரணமாகிக் கொண்டிருக்கிறது.

இந்தியாவில் ஹோலி பண்டிகையின் போது பாங்க் என்ற ஒருவித திரவம் தயாரித்து அதை அருந்தி போதையேறி ஆடுவதும் கேளிக்கைகளில் பங்கு கொள்வதும் உண்டு. இதில் ஒப்பியம் சிறிதளவு கலந்திருப்பதாக சொல்ல கேட்டிருக்கிறேன்.

அமெரிக்காவிலும் ஒருகாலத்தில் மது விலக்கு அமுலில் இருந்தது. அப்போது பல கடத்தல்களும் அது தொடர்ந்த வன்முறைகளும் இருந்தது. பிறகு தடை நீங்கிய நாளில் அடிமாட்டு விலைக்கு புச் (Buch) ஒரு நிறுவனத்தை வாங்கி இன்று மிகப்பெரிய நிறுவனமாக வளத்துவிட்ட budweiser, மற்றும் வெளிநாட்டு மது வகைகள் பல வரத்தொடங்கின.

இவற்றில் Carbohydread குறைவாய், Calorie குறைவாய் என பல வகைகளில் கிடைக்க ஆரம்பித்தும், மதுவிலக்கு வந்தால் வேறு தொழில் வேண்டும் என்ற பாதுகாப்பாய் அன்ஹைஸர்புச் போன்ற நிறுவனங்கள் உருளைக் கிழங்கு வறுவல், பழ ஜீஸ், சோடாக்கள் அடைக்கபடும் தகர அலுமினிய டப்பாக்கள், குழந்தைகளை கவரும் கடல் உலகம் (sea worlds) போன்று பலவற்றிலும் முதலீடு செய்து நடத்து கிறார்கள்.

அனஹ்ய்ஸர்புச் நிறுவனத்தை பற்றி தனி பதிவே எழுதலாம்.

மது உடலில் alcohol drydragenus என்ற புரதத்தால் செரிக்க படுகிறது. துத்த நாகம் முக்கியமாக கொண்ட இந்த புரதம் 6 வகைகளில் உண்டு. இவற்றில் பெண்களுக்கும், வெப்ப நாடுகளில் உள்ளவர்களுக்கும் செரிக்கும் சக்தி குறைவு என்பதால் குறைந்த அளவு மதுவே போதையை தரவல்லது. பியர் அருந்தும் வயதான 21 வந்தவுடனே, ஆண்கள் அதை ஒரு மதுக்கடையில் கொண்டாடுவதும் கோடையில் பல விபத்துக்கள் வருவதும் சகஜமாகி இருக்கிறது.

அரசின் சட்டப்படி 0.1% மது இரத்ததில் இருப்பின் கைது செய்து, வாகனத்தை கைப்பபற்ற முடியும். வாகனம் செலுத்தும் உரிமை 6 மாதம் தடை செய்யப்படும். இங்கே அமெரிக்காவில் அது சுதந்திரத்தை தடை செய்யபடுவது போல என்பதால் மிக அதிக தண்டனை ஆக கருதப்படுகிறது. மூன்று முறைக்கு பின் 1 மாதம் சிறையில் இருக்க வேண்டும். இதனால் காப்பீடு, தனி வரி என 20,000 வரை அபராதம் செலுத்த நேரிடும்.

இரண்டு பியரோ ஒரு கோப்பை வயினோ குடிப்பது நல்லது என்று சொன்னாலும் நண்பர்களுடன் குடிக்கும் போது அளவு மீறுவது சகஜம். மதுவிற்கு அடிமை ஆதலும் மதுவை அபயோகிப்பதும் வேறு வேறு.

மதுவை உபயோகிப்பவர்களால் ஒரு மாதம் கூட மதுவை தொடாமல் இருக்க முடியும். ஆனால் குடிக்க ஆரம்பித்தால் நிறுத்த முடியாமல் குடிப்பதும், எவ்வளவு குடித்தாலும் மறுநாள் வழக்கம் போல பணிக்கு செல்லவும் இயலும். நாளா வட்டத்தில் இதில் ஒருவித tolerance நிலைக்கு வந்துவிடுவார்கள்.

மூன்றுமுறை காவலர்களால் குடியின் போதையில் வாகனம் ஓட்டியவர்கள் கட்டாயமாக alcohol அநாமதேய கூட்டங்களுக்கு சென்று ஒரு படிவத்தில் கையொப்பமும் வாங்க வேண்டும் இவை மிக வெற்றிகரமாக செயல்படும் திட்டம். இவற்றில் முதல் கட்டம் குடிக்கு அடிமையானவர்கள் அதை ஒப்புக்கொள்வதிலும் ஒருவர் மற்றொருவருக்கு உதவியாக இருப்பதிலும் ஆரம்பிக்கிறது. பல போதை தரும் பழக்கங்களுக்கும் மறுப்பு (denial) ஒரு முக்கிய குறைபாடு.

Alcohol அநாமதேயம் இதை முதலில் களைகிறது. நான் ஆர்வத்தின் மேலிட்டும், இதில் உள்ள நிதி திட்டம் பற்றியும் அறிய ஒரு கூட்டத்திற்கு சென்றிருந்தேன். மது பழக்கத்திற்கு அடிமையானவர்களின் குழந்தைகளுக்கு தனியாக அறிவுறைகள் தரவும், மனைவியர் படும் துன்பத்தை கேட்டு அறிவுறை கூறவும், ஒருவருக்கொருவர் உதவியாக தங்கள் அனுபவங்களை சொல்வதுமாக கூட்டம் நடக்கிறது.

பெண்களின் அனுபவங்களும் காவலரை அழைத்து அனுமதி மறுப்பு வாங்கியபோதும் கணவனால் படும் துன்பங்கள், குழந்தைகள் அடையும் மன உளைச்சல்கள் கேட்டால் மதுவின் பக்கம் செல்லகூட மனம் வராது.

இதைப்பற்றி இங்கு எழுதக் காரணம் நேற்று நடந்த ஒரு சம்பவம். மனைவி பணிபுரியும் மென்பொருள் நிறுவனத்தில் ஒரு மென்பொருள் வெளியிடும் தேவை இருந்ததால் வீட்டிற்கு தாமதமாக வர நேர்ந்திருக்கிறது. அவருடைய கணவன் பொதுவாகவே நல்ல ஒத்துழைப்பு தருவதோடு தன் குழந்தைகளின் பேரில் அதிக அன்பும் உடையவர். ஆனால் அன்று அலுவலில் நடந்த ஒரு குழப்பத்தில் மன உளைச்சலுக்கு ஆளாகி இருந்திருக்கிறார். இரண்டு பியரில் ஆரம்பித்து அது மெதுவாக 6 வரை போக, பசி என்று சொன்ன குழந்தைகளை அழைத்துக்கொண்டு அருகில் உள்ள பீட்சா கடைக்கு செல்லும் வழியில் வாகனம் சாலையிலிருந்து விலகி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இரத்ததில் 0.15% மது இருந்ததும், குழந்தைகள் பலத்தகாயங்களுடன் மருத்துவமனியில் இருக்கிறார்கள். கணவன் கைது செய்யப்பட்டு ஜாமீனில் விடுதலையாகி இருக்கிறார். உற்றார் உறவினர் அனைவரும் அந்த பெண்ணின் தவறு என்று குற்றம் சாட்ட, பணம் என்று அலைந்ததும் காரணம் என்று சாட, மன நிறைவுக்காகவும் பணிக்கு செல்லும் அவர்கள் இருவரும் இப்போது பலத்த மன உளைச்சலில்.

கணவன் மீதும் மனைவியின் மீதும் குழந்தைகளை கவனிக்க தவறிய குற்றம் வரும் (குடிகாரரின் மேற்பார்வையில் குழந்தைகளை தனியாக இருக்க விட்டது), குழந்தைகள் ஊனமானால் வாழ்நாள் பூராவும் அவர்களின் குற்ற மனப்பான்மை, ஊராரின் ஏச்சும் பேச்சும் என்று இவை தேவைதானா? கணவன் மீது குழந்தைகளை விபத்துக்குள்ளாக்கிய குற்றமும் சேரும். வாழ்க்கையில் முன்னேற என்று நாடு விட்டு நாடு வந்து இந்த தேவையில்லாத அவஸ்தைகள் தேவைதானா?

தயவு செய்து அதிகமாக குடிக்காதீர்கள் குடித்தால் வாகனம் செலுத்தாதீர்கள்.

*- தேன்துளி*



# சனிப் பெயர்ச்சி பலன்கள்!!!

*'ஜோதிடக்குடி தாங்கி' கோயிஞ்சாமி*




*கூடிய சீக்கிரத்துல 'சனி' பெயர்ச்சி ஆகப் போகுதாம். அதுக்கு ஏதோ பலன்கள் எல்லாம் உண்டாம். ஆளாளுக்கு 'பலன்களை' சொல்லி விற்பனையைப் பெருக்கி 'பலன்களை' அனுபவிக்கிறாங்க! நம்மோட 'குல தெய்வம்' கூகுள்தான்! அதனால அதுல தேடி ஒவ்வொரு ராசிக்கும், பலன்களை தொகுத்து நமக்கு இமெயில்ல தந்திருக்காரு 'ஜோதிடக் குடிதாங்கி'. அறிய ஆர்வமா இருக்கீங்களா? கீழ பாருங்க . . .*

### மேஷ ராசி மக்களே!

எப்பா, ரெண்டாவது மாடியிலிருந்து, மூணாவது மாடிக்கு சனி பெயர்ச்சி ஆகறதால, நீங்க 2ல இருந்தா 1க்கும், 1ல இருந்தா 0க்கும், 0ல இருந்தா, அதான் கீழ் போர்ஷன்ல இருந்தா பூமிக்கடியில போயும் ஒளிஞ்சிக்கோங்க!மேலும் நீங்க இங்கிலீசுல 'a, e, i, o, u', அப்புறம் தமிழில 'கசடதபற'ல ஆரம்பிக்கிற வார்த்தைகளை 126 நாள் பேசக்கூடாது. பேசுனா உங்க நாக்குல சனி நாற்காலி போட்டு உட்காந்துக்கும்.

பரிகாரம்: ராமராஜனை உங்க காஸ்ட்யூம் டிசைனரா நியமிச்சு, அவரு சொல்ற கலருல வலம் வருதல் ஷேமம்.

### ரிஷப ராசி மக்களே!

நீங்க அடுத்த ஆறு மாசத்துக்கு நேரா நிமிந்து நடக்கக்கூடாது. 98.3 டிகிரி சாய்ஞ்சாப்ல நடக்கறது நல்லது. முக்கியமா நடக்கறப்போ உங்க வலது காலும், இடது காலும் உரசவே கூடாது. அப்படி நடக்காட்டி என்ன ஆகும்னு கேக்கறீகளா, நடக்கக் கூடாதெல்லாம் நடந்துரும்.

பரிகாரம்: உங்களுக்கு ஏழரை உச்சத்துல உட்கார்ந்துறதால, 'நாலரை பால்' குடிக்கிறது நல்லது.

### மிதுன ராசி மக்களே!

எஸ்.எம்.எஸ் அனுப்பி அனுப்பியே, முடக்குவாதம் வந்த மிதுன மக்களே, அடுத்த சனிப்பெயர்ச்சி வரை நீங்க மொபைலை கையால தொடக்கூடாது, காதாலயும் தொடக்கூடாது. சனி எட்டாம் பாதத்துலயிருந்து 'நோக்கியா'. அதனால மொபைலோட யாரும் பக்கத்துல வந்தாக் கூட கல்லைக் கண்ட நாய் மாதிரி தெறிச்சு ஓடுறது நலம். இல்லாட்டி சனி ரிங்டோ னா 'சங்கு சவுண்டை' அனுப்பி வைக்கும்.

பரிகாரம்: 3Gக்கு வாராவாரம் ஞாயித்துக் கிழமை நெய் விளக்கு போடணும்.

### கடக ராசி மக்களே!

மெட்டி ஒலிக்கும், கெட்டிமேளத்துக்கும் வித்தியாசம் தெரியாம திரியுற நீங்க, இன்னும் ஏழரை மாசத்துக்கு, டி.விப் பொட்டியில, 'பச்ச' ரு 'மஞ்ச' கலரைப் பாக்கக் கூடாதுங்கோ. 'கருப்பு-வெள்ளை' டி.வி. பாக்கலாமான்னு கருமம் புடிச்சாப்ல கேட்காதீக. பாக்கலாம். ஆனா 'ஒப்பாரி' சவுண்டைக் கேட்கக் கூடாது. அரசியல்வாதிகளைப் பாக்கக் கூடாது. ஏன்னா, இவ்வளவு நாள் உங்க வீட்டு டேபிள்ல இருந்த சனி இப்போ உங்க வீட்டு கேபிளுக்கு பெயர்ச்சி ஆயிருக்கு.

பரிகாரம்: உங்க வீட்டு ரிமோட்டை உடனடியா எடுத்துட்டுப் போய், Bank லாக்கர்ல வைச்சிருங்கோ!

### சிம்ம ராசி மக்களே!

சனியும், ராகுவும் ஒரே நேரத்துல நாலாம் பாதத்துக்கு 'Login' ஆகியிருக்கறதால, இன்னும் 222 நாளுக்கு நீங்க இமெயில் செக் பண்ணக்கூடாது. chat ஆகவே ஆகாது. 'google' பக்கம் தலை, கை, கால் எது வைச்சும் படுக்கக்கூடாது. முக்கியமா வலைப்பதிவை கொலைவெறியோட பண்ணுறவங்க, அந்தப் பக்கமே வரக்கூடாது. இதுல எதையாவது மீறினா, சனி அனுப்புற வைரஸால உங்க சிஸ்டம் புட்டுக்கும்.

பரிகாரம்: 'ஸ்ரீ பில்கேட்ஸ் ஜெயம்'னு டெய்லி Notepadல 100kb டைப் பண்ணுறது உத்தமம். (cut, copy, paste ..ம்ஹூம்!)

### கன்னி ராசி மக்களே!

ஹைக்கூ... பைக்கூ... கொக்கரக்கூ.. இப்படி எந்தவித கவிதைகளையும் உங்க வாழ்க்கையில நீங்க இன்னும் அரை வருசத்துக்குநுழையவிடக்கூடாது. வைரமுத்து, வாலி வகையறாக்களை பாத்தா உங்க வாய் 'வாய்தா' வாங்கிட்டு போயிடறது நல்லது. முக்கியமா பின்நவீனத்துவக்காரங்ககிட்ட முன்னெச்சரிக்கையா இருக்கறது நல்லது. இதையெல்லாம் மீறி நீங்க காதல் கவிதை படிச்சீங்கன்னா, உங்க கண்ணை 'சனி பகவானோட' காக்கா வந்து கொத்திரும்.

பரிகாரம்: வாரம் ஒருமுறை மூணு கிலோ 'கவித' பொஸ்தகம் வாங்கி, 'கழுதை'க்கு தானம் பண்ணனும்.

### துலாம் ராசி மக்களே!

அந்நியன் படத்துக்கு டிக்கெட் கிடைக்காம ஆத்திரத்துல சனி பாதத்துக்குப் பாதம் 'பங்கி ஜம்ப்' ஆடிக்கிட்டு இருக்கறதால, இன்னும் நாலேகால் மாசத்துக்கு நயன்தாராவைப் பாக்கக்கூடாது. அஸின் ஆகவே ஆகாது. நீங்க 'ஜஸ்'ஸை நைஸாப் பாத்தா சனியோட கோபம் பல மடங்கு, 'raise' ஆக வாய்ப்பிருக்கு. முக்கியமா, தியேட்டர், டி.வி, DVD இப்படி எதுல சினிமா பாத்தாலும் உங்களுக்கு சனிமா!

பரிகாரம்: 'லகலகலகலகலகா'ன்னு சொல்லிட்டே, உங்க வீட்டுக்கு பக்கத்துல இருக்கிற தியேட்டரை டெய்லி பத்து முறை சுத்தணும்.

### விருச்சிக ராசி மக்களே!

யார் எதைச் சொன்னாலும் கேட்காத விருச்சிக மக்களே, நான் இப்ப சொல்லுறதையும் நீங்க கேட்கப்போறதில்ல. அதனால நானும் எதுவும் சொல்லப் போறதில்ல!

பரிகாரம்: யார் என்ன பரிகாரம் சொன்னாலும் செய்யாமலிருப்பது.

### தனுசு ராசி மக்களே!

நீங்க 'I'ல ஆரம்பிக்கிற Bankல account வைச்சிருந்தா உடனே அதை வேற எங்கேயாவது மாத்திடுங்க. இன்னும் 8 மாசத்துக்கு 'I'யோட சகவாசமே ஆகாது. 'நான்'-ஐ இங்கிலீசுல எப்படி சொல்லணும்னு யாராவது கேட்டாக் கூட 'YOU'னு உளறுவது நல்லது.

பரிகாரம்: 'I'யை எங்கப் பாத்தாலும் தார் பூசி அழிச்சிடுங்க!

### மகர ராசி மக்களே!

வாஸ்துப்படி சனி உங்களுக்கு பெயர்ச்சி அடைஞ்சிருக்கறதால, இன்னும் 7 மாசத்துக்கு நீங்க உங்க வீட்டுக்குள்ள முன்வாசல் வழியா நுழையக்கூடாது. பின்வாசலும் ஆகாது. அதனால சன்னல் வழியா போனா இன்னல் இருக்காது. டூபாத்ரூம் டாய்லெட்லபோகாதீங்க. கோலத்தை வாசல்ல போடாதீங்க. மீறினா, தேற மாட்டீங்க.

பரிகாரம்: பேசாம கொஞ்ச நாளைக்கு ப்ளாட்பாரத்துல வாழுங்க!

### கும்ப ராசி மக்களே!

இப்ப 'கரண்ட்'ஆ நடந்திருக்கிற சனிப் பெயர்ச்சியால, உங்களுக்கு 'கரண்டுல' கண்டம். அதனால வீட்டுல உள்ள எலெக்ட்ரிக் ஐயிட்டத்தையெல்லாம் வித்துடுங்க. ஜீரோ வாட்ஸ் பல்பு கூட இருக்கக் கூடாது. சொல்லப்போனா, பேப்பர்ல வர்ற 'கரண்ட் affairs' நியூசைக் கூட படிக்கக் கூடாது.

பரிகாரம்: ஏதாவது ஆதிவாசி கிராமத்துக்குப் போயி தலைமறைவா வாழுங்கோ!

### மீன ராசி மக்களே!

சனி நார்த் ஈஸ்ட்டுக்கும், சௌத் வெஸ்ட்டுக்கும் இடையில ஈஸ்ட்வெஸ்ட்டுல ரெண்டு டிகிரி நகர்ந்து இருக்கிறதால, நணங்க அடுத்த பஸ்ஸையோ, ட்ரெயினையோ புடிச்சு சனிக் கெரகத்துக்கு போயிடுறது நல்லது.

பரிகாரம்: எந்த ஜோசியக்காரனைப் பாத்தாலும் வெக்கப்படாம கடன் கேளுங்க!

*(மேலும் பலன்களை அறிந்துகொள்ள iamnothere@sani.com-க்கு மெயிலுங்க!)*



# அறுவைப் பக்கம்

## ஓ சுகுமாரி ஓ சிங்காரி



*ஓ சுகுமாரி ஓ சிங்காரி*
*என் அலங்காரி நீ ஓ சுகுமாரி*

யாரைப் பத்தி பாடுறீங்க. சரி சரி மேல பாடுப்பா...

*ஓ சுகுமாரி கி. குமாரி நீ*

கி.குமாரியா? இனிஷியலோட வேற பாடுறீங்களோ? சரி சரி மேல பாடுப்பா

*குமாரி என் காதல் சிக்கி முக்கி திக்கி விக்குது*

என்னப்பா உன் காதல் மலச்சிக்கல் காதல் போலேயே? இப்படி சிக்கி முக்கி திக்கி விக்கி.., என்னமோ போங்க.

*குமாரி என் நெஞ்சி விம்மி விம்மி பம்மி நிக்குது குமாரி*

குமாரா உனக்கு கேஸ் ட்ராபிள் வேறயா? நெஞ்சி விம்மி பம்மி நின்றால் சோடா வாங்கிச் சாப்பிடவும் குமாரா.

*என் வார்த்தை கடல் வற்றி விட்டதே*

வார்த்தையா? நல்ல பாருய்யா. ஜொள்ளு விட்டு உன் வாயில் ஊறும் எச்சில் கடல் வற்றியிருக்கப் போகுது.

*நான் தோற்றுப் போவேன் என்று அஞ்சியே*
*என் தேர்வை எல்லாம் ஒத்தி வைக்கிறேன்*

இப்படி தேர்வை ஒத்தி வச்சி வச்சி நீங்க 10 வது வகுப்பு கூட தேறவில்லை தலீவா. உருப்படியா படிச்சி பாஸ் பண்ணி உருப்படுகிற வேலைய பாருங்க.

*ரகுமாரி சுகுமாரி என் மனம் ஒரு மலரடி மலருக்குள் அடிதடி*

10 ஆம் வகுப்பு பாஸ் பண்ற வழிய காணோம். எதுகை மோனையில பாட்டு வேற கேட்குதோ. ஓடிப்போ...

*இந்த காதல் என்ன பெரும் பாரமா?*

ஏலேய், பின்னே 100kg குட்டியானையை காதலிச்சா உன் காதல் இப்படி தாண்டா பாரமாயிருக்கும். போடா போ...

*இது பேறுகாலம் இல்லாதா கர்ப்பமா?*
*ஓ ஓ*

யோவ் நல்ல பாருய்யா. அது உன்னோட தொப்பையா இருக்கப் போகுது.

*காதலை மறைத்தால் கணம் தாங்காமல்*
*என் உயிர் செத்துப் போகும் இல்லையா?*

குண்டு கல்யாணம் மாதிரி இருக்கிற உங்கப்பன் மிதிச்சே நீ செத்துப் போகலை. இதுக் கெல்லாம் செத்துப் போயிருவியா. சும்மா தமாசு காட்டாதே கண்ணா?

*காதலைச் சொல்லி இல்லை என்று மறுத்தால் காதலே செத்துப் போகும் இல்லையா?*

உன் காதலே சொல்லி அவ கிட்ட செருப்படி வாங்கி உன் மானமே செத்துப் போச்சி. பிறகு என்ன?

*ஒரு காதல் கடிதம் எதுவும் காதலை முழுசாய் சொல்வது இல்லை*

அப்போ ஒன்னு செய்யி. ஒரு 1000 பக்கம் புத்தகம் போட்டு உன் காதலை முழுசா சொல்லு ராசா.

*நீ கண்களை அடைத்தால் காதல் நுழைய இன்னொரு வாசல் இல்லை*

ஏற்கனவே எதோ சிக்கி முக்கிகிட்டு இருக்கே. இந்த லட்சணத்தில அவ பக்கம் போனேன்னா இன்னொரு வாசலான மூக்கையும் அடைச்சிக்கிடுவா.

*நான் தானம் கேட்கும் ஒரு ஊமையா?*

இல்லை. காதல் பிச்சை எடுக்கும் பிச்சைக்காரன் கூட.

*தினம் தேய்கிறேனே இது தேவையா?*

அடே மடையா... ஒழுங்க சாப்பிட்டா இப்படி தேஞ்சிப் போக மாட்டேயடா.

*கூடைகள் என்றும் பூக்களை நிரப்பி*
*கோயிலைத் தேடி நடக்கின்றேன்*
*கூடையைக் கொடுத்து கும்பிட்டு முடித்து*
*கோரிக்கை வைக்க மறுக்கின்றேன் அந்த*
*கடவுளை விடவும் பெரியவன் ஒருவன்*
*பூமியில் உள்ளான் எவன்?பெண்*
*கண்களை பார்த்து காதலைச் சொல்லும்*
*தைரியமுள்ளவன் அவன்.*

கண்ணைப் பார்த்து தைரியமா சொல்லிற முடியாதுல்லே. நாம கண்ணுக்கு தெரியாம அவ கால்ல போட்டிருக்கிற செருப்பு கன்னத்தை பதம் பார்க்குமே. தெரியாதா?

பெண் பாடுகிறாள்:

*என் காதல் சிக்கி முக்கி திக்கி*
*விக்குதா குமாரா?*
*என் நெஞ்சி விம்மி விம்மி பம்மி*
*நிக்குதா குமாரா?*
*உன் வார்த்தை கடல் வற்றி*
*விட்டதா குமாரா?*

சூப்பர் பிகராக அவன் காதலி கோலி சோடாவுடன் வந்து நிற்கிறாள். நான் வாயடைத்துப் போய் வந்த வழியே திரும்பி ஓடுகிறேன்

*- அல்வாசிட்டி விஜய்*

## வரவிருக்கும் புதிய சினிச் சட்டங்கள்

பச்சோந்தி மக்கள் கட்சி இயற்ற இருக்கும் புதிய சட்டங்களின் வரைவு நகலை அக்கட்சி பொது செயலாளர். (அடுத்த) தலைவர் சின்ன முகமூடி இன்று வெளியிட்டார். மேலும் அவர்களின் சட்டங்களால் யாரும் பாதிப்படையக் கூடாது என்ற அக்கறையில் அதற்கான மாற்று யோசனைகளையும் தெரிவித்தார். அதன் விபரம்...

1. வன்புணர்தல் (கற்பழிப்பு) காட்சி என்றால் சேவல், கோழியை துரத்துவது போல் காண்பிக்கலாம்... பின்பு திரை வெறுமை ஆக வேண்டும். "மோசமான காட்சிக்கு பின் படம் தொடரும்" என்று ஸ்லைட் போட வேண்டும்... இந்த முழு காட்சியிலும் கோழியின் அலறலோ மத்த எந்த சத்தமோ கேட்காமல் இசை மியூட் செய்யப்பட வேண்டும். இந்த காட்சியின் போது திரை வெறுமையாக இருப்பினும் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் கண்களை மூடவேண்டும். மூடவில்லையெனில் பக்கத்தில் இருக்கும் 18 வயதுக்கு மேற்பட்டோர், உட்பட்டோரின் கண்களை மூட வேண்டும். *(சட்டம் 18)*

2. சிகரெட் பிடிப்பது உடல் நலத்துக்கு கேடு என்றாலும் வில்லன் கெட்டவன் என்று சித்தரிக்க அவன் வாயில் புகை வைக்க வேண்டியிருப்பதால் இனி மைதா (அ) கோதுமை மாவு மூட்டையில் இருந்து மாவை அள்ளி போட்டு வில்லன் அதை புகையாக விடுவதாக காட்ட வேண்டும்... அந்த மூட்டையின் மேல் மைதா கோதுமை என்று எழுதி இருக்க வேண்டும். *(சட்டம் 37)*

3. வில்லன் தண்ணி அடிப்பதை காண்பிக்க பழரசச்சாறு அருந்துவதாக காண்பிக்கலாம்... என்ன பழரசம், என்ன brand என்பது தெளிவாக காண்பிக்க வேண்டும்... மேலும் வில்லன் தோன்றும் போதெல்லாம், வில்லனால் சமுதாயத்துக்கு ஏற்படும் பாதிப்புகளை subtitle ஆக போடவேண்டும் *(சட்டம் 54)*

4. எது திரைப்படம்? எது வாழ்க்கை? எது நிழல்? எது நிசம்? என்றெல்லாம் பகுத்துணர தெரியாத அறிவு கெட்ட கூமுட்டைகளான இளைஞர்களை அரசியல்வாதிகள் வெட்டியாக பயன்படுத்துகிறார்களே, நாமும் அவர்களை வெறுமனே விசிலடிச்சான் குஞ்சுகளாக மட்டும் வைத்துக் கொள்வோம் என்று எண்ணாமல் கலைஞர்கள் அதிலும் வெகுசன ஊடகமான திரைப்பட நடிகர்கள் தமக்கு மற்றவர்களை விட அதிகம் சமூகப் பொறுப்பு உணர்விருக்கின்றதா? என்று தினமும் காலை ஒருமுறை மாலை ஒரு முறை கேட்டுக் கொள்ள வேண்டும் *(சட்டம் 89ஆ)*

5. உலக நாகரீக இயக்கம் எடுத்த புள்ளி விவரப்படி இளைஞர்கள் பெண்களை பார்த்து ஜொள்ளு விடுவதில் உலக அளவில் தமிழ் நாடுதான் முன்னணியில் இருக்கிறது. இதற்கு காரணம் சினிமாவில் பெண்களை காண்பிப்பது தான் என்றும் அந்த பு.வி சொல்கிறது... ஆகவே இனி இளைஞர்கள் சமுதாயம் சீர்திருந்தும் வகையில் பெண்களை திரையில் காண்பிக்கவே கூடாது. *(சட்டம் 13.அ)* கதாநாயகி இல்லாமல் வருமாறு கதை எழுத எழுத்தாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். தேவைப்படின் பெண் கதாபாத்திரத்துக்கு ஆண்கள் மாறு வேஷம் போட்டு நடிப்பதில் ஆட்சேபணை இல்லை. ஆனால் அப்படிப்பட்ட படங்களுக்கு ப சர்டிபிகேட் வழங்கப்படும்.

6. ஆண கதாபாத்திரம் என்றாலும் பெண் வேஷத்தில் இருப்பதால் கழுத்துக்கு மேலும், கை மணிக்கட்டின் கீழும், கால் பாதம் மட்டும் தெரியும்படி மட்டுமே உடை அலங்காரம் இருக்க வேண்டும். இடுப்பு காண்பிக்கவே கூடாது... தப்பி தவறி அந்த வேஷத்தை பார்த்தே யாராவது இளைஞர்கள் உணர்ச்சி வசப்படலாம் என்பதால் இது ஆண், பெண் அல்ல என்று கொட்டை எழுத்துக்களில் படம் முழுக்க திரையில் தோன்ற வேண்டும் *(சட்டம் 13.ஆ)*



சட்டம் 13.ஆ வை மீறிய குற்றத்திற்காக சத்யராஜ் அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப் பட்டுள்ளது. அவர் மன்னிப்பு கேட்க விரும்பினால் ஒரே ஒரு நிபந்தனையின் கீழ் மன்னிக்கப் படுவார். இனி படங்களில் அவர் பெண் வேஷம் கட்டக்கூடாது... (சத்யராஜுக்கு அன்பு வேண்டுகோள்: வெகுளியான & நல்ல மனமுடைய சின்ன முகமூடி ஐயா அவர்களின் மனமார்ந்த பாராட்டுக்களுக்கு எனது இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று ஒரு கடிதம் எழுதி அனுப்பவும்.... அடுத்த படத்தில் நீங்கள் நடிக்கவே இல்லை என்றாலும் நாங்கள் பாராட்டு தெரிவித்து விட்டு இந்த கடிதத்தை ரிலீஸ் செய்து கொள்கிறோம்)

நற்செய்தி: மரத்தை வெட்டி அவ்விடத்தில் செடி நடுதல், சைக்கிள் ஓட்டுதல், மாம்பழம் பறித்தல், தார் பூசுதல் முதலிய காட்சிகள் இடம்பெறும் திரைப்படங்களுக்கு அரசு மானியம் வழங்கப்படும்.

*- முகமூடி*

## என்னவளும் அரசியல்வாதிதான்!

*வாக்களித்து ஏமாற்றும்...*
*என்னவளும்*
*அரசியல்வாதிதான்!*

*என்னவளை*
*சட்டசபையில்*
*சேர்த்துவிடுங்கள்!*
*ஆம்!*
*என் மீது*
*செருப்பை வீசுகிறாள்!*

*என்னவளை*
*எப்படியாவது*
*எம் எல் ஏ ஆக்கிவிடுங்கள்!*

*ஆம்!*
*அவளைப் பார்த்தே*
*நாளாகி விட்டது!*

*என்னவளை*
*பாராளுமன்றத்திற்குப்*
*போகச் சொல்லுங்கள்!*
*ஆம்!*
*திடீரென்று*
*கவிழ்க்கிறாள்!*

*என்னவளை*
*கஷ்டப்பட்டாவது*
*கவர்னராக்கி விடுங்கள்!*

*ஆம் அடிக்கடி*
*இதயப் பல்கலைக்கழகத்திற்கு...*
*திறுக்கன் பட்டம் தருகிறாள்!*

*லஞ்ச ஊழல் போலவே*
*நெஞ்ச ஊழல் செய்கிறாள்!*
*இவளுக்கு நன்றாக*
*நடிக்கவும் தெரிகிறது!*

*ஆகவே*
*என்னவளை*
*அரசியல்வாதி*
*ஆக்கி விடுங்கள்!*

*- ரசிகவ் ஞானியார்*




# சினித்துளி

## நல்ல நேரம்!



புதிய கட்சியை தொடங்கும் விஜயகாந்த் அதன் கொள்கை முழக்கங்களை திரைப்படம் வாயிலாகவும் பப்ளிசிட்டி செய்வதற்காகத்தான் 'சுதேசி'யை சூப்பர் பாஸ்ட் வேகத்தில் ஆரம்பித்துள்ளார். சாலி கிராமத்தில் உள்ள விஜயகாந்த் வீட்டிலேயே 'சுதேசி'யின் பூஜை காலை 6 மணிக்கு போடப்பட்டது. நல்ல நேரம் பார்த்து மேக்கப் போட்ட கேப்டன் நச் வசனம் பேசி முதல் காட்சியில் கைதட்டல் வாங்கினார். ரசிகர்களும் நல்ல நேரம் பார்த்துத்தான் படம் பாக்கப் போகாணும் போல கிடக்குது. அவருக்கு அவரில அக்கறை இருக்கெண்டா ரசிகர்களுக்கும் தங்களில இருக்கோணுமெல்லே. உது எத்தினை பவுணுக்கு இங்க வருதோ தெரியா!?

## கொஞ்சம் கிளமரா!



"C u at 9" படத்தில் கிளமராக நடித்ததை திரும்பத் திரும்பச் சொன்னால் யாருக்குதான் கோபம் வராது? நான் கொஞ்சம் கிளாமராதான் நடித்தேன். கதைக்கு அது தேவையிருந்தது. இயக்குனர் ஏற்கனவே அதுபற்றி கூறியிருந்தார். மூன்றே மூன்று சீன்கள்தான் அப்படியிருந்தது. "நீங்கள் கிளாமராக நடிக்க மறுத்ததாகவும், தாதாக்கள் உங்களை மிரட்டிய பிறகு ஒத்துக் கொண்டதாகவும் கூறுகிறார்களே?" என்னை யாரும் மிரட்டவுமில்லை. யாருக்கும் நான் பயப்படுவதும் இல்லை. இது என் உடம்பு, காட்டுறேன். நான் யாருக்கு பயப்படவேண்டும்? அதானே அது உங்கட உடம்பு காட்டுங்க! காட்டுங்க! நீங்க ஏன் பயப்படவேணும். அதென்ன "கிளாமர்" சரி சரி.

## திரிஷா தூது!



திரிஷாக்கு ஆந்திராவில் தமிழை விட அதிக சம்பளம்... அதிக வாய்ப்பு! ஹைதராபாத்தே கதியென்று தமிழை புறக் கணித்தார். இந்த சைக்கிள் கப்பில் விஜய், அஜித், சூர்யா, விக்ரம் என்று அனைவருடனும் டூயட் பாடி வருகிறார் அசின். தெலுங்கில் ஜோதிகா. சிரஞ்சீவி, நாகர்ஜீனா, மன்மதன், சந்திரமுகி தெலுங்கு பதிப்பு என உள்ளே வர. அவசரமாக விழித்துக் கொண்ட திரிஷா தமிழ் ஹீரோக்களுக்கு தூது அனுப்பி வருகிறார். விஜய்யிடமிருந்து இதற்கு கிரீன் சிக்னல் கிடைத்திருக்கிறது என்கின்றன நம்பத் தகுந்த வட்டாரங்கள். ஓ... பின்ன, ஒருக்கா விஜய்தானே அவ வைச்ச பார்ட்டிக்கு பில் சற்றில்மெண்ட் செய்தவர். எங்கயோ கேள்விப்பட்டதப்பா!

## ரஜினிவேந்திரா!

ஆந்திரா கர்நாடகா எல்லையில் இருக்கிற ராகவேந்திரா சுவாமிகள் கோயிலுக்குச் சென்ற பக்தர்களுக்கு இன்ப அதிர்ச்சி. அவர்களுடன் சாமி கும்பிட நின்றவர் ரஜினிகாந்த்! வரிசையில் நின்ற ரஜினிக்கு சால்வை அணிவித்து கோயில் மரியாதைகளுடன் வரவேற்றார் மடத்தின் திவான். அது முடிந்ததும் தங்கும் விடுதியில் நிருபர்களுக்கு பேட்டியளித்தார். ராகவேந்திரா சாமியை சந்திக்க நான் பலமுறை மந்திராலயம் வந்திருக்கிறேன். அவரை நம்பி மனம் உருகி பிரார்த்தனை செய்தால், நினைத்தது நிறைவேறும். ஜீவ சமாதி அடைந்த ராகவேந்திரர், மந்திராலயத்தில் தங்கி பக்தர்களுக்கு ஆசி வழங்கி அருள் பாலிக்கிறார் என்றார். விட்டா உமக்கே நாளைக்கு கோயில் கட்டி உண்டியல் வைப்பாங்கள்போல இருக்கு பாத்து நடத்தும்.

## சிறுதுளி!

பாசில் இயக்கும் ஒருநாள் ஒரு கனவு படத்திற்காக தொடர்ச்சியாக 25 நாட்கள் கால்ஷீட் கொடுத்திருக்கிறார் சோனியா அகர்வால். தொடர்ச்சியாக இத்தனை நாள் சோனியாவின் கால்ஷீட் கிடைத்தது இந்த படத்திற்கு மட்டும்தானாம்!

❖ ❖ ❖

எஸ்.ஜே. சூர்யா எந்த விழாவிற்கு வந்தாலும் அ ஆ படத்தின் ஹீரோயின் நிலாவோடுதான் வருகிறார். இருவருக்கும் காதல் என்ற செய்தியை மறுக்கிற சூர்யா, இப்போதைக்கு இரண்டு பேருக்கும் நடுவில் நிலவி வருவது நட்பு மட்டும்தான் என்கிறார்.

❖ ❖ ❖

விக்ரம் நடிக்கவிருந்த மஜா படத்தின் டைட்டிலை மாற்றிவிட்டார்கள். காரணம் மஜா என்றால் வி(வ)காரமான அர்த்தம் வருகிறதாம்!

❖ ❖ ❖

வல்லவன் படத்தின் பிரச்சனைகளை ஒரு வழியாக பேசி முடித்துவிட்டார் சிலம்பரசன். மறுபடியும் படப்பிடிப்பு தொடர்ந்து நடந்து வருகிறது.

❖ ❖ ❖

தாஸ் படத்தின் டைரக்டர் பாபு யோகேஸ்வரனை ஒழுங்காக இயக்க விடாமல் குறுக்கே புகுந்து தொல்லை கொடுத்த ஜெயம் ரவியின் அண்ணனும் அப்பாவும் இப்போது ரவி நடிக்கும் மழை படத்தின் இயக்குனருக்கும் தொல்லை கொடுக்க ஆரம்பித்து விட்டார்களாம்!

❖ ❖ ❖

தங்கர்பச்சான் நடிக்கும் சிதம்பரத்தில் அப்பாசாமி படத்தில் ஹீரோயினாக நடிக்க ஒருவரும் தயாராக இல்லை. கடைசியில் ஒப்புக் கொண்டவர் நவ்யாநாயர்!

❖ ❖ ❖

ஜோதிகாவுக்கு இன்னொரு பெயர் வைக்க சொன்னால் என்ன பெயர் வைப்பீர்கள்? மகாலட்சுமி...? ஏஞ்சல்....? நீங்கள் நினைத்தே பார்க்க முடியாத ஒரு பெயரை வைத்திருக்கிறார்கள் ஒரு படத்தில் இவருக்கு. ஜூன்-R. இதுதான் ஜோதிகாவின் பெயராம். படத்தின் பெயரும் அதுவே. இது ரேவதி எஸ்.வர்மா என்ற விளம்பர பட இயக்குனர் படம்.

❖ ❖ ❖

நடிகை சிம்ரனுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இந்த குவா குவாவை கேட்டு குதூகலத்தில் இருக்கிறார் சிம்ரன். டில்லியில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்ட சிம்ரன், ஜூன் 11-ந் தேதி மாலை அழகான ஆண் குழந்தையை பெற்றெடுத்திருக்கிறார்.



## எஸ்.வி.சேகர் பதில்!

*நகைச்சுவைக்கு டைமிங், காட்சியமைப்பு, பாடி லாங்குவேஜ் - இவற்றில் எது முக்கியம்?*

டைமிங் தான் முக்கியம். அதற்குப் பிறகுதான் மற்ற எல்லாமே. உதாரணமாக மாமாவுக்கு அறிவில்லை என்று சொல்லும்போது அவருக்குமா? என்று கேட்பது சரியான டைமிங்கா இருக்க வேண்டும்.

*எப்படிப்பட்ட பாத்திரங்கள் உங்களுக்குப் பிடிக்கும்?*

யதார்த்தமான ரோல்களே எனக்குப் பிடிக்கும். மத்தவங்களை அழவைச்சுப் பணம் பண்றதுல விருப்பமில்லை. சீரியஸ் ஆன ரோல்களையே நகைச்சுவையுடன் செய்வது பிடிக்கும்.

*உங்களுக்கு மனநிறைவைத் தருவது சினிமாவா, நாடகமா?*

நாடகம் தான். ஏனெனில் நானே எழுதித் தயாரித்து டைரக்ட் பண்றதால எனது பாத்திரத்தை எனக்குப் பிடித்தவகையில் அமைத்துக் கொள்ள முடிகிறது.

*உங்கள் நாடகங்களின் வெற்றிக்குக் காரணம் என்ன?*

எஸ்.வி.சேகர் நாடகத்திற்குப் போனால் சிரிக்கலாம் என்று எதிர் பார்த்து வர்றாங்க. ஒரு இரண்டு மணிநேரம் சிரித்திருக்கக் கூடியதாக நாடகம் அமைக்கிறேன்.. நூறு நிமிஷத்தில இருநூறு சிரிப்புகள் இதுதான் எனது இலக்கு.

*புலம்பெயர்ந்த தமிழர்களின் பங்களிப்புப் பற்றி?*

இந்தியாவுக்கு வெளியில, இலங்கைக்கு வெளியில ஏதாவது ஒரு தமிழ்க் கலைநிகழ்ச்சி வெற்றியடையுது என்று சொன்னால் அதற்கு முக்கியக் காரணம் ஈழத்தமிழர்களின் பங்களிப்பு என்பதை நான் மிகவும் தெளிவாகச் சொல்லுவேன். ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வின் காரணம் சோகமாக இருந்தாலும், ஒரு தீமையிலிருந்து நன்மை விளைவது போல இன்று உலகநாடுகளில் மொழி,கலை வளர்ச்சிக்கு 90% காரணமாக இருப்பவர்கள் ஈழத்தமிழர்களே! இவர்களின் மொழிப்பற்று எம்மைப் பிரமிக்க வைத்துவிடும். இது இன்றல்ல 94ம் ஆண்டே நான் கூறியிருக்கிறேன்.

*வெளிநாடுகளில் வாழும் ரசிகர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

என்ன காரணத்திற்காக புலம் பெயர்ந்துள்ளீர்கள் என்று மறந்து விடாதீர்கள். கலை, காலாச்சாரம் என்று வாழ்ந்தாலும் நீங்கள் வாழும் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு வெளியே செல்லாது, உழைக்கக் கூடிய நேரத்தில் நன்றாக உழைத்து உங்கள் தாய்நாட்டையும், சகோதரர்களையும் மறந்து விடாது முடிந்த உதவிகளைப் புரியுங்கள். தாய்மொழியை மறந்து விடாதீர்கள். தமிழனை வாழ வையுங்கள் தமிழ் வாழும்.

- நன்றி நிலாச்சாரல்

30 வருடங்களாக இலங்கை மக்களுக்கு சேவை செய்வதில் அனுபவம் வாய்ந்த நிறுவனம்

TRICO

Another unbeatable service from TRICO

SEND A TEACHEST FROM SRILANKA TO UK JUST FOR £90.00 OR FOR TWO T/CHESTS £140.00

.( FROM TRICO WAREHOUSE IN COLOMBO - TRICO WAREHOUSE IN LONDON including clearence excluding taxes)

WE ARE OPEN SEVEN DAYS A WEEK, CALL US NOW AND BRING YOUR GOODS.

உடன் தொடர்பு கொள்ளுங்கள்

020 8888 8787

Fax: 020 8889 5445 email: tricont@btclick.com

WEEKLY SAILING TO COLOMBO , YOUR GOODS ARRIVE IN COLOMBO WITHIN 17DAYS,

1ST T/CHEST £20.00 AND SECOND T/CHEST £15.00

SPECIAL RATES TO CANADA, AUSTRALIA AND SOUTH INDIA CALL US NOW FOR A PROFFEESIONAL, RELIABLE AND EFFICENT SERVICE.

குறைந்த செலவில் நிறைந்த சேவை

Trico International Shipping Ltd.

Unit 4, Bittern Place, Coburg Road, Wood Green London N22 6TP

# சினிமா



# நடிகையின் கல்யாணம்

ஒரு நடிகையை ரசிகர்கள் கேட்கும் கேள்வி "உங்கள் திருமணம் எப்போது?" இந்தக் கேள்விக்கு நடிகை பதில் ஸஸ்பென்ஸ்! ஒரு மர்மமான ஹிட்லர் மீசைக்காரர் எப்போதும் குறிப்பிட்ட நட்சத்திரத்தின் ஷீட்டிங்கில் காணப்படுகிறார். அவர் யார்? நடிகையுடனே காரில் போவார். வருவார். படப்பிடிப்பின் போதும் உட்கார்ந்து கொண்டிருப்பார்.

அவர் நடிகரின் பி.ஏ.வா? மானேஜரா? முறைப் பையனா? காதலனா? கடன்காரனா...? என்று எல்லா ரசிகர்களும் உற்சாகமாக ஊகித்துக் கொண்டிருக்க நட்சத்திரம் சந்தர்ப்பம் தருவார். திருமணத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அயல்நாட்டு புருஷன் அனேகமாக பார்க்க லட்சணமாக இருப்பான். லட்சணம் இருக்கோ இல்லையோ, கோட் சூட் நிச்சயம் உண்டு. கல்யாணம் என்றைக்கு என்பது ரசிக மக்களின் அடுத்த ஆர்வம்... அதை ஒரு சஸ்பென்ஸாக்கி, இழுப்பார் நடிகை. பெற்றோரின் எதிர்ப்பு இருப்பது போலவும், சம்மதத்துக்காகப் போராடுவது போலவும் சில அயிட்டங்களை வெளியிடச் செய்வார்கள்.

ரசிகர்களுக்கு திடீரென்று ஆறுமாசம் கழித்து நீ கல்யாணம் பண்ணிக் கொண்டாலென்ன, நாசமாய்ப் போனால் என்ன என்று அலுப்பு ஏற்படும் சமயம். நடிகை தடாலென்று ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலில் 'திருமண வரவேற்பு' என்ற செய்தியைப் போட்டு உடைப்பார். இப்போது ரசிகர்களுடைய மண்டையை அடுத்தாற்போல் குடையும் கேள்வி. 'திருமணத்துக்குப் பின் நடிகை நடிப்பாரா?' நடிகருக்கு இந்தக் கேள்வி போடுவது கிடையாது. நடிகர் என்பவர் எந்தப் புயலடித்தாலும், எத்தனை கல்யாணம் ஆனாலும், நடித்துக் கொண்டிருப்பார்.

துரதிருஷ்டம் என்னவென்றால் பெரும்பாலான நடிகைகளால் ஆறு மாசத்துக்கு மேல் திருமண வாழ்க்கை நடத்த முடிவதில்லை. அந்தப் புருஷன் அமெரிக்கத் தொழிலதிபராக இருந்தாலும் சரி, அமெரிக்க பிரசிடெண்ட் புஷ்ஷாக இருந்தாலும் சரி. பிடிக்காமல் போய் விடுகிறது. கணவன் மீது, அவன் தன்னை எப்படியெல்லாம் கொடுமைப்படுத்தினான் என்பதற்கு, விவாகரத்து வல்லுனர்களால் தொகுக்கப்பட்டு ரெடியாக இருக்கும் விவாகரத்து Guideகளிலிருந்து காரணங்களைப் பொறுக்கி அறிக்கையாக விடுவார்கள். நடிகை இப்போது மறுபடி தொழில் செய்ய ஸ்டுடியோ வரத் தொடங்குகிறார்.

சே! என்னே ரசிகர்களின் தயாரிப்பாளர்களின், டைரக்டர்களின் ரசனை மாறுதல். ஆறு மாசத்துக்கு முன்னால் கனவுக்கன்னியாக, கவர்ச்சிப் பழமாக இருந்த நடிகையை அக்கா ரோலிலும் பாட்டி ரோலிலும் ஈவிரக்கமில்லாமல் தள்ளி விடுகிறார்கள்.

சின்னத் திரை இரு கை விரித்து (இருகை என்ன இரு நூறு கை) வந்தாரை வாழ்விக்கத் தொடங்குகிறது. 'நான் இப்போது சின்னத்திரையின் ராணியாக்கும்' என்பது போல செயற்கையான மதர்ப்புடன் நடிகை கொஞ்ச காலம் தள்ளுகிறார். பிறகு சின்னத் திரையிலும் மெதுவாக ஆயா வேஷம் அவரை நோக்கி வருகிறது. இப்போது ரசிகர்கள் - மகா மறதிப் பேர்வழிகள் - 'இதை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கிறதே!' என்கிறார்கள்.

பின்னணியில் தான் இருந்து கொண்டு கவர்ச்சி விடுதி நடத்தத் தொடங்கி விடுவார். கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்குமா போலீஸ். விபசார வழக்கில் நடிகையை புக் செய்வார்கள். அதை சுவாரசியமான செய்தியாகப் பத்திரிகைக்காரர்கள் பிரசுரிப்பார்கள். தோல்வியை துக்கத்தை மறக்கக் குடித்துக் குடித்து ஊதிவிட்டதாக அவரின் காரியதரிசி கிசுகிசுக்கக் கூடும். அதற்குள் அழகி அபசாராவின் சொந்தப் பெண்ணோ, வளர்ப்புப் பெண்ணோ திரையில் புகுந்து இரண்டொரு படத்தில் தலை காட்டும்.... அவ்வளவுதான் - ரசிகர்கள் அபசாராவின் மகளைப் பற்றி அறிய ஆவலுடன் அபசாராவின் பெண் விபசாரா எப்படி நடிக்கிறாள், அம்மாவின் அளவு பெயரெடுப்பாளா என்று ஆவலாக இருப்பார்கள்.

ஸெட்டில் ஒரு ஆயாக் கிழவி அரைத் தூக்கத்தில் நாற்காலியில் சரிந்து கிடப்பாள். அவள்தான் மாஜிப் பேரழகி - அபசாரா. தற்கால விபசாராவின் தாயார். டயாபெடிக் வந்து சதையெல்லாம் கரைந்து எலும்பு ப்ளஸ் தோல் மட்டும். "பொண்ணு கெவுனிக்கிறதே இல்லே. அன்னாடம் சாப்பாட்டுக்கே கஷ்டம் நைனா. ஸெட்டுக்கு வந்தால் துன்ன ஏதாவது கிடைக்கும்னுதான் வர்ரேன். டைரக்டரையும் கண்டுகினு போலாம்னு குந்தியிருக்கேன்! அழகியைப் பார்த்தவர்கள் அவசரமாக வெளியேறுகிறார்கள்.

நீதி : பல சினிமா நடிகைகளுக்கு விவாகம் ஒரு சாபக்கேடு.

*- பாக்கியம் ராமசாமி*



விமர்சனம்

# கனாக் கண்டேன்

கோடை வந்தால் போதும், வரிசையில் காத்திருக்கிற காலிக்குடங்கள் சீனப் பெருஞ்சுவரை சின்னதாக்கி விடும். இதுதான் இன்றைய சிங்கார சென்னையின் நிலைமை. இதற்கு ஒரே வழி கடல் நீரை குடி நீராக்குவது தான். நாக்கு வறண்டுபோன சென்னை வாசிகளுக்கு, இந்த கற்பனையே குளிர்பானம் அடித்த குளிர்ச்சியை தரும். கனா கண்டேன் மூலம் அந்த குளிர்ச்சியை கொடுத்திருக்கிறார் டைரக்டர் கே.வி.ஆனந்த்.

கடல்நீரை குடிநீராக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஆராய்ச்சி மாணவர் ஸ்ரீகாந்த். கல்லூரி அங்கீகரிக்கிறது இவரின் ஆராய்ச்சியை. ஆனால் அரசாங்கம் நம்ப வேண்டுமே? வங்கிகளும் கைவிரித்து விட்ட நிலையில் பிரித்திவிராஜை நம்புகிறார் ஸ்ரீகாந்த். அவரோ கடனையும் கொடுத்து கழுத்தில் கத்தியையும் வைக்கிறார்.

ஸ்ரீகாந்த்தும் அவரின் காதல் மனைவி கோபிகாவும், பிரித்திவியிடம் மாட்டிக் கொண்டு படுகிற அவஸ்தைதான் விறுவிறுப்பான திரைக்கதை. அதில் கடல்நீர் என்பது அளவான உப்பு. ருசிக்கு கேட்க வேண்டுமா என்ன? அனுபவம் வாய்ந்த இயக்குனர்களையே அதிசயப்பட வைத்திருக்கிறார் கே.வி.ஆனந்த்.

சதா நேரமும் ஆராய்ச்சியில் மூழ்குகிற ஸ்ரீகாந்த்தை பார்த்து நீ ஆம்பிளையா என்கிறார் கோபிகா. போதாதா? பாய்ந்து சீறும் ஸ்ரீ, கோபிகாவை இன்ச் பை இன்ச்சாக ஆராய்கிறார். ஒட்டிக் கொள்கிற இருவரும் தாலி கட்டாமலே தம்பதி ஆகிறார்கள்.

முதல் பாதியின் முதல் காண்டம் இது என்றால் அடுத்து வருவதெல்லாம் யுத்த காண்டம். பிரித்திவிராஜின் சிரித்துக் கொண்டே கழுத்தறுக்கும் தந்திரம் புரியாமல் பொங்கி வெடிக்கிறார் ஸ்ரீகாந்த். பிறகு புரிந்து கொண்டு அவர் பாணியிலேயே போய் பிரித்திவியை துவம்சம் செய்கிறார்.

ஆராய்ச்சி மாணவர் வேடத்தில் அட்சர சுத்தமாக பொருந்தியிருக்கிறார் ஸ்ரீகாந்த். எளிதில் உணர்ச்சி வசப்படுகிற கேரக்டர். ஆராய்ச்சி குறிப்பை அரசு அலுவலகத்தில் கொடுத்துவிட்டு வெளியே வருதற்குள், அங்குள்ள டீக்கடையில் வடை மடித்து தருகிறார்கள் அதே காகிதத்தில். கோபத்தையும் ஆத்திரத்தையும் அடக்கிக் கொண்டு, முன்னேறி வந்தால் அடுத்த சில ரீல்களிலேயே கந்து வட்டி கொடுமை. இப்படி காதல், சோகம், கோபம், தந்திரம் என்று சகல ஏரியாக்களிலும் பிரமாதப் படுத்தியிருக்கிறார் ஸ்ரீகாந்த்.

குறிப்பாக அம்மா இறந்தவுடன் வாயில் டவலை திணித்துக் கொண்டு விம்முவது. கடல் நீரை குடிநீராக்கும் புராஜக்ட் சக்ஸஸ் ஆகி, முதல் சொட்டு நீர் விழுவதை ஆவலோடு ரசித்து, ருசிப்பது! வேறெந்த படத்திலும் இந்தனை தாராளம் காட்டியிருக்கிறாரா கோபிகா? ஆச்சர்யம்தான்! ஸ்ரீகாந்த்தை தவிக்க விட்டு விட்டு அம்மா வீட்டுக்கு போய் பணத்தோடு திரும்பி வந்து அதை பிரித்திவியின் முன் கொட்டி விட்டு வருவதும், கந்து வட்டி கொடுமைக்கு பயந்து அபார்ஷன் பண்ணிக் கொள்வதும் பரிதாபம்!

அர்ச்சனா, இட் ஹார்ட்ஸ் என்று சதா சர்வ நேரமும் சிரித்துக் கொண்டே டென்ஷனை தருகிற வில்லன் பிரித்திவிராஜ் தமிழுக்கு மட்டும் புது வரவல்ல, இது போன்ற கேரக்டருக்கே புது வரவு. இடைவேளைக்கு முன்பு வரை இந்த பூனையும் ரத்தம் குடிக்குமா என்றிருக்கிறார்.

நீண்டநாள் கழித்து வயிற்றுக்குள் சரவெடியை கொளுத்தி போட்டிருக்கிறார் விவேக். சில இரட்டை அர்த்த வசனங்கள்தான் உவ்வேக்

பாடல்களில் மூளை திருகும்... முதலிடத்தில்! படமாக்கப்பட்ட விதமும் இளமை. இனிமை. புதுமை. "வீ" சேனலை பின் பற்றியிருக்கும் சின்ன சின்ன சிகரங்கள் காட்டி... இளசுகளின் உள்ளங்கை ஐஸ் கட்டி! வசனம் பிரபல எழுத்தாளர்களான சுபா. அண்ணா எல்லா தண்ணியையும் உறிஞ்சிடுங்கண்ணா.. அப்பதான் கடல் பொங்காது என்று கண்களில் சோகத்தை தேக்கி வைத்திருக்கும் அந்த குழந்தை சொல்லும் போது நம் கண்களில் கடல் பொங்குகிறது.

ஒளிப்பதிவாளர்களில் குறிப்பிட தகுந்தவர் கே.வி.ஆனந்த். இனி... டைரக்டர்கள் வரிசையிலும் அந்த பெயரை தட்டிக் கொள்வார்! கனாக்கண்டேன்- ரசிகர்களை தியேட்டருக்குள் வாரிக் கொண்ட சுனாமி!

*- ஆர்.எஸ்.அந்தணன்*


## TRAVEL - SHIPPING & AIR FREIGHT

**Agents For**

SRILANKAN AIRLINES - From £ 450 + Taxes (Extensions to Far East & India available)
From £ 470 + Taxes 1 Apr - 30 Jun 05 (Extensions to Far East & India available)
KUWAIT AIRWAYS - From £ 340 + Taxes Valid till 31 May 05
QATAR AIRWAYS - From £ 370 + Taxes Valid till 20 Mar 05
ETHIAD AIRWAYS - From £ 330 + Taxes Valid till 17 Mar & 01 Apr - 30 Jun 05

SKYWARDS - CASH PLUS PROMOTION
Colombo Return £ 250 + Taxes + 10,000 Skyward Miles
Travel period 15 Apr - 30 Jun 05 CALL NOW!!

SPECIAL OFFERS ON SRILANKAN AIRLINES
(For stop over in Colombo please ask for details)
Madras/ Trichi/ Trivandrum/ Kochi/ Bangalore/ Mumbai/ Delhi/ Karachi
From £ 360 + Taxes Valid till 10 & 24 - 30 Mar 05
Bangkok From £ 410 + Taxes Valid till 10 & 24 - 30 Mar 05

IATA

GLEN CARRIERS LTD.
Tel: 0208 740 8379, 0208 749 0595, 0208 743 7353 Fax: 0208 740 4229
14 Allied Way, Off Warple Way, Acton, London W3 0RQ

ATOL 4395

# LinkAIR
Travels Limited

IATA

Fly SriLankan Airlines For £250

Skywards

Terms & Conditions Apply - Economy Class (10,000 Skywards Miles) - Travel period from 15 April - 30 June 2005

Any Time Any Where!
You can get there with **LINKAIR**
We can get you the BEST FARE
The others won't compare
Make sure you book with **LINKAIR**

Our phone lines are open from 7am to 11pm, 7 days a week

**020 8665 0206**

Fax: 020 8689 2576

LinkAir Travel Ltd, 361 London Road Croydon CR0 3PB

Main agent for SriLankan Airlines, QATAR AIRWAYS القطرية

email: sales@linkair.co.uk
web: www.linkair.co.uk



# KRISHJON SOCIAL CLUB
WHITE HOUSE, SOUTH END ROAD, EAST HAM E6 2AA

**Hall Hire for Wedding Birthday & All Functions**

300 பேர் அமரக்கூடிய மண்டபம் வாடகைக்கு உண்டு

**Bar Facilities Available**

கிருஷ்ஜோன் சோஷல் கிளப்



☎ 020 8470 9595
📱 07956 555 101
krishjon967@hotmail.com



# GLOBAL Estates
Making your way into property.......



SEELY ROAD £270,000 (F/H)

.Three bedroom end of terrace house .GCH
.Mordern fitted kitchen / dining room .Double glazing
.Spacious sitting room .Close to Tooting BR / tube (Northern Line)




PLUMSTEAD HIGH STREET ~~£89,950 (L/H)~~ £84,950

Retail Outlet - Off Licence
Sales £9,000 PW
Located on a Busy Road

24 Yrs Lease Remaining
Rent £15,000 PA

## COMMERCIAL PROPERTIES

- Chemsford, Sales £11,000 pw, £470,000 (F/H)
- Essex, Sales £10,000, £150,000 (L/H)
- Luton, Sales £5500 pw, £315,000 (F/H)
- Luton, Sales £6500 pw, £320,000 (F/H)
- Upminister, Sales £10,000 pw, £125,000 (L/H)
- Eastborne, Sales £17,000 pw, £170,000 (L/H)
- Nottingham, Sales £7000 pw, £75,000 (L/H)

*Busines loan can be arranged upto 100% (Subject to Status)*

## For Sale

1. Sycamore Garden, CR4 - One Bed Room House £159,950
2. Horgath Cresent, SW19 - Two Bedroom House £217,950
3. Graham Avenue, CR4 - Two Bedroom Maisonet £168,950
4. Ascot Road, SW17 - Three Bedroom House £190,000

We are leading independent estate agent, successfully selling and letting properties in South West London

If you are thinking of selling or letting in the near future and require a free up to date no obligation value of your property please call...

239 Mitcham Road
Tooting,London
SW17 9JG

Tel: 02086825100
Fax: 02086825110
www.global-estate-agents.co.uk





உ

# ஓம் நாகபூசணி அம்பாள் துணை

திருவருள்மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

முதலாமாண்டு தேர்த்திருவிழா விழா விஞ்ஞாபனம்

10-07-2005 ஞாயிற்றுக்கிழமை

61-65 Church Lane Edmonton, London N9 9PZ

Tel: 020 8884 3333

காலம் 10-07-2005 ஞாயிற்றுக்கிழமை

காலை 10 மணி முதல் மதியம் 1மணி வரை

அம்பிகை அடியார்களே!

வட இலண்டன் என்பீல்ட் பதியில் அருள் பாலிக்கும் ஆதிபராசக்தியான என்பீல்ட் நாகபூசணி அம்பாளின் திருவருள் துணையாலும் அடியவர்களின் பேருதவியாலும் தாயகத்திலிருந்து உருவாக்கப்பட்டு தருவிக்கப்பட்ட சித்திரத் தேரில் எதிர்வரும் 10-07-2005 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணி வரை வீதிவலம் வரவுள்ளதால் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பாளை தரிசித்து அருள் பெறுக.

தேர்த்திருவிழாவன்று சேரும் நிதி அனைத்தும் நவம் அறிவுக்கூடத்திற்கு அனுப்பி வைக்கப்படும்

தாயக தவில்நாதசுர கலைஞர்களான திரு கேதிஸ்வரன் தட்சணாமூர்த்தியின் புதல்வன் உதயசங்கர் ஆகியோரின் தவில் நாதசுர கச்சேரியும் பாரம்பரிய கலைகளான கோலாட்டம், கும்மி, கரகம், காவடி என்பனவும் நடைபெறும்.

## தேர்த்திருவிழா உபயம் பொதுமக்கள்

அன்னதான உபயம் Ruby's Catering Services

தாகசாந்தி உபயம் NIRU ஸ்தாபனம்

தேர் அர்ச்சனைப் பொருட்களை ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## என்பீல்ட் நாக பூசணி அம்பாள் ஆலயம் தேர் திருவிழா

வட இலண்டன் என்பீல்ட் பதியில் அருளாட்சி செய்யும் அன்னை நாகபூசணி அம்பாளின் திருவருளால் முதன் முதலாக இவ்வருடம் 27-06-05 திங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மகோற்ஷவம் நடைபெறுகிறது. எதிர்வரும் 10-07-05 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 11-07-05 திங்கட்கிழமை விநாயகர், வள்ளிதேவ சேன சமேத முருகப்பெருமான் ஸ்ரீதேவி பூமிதேவி சமேதராய் நாராயணன் சண்டிகேசுவரி சமேதராக அன்னை நாகபூசணி அம்பாள் பஞ்சமூர்த்தியாக தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது. என்பீல்ட் 61-65 Church Lane வீதியில் 2003ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 7ம் திகதி கும்பாபிஷேகம் நடைபெற்று என்பீல்ட் நாகபூசணி அம்பாளுக்கு 6 காலப் பூசைகள் நடைபெற்று வருகின்றது.

அபிஷேகம் ஆரம்பம் காலை 5.30 மணி

வசந்த மண்டபூசை காலை 8.30 மணி

அம்பாள் தேரில் ஆரோகரளித்தல் காலை 10.00 மணி

**அனைவரும் வருக அன்னையின் அருள் பெறுக!**

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
www.ambaal.org

இந்து தமிழ் கலாசார சங்கம்
(என்பீல்ட்)